வாரப் பதிப்பு விலை சதம் 25
தலைமை தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்




புதிய மேலுறைகளுடன் இலங்கை முழுவதிலும் விற்பனையாகிறது

புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 ஆவணி திங்கள் 28-ம் நாள் (13—9—1966) செவ்வாய்க்கிழமை ஐ:அவ் 27 | இதழ் 15

# வட பகுதியில் குழாய்க் கிணறுகள்

## தண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்க ஏற்பாடு

நன்னீர் இன்றி வாடும் வடபகுதி மக்களின் துயர்தீர்க்க இஸ்ரவேல் நாட்டு நிபுணர்கள் முன்வந்திருக்கிறார்கள். புத்தளம் பகுதியில் ஆராய்ச்சிகள் நடத்தி நன்னீர் கண்டுபிடித்து குழாய் நீர்க் கிணறுகளைத் தோண்டி வெற்றி கண்ட இவர்கள் விரைவில் வடபகுதி செல்லவிருக்கிறார்கள். வடக்கே செல்லும் இவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் பரீட்சை நடாத்துவார்கள். முயற்சி வெற்றிபெறின் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் குழாய் நீர்க் கிணறுகள் தோண்டுவதற்கு காணி அமைச்சு நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிகிறது.

புத்தளம் மாவட்டத்தில் இஸ்ரவேல் நிபுணர்கள் நடாத்திய குழாய் நீர்க்கிணறு தோண்டும் முயற்சி வெற்றி பெற்றிருப்பதைத் தொடர்ந்து இப்பரீட்சை வடபகுதியிலும் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை உள்ளூராட்சி அமைச்சர் எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணக்குடாநாட்டு மக்களின் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு கடந்த மாதம் உள்ளூராட்சி அமைச்சர் மூன்று திட்டங்களைச் சமர்ப்பித்திருந்தார். அதைத்தொடர்ந்து வடபகுதிசென்ற இராசாங்க அமைச்சரை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தீவுப்பகுதிகளுக்கு அழைத்துச்சென்று தண்ணீர்ப் பிரச்சினையைஎடுத்து விளக்கியிருந்தார். கொழும்பு திரும்பியஇராசாங்க அமைச்சர் இப்பிரச்சினையையிட்டு உள்ளூராட்சி அமைச்சருடனும் காணி அமைச்சருடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தினார் என்றும் இப்பேச்சு வார்த்தைகளின் போது உள்ளூராட்சி அமைச்சரின் மூன்றம் சத்திட்டமும் ஆராயப்பட்டதென்றும் அறியப்படுகிறது. முடிவில் உள்ளூராட்சி அமைச்சரின் திட்டங்களில் ஒன்றான குழாய் நீர்த்திட்ட முறையைப் பரீட்சித்துப் பார்ப்பதென்றும், அதற்கு இஸ்ரவேல் நிபுணர்களின் உதவியை நாடுவதென்றும் முடிவாகியதாகவும் தெரிகிறது.

இத்திட்டத்தின் பிரகாரமே இஸ்ரவேல் நிபுணர்கள் வடபகுதி போகவிருக்கின்றனர். புத்தளத்தில் 300 அடி ஆழத்தில் தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இத்தண்ணீர் உப உணவுப்பொருட்கள் உற்பத்திக்காகப்பயன்படுத்தப்படுமென்றும் கூறப்படுகிறது. வடபகுதியிலும் இந்தளவு ஆழத்தில் நன்னீர் தாராளமாகக் கிடைக்கும் என்று இவர்கள் நம்புகிறார்களாம். இத்திட்டம் வெற்றிபெறின் வடபகுதி விவசாயத்திலும் குறிப்பிடக்கூடிய முன்னேற்றத்தை அடையும்.

# "பேதங்களை மறப்போம்"

## எதிர்மன்னசிங்கத்துக்கு பட்டிருப்பு எம். பி. அஞ்சலி

"திரு. எதிர்மன்னசிங்கம் அவர்கள் மறைவுற்றது நான் மிகவும் ஆழ்ந்த துக்கத்தோடு, சில வார்த்தைகள் கூற உங்கள்முன் நிற்கின்றேன். திரு. எதிர்மன்னசிங்கம் சென்ற 18 ஆண்டுகளாக இலங்கை அரசியலில் பொதுவாகவும், கிழக்கிலங்கை அரசியல் வானில் சிறப்பாகவும் ஓர் முக்கிய இடம் பெற்றிருந்தார். நானும் அவரும் ஏறக்குறைய 18 ஆண்டுகளாக, அரசியலில் ஒருவரோடு ஒருவர் போட்டியில் ஈடுபட்டிருந்தோம். இப் போட்டி மிகவும் கடுமையானது மாத்திரமன்றி பட்டிருப்புத் தொகுதியை இரு கூறுகப் பிரித்து, ஒரு சுழல் காற்றை வீசிக் கொண்டிருந்தது. இவ்வாறு பட்டிருப்புத் தொகுதி முன்னாள் பா. உ. வும், எருவில் கி. ச. தலைவருமான திரு. எஸ். யு. எதிர்மன்னசிங்கத்தின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்குமுகமாக இடுகாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு. சி. மூ. இராசமாணிக்கம் பா. உ. குறிப்பிட்டார்.

திரு. இராசமாணிக்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"ஆறு பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்ட நாங்கள், வெற்றிகளையும் தோல்விகளையும் கண்டோம். இரு தேர்தல் வழக்குகள் கூட எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் அரசியலில் போட்டியிட்ட நாம் தனிப்பட்ட வகையில் எப்பேதமும் உள்ளவர்களாக இருக்கவில்லை. இருமருங்கிலும் நின்ற இனபந்துக்கள் சினேகிதர்கள், அனுதாபிகள் ஆகிய உங்களுக்கு நாங்கள் இருவரும் தீராத தொல்லைகளையும் இக்கட்டுகளையும் இடைஞ்சல்களையும் ஏற்படுத்தினோம். ஆனால் அதற்காக மன்னிப்புக்கோர அவர் இன்று இல்லை! நானே அவர் சார்பிலும் உங்களிடம் மன்னிப்பு கோருகிறேன். அவர் இன்று உயிருடன் இருந்தால், நாங்கள் இருவரும் ஒரு மேடையில் மன்னிப்பு கோரியிருப்போம்.

"இப்படி நான் ஏன் கூறுகிறேன் என்று நீங்கள் எண்ணக்கூடும். சென்ற ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் இருவரும் எருவில்பகுதி கிராமசபையில் அங்கத்தவர்கள் ஆனோம். அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன்பின் நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் நேரில் சந்தித்து, உரையாடவும் ஒருவரையொருவர் அறியவும், சந்தர்ப்பம் ஏற்பட்டது. நான் இக்கிராமசபைத் தலைவராக இருந்த காலத்தில் பூர்த்தியாக்கப்பட்ட மின்சார விநியோகத் திட்டம் அவர் தலைவரான பின்னரே திறந்து வைக்கப்பட நேர்ந்தது. நானே அதைத் திறந்து வைக்கவேண்டுமென அவர் விரும்பினார்.

"சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர் மரணித்தது உங்களையும் என்னையும் ஆழ்ந்த துக்கத்தில் வைத்திருக்கிறது. நாங்கள் இருவரும் அரசியலினால் உங்களைப் பிரித்த பிரிவு இனி நீடித்திருக்கவேண்டியதில்லையென்பது எனது விருப்பம். அவரும் நானும் சென்ற ஒன்றரை ஆண்டுகளாக எவ்வாறு ஒன்று சேர்ந்து, எமது பகுதிக்குச் செயலாற்ற ஆரம்பித்தோமோ அதை நிறைவேற்ற ஒத்துழைப்பது உங்கள் கடமையும் எனது கடமையுமாகும். அவர் என்னை அரசியலில் எதிர்த்தபோதிலும் எனது சுற்றத்தாரும் கூட என்பதையும் கூறி வைக்க விரும்புகிறேன். அவரின் மனைவிக்கும், சகோதரர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபம்! அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்

# உரிய காலத்தில் பரிசீலனை செய்யப்படும்

## 'திரு'வுக்கு டட்லி கடிதம்

வரவு—செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது இராமநாதன் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கிய பத்து ரூபா மானியம் எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று நிர்மானிக்கும் விடயத்திற்கு தாக்கம் ஏற்படுத்த மாட்டாது என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்திற்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா எழுதியுள்ள கடிதம் ஒன்றில் உறுதி கூறியிருக்கிறார்.

இராமநாதன் பல்கலைக் கழகத்திற்கு சில ஆண்டுகளாக ஒதுக்கிவந்த ரூபா பத்து அடையாள மானியம் இம்முறை நிறுத்தப்பட்டிருந்தது. இதனைச் சிலர் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து வரவு—செலவுத் திட்டகுழுநிலை விவாதத்தின் போது அது மீண்டும் ஒதுக்கப்பட்டது. இதனை ஒரு தமிழ்த் தினசரி இராமநாதன் இந்துப் பல்கலைக் கழகத்திற்கு அடையாள மானியம் ஒதுக்கப்பட்டதாக செய்தியைத் திரித்து வெளியிட்டது. இதுபற்றி உள்ளூராட்சி அமைச்சர் பிரதமரிடம் விளக்கம் கேட்டிருந்தபொழுது அவர் பின்வரும் கடிதத்தை திரு. திருச்செல்வம் அவர்களுக்கு எழுதியுள்ளார்.

'இராமநாதன் பல்கலைக் கழகத்திற்கான அடையாள மானியம் ஒதுக்கப்பட்ட விடயத்தில் தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருப்பதாக அஞ்சுகிறேன். இதன் உண்மையை இங்கு விளக்க விரும்புகிறேன்.

'இராமநாதன்பல்கலைக்கழகத்திற்கான மானியம் முன்னைய அரசாங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனை நாமும் பின்பற்றிவந்தோம். இம்முறை அதுவிடப்பட்டிருந்தது. அதனைச் சுட்டிக்காட்டியபொழுது வரவு-செலவுக் குழுநிலை விவாதத்தில் கல்விஅமைச்சரின் சம்மதத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

தமிழ்பேசும் மக்களுக்குஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் விடயத்திற்கு இடையில் சேர்க்கப்பட்ட இம்மானியம் எத்தகைய தடையையோ செல்வாக்கையோ ஏற்படுத்தமாட்டாது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

அடுத்த இதழ் வெளியூரில் 20-9-66 காலை தலை நகரில் 19-9-66 மாலை கிடைக்கும்

## ஜேக் டெம்ப்ஜே

—நல்லை அமிழ்தன்—

**1910-ம்** ஆண்டு ஜனவரி 4-ம் தேதி அமெரிக்காவில் பிரசித்தி பெற்ற குத்துச் சண்டை நடைபெறுகின்றது. ஜெப்ரீஸ்-ஜேக் ஜான்ஸன் என்ற இருவர் போட்டியிடுகின்றனர். இச் சண்டையில் எவன் வெற்றி பெறுகிருனே அவனே உலகில் மாபெரும் குத்துச் சண்டை வீரனுக விளங்குவான். குத்துச் சண்டையைப் பார்த்து நின்றவர்களில் பதினைந்து வயது இளைஞனும் இருந்தான். 'எவன் இன்று வெல்கின்ருனே அவனை நான் ஒரு நாள் ஜெயிப்பேன்' என்று மனதுக்குள்ளே சங்கற்பம் செய்துகொண்டான்.

அன்று முதற் தான் குத்துச்சண்டை பழகும் நோக்கத்துடன் ஒரு பக்கத்தில் ஜிம் ஜெப்ரீஸ் படத்தையும் மறு பக்கத்தில் ஜேக் ஜான்ஸன் படத்தையும் வரைந்து அதில் பாய்ந்து பாய்ந்து குத்திப் பழகினுன். ஜேக் ஜான்ஸன் அப்போட்டியில் ஜெயித்ததும் அதன் மீது முழு வேகத்துடன் பாய்ந்து தினந்தோறும் குத்திப் பழகினுன். இது பைத்தியக்காரத்தனமென நீங்கள் நினைத்தாலும் அவ் விளைஞன் 9 ஆண்டுகளுக்குப் பின் ஜேக் ஜான்ஸனை குத்துச் சண்டையில் வென்ருன். அவன்தான் ஜேக் டெம்ப்ஜே.




## சுப்பிரமணிய பாரதியார்

— சி. சண்முகலிங்கம் —

ஒவ்வொரு நாடும் பெறும் செல்வம் பலப்பல. அவைகள் பெறும் செல்வங்களில் சிறந்த செல்வம் விஞ்ஞானிகளை, மேதைகளை, கவிஞர்களை, கதாசிரியர்களைப் பெறுவதுதான். இச்செல்வம் எல்லா நாட்டுக்கும் கிடைத்துவிடாது. ஆனல் இப்படியான செல்வத்தை அனுபவித்து வரும் ஒரு சில நாடுகளுள் ஒன்ருகம் அண்டை நாடு பாரதமும் உள்ளது. இப்பாரதத்தில் தான் தோன்றினுர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். பாரதியார் வாழ்ந்தார். தமிழின் பெருமை வளர்ந்தது. அவர் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தார்; தமிழ் உலகம் சரியான பாதையில் தடம் புரளாமல் பயணம் செய்தது. அவர் நடமாடி வந்தார்; எளிமையின் பெருமை, சுதந்திரத்தின் பெருமை, வீரத்தின் பெருமை, தியாக உணர்வு, சமுதாயத்தின் உயர்வு எல்லாம் பொலிவுற்றுத் திகழ்ந்தது. அவர் மறைந்து விட்டார். இல்லை! பாரதத்தின் சுதந்திரத்துக்காகத் தன்னை அர்ப்பணம் செய்து விட்டார்.

சுப்பிரமணிய பாரதியார் தமிழகத்தில் எட்டயபுரமெனும் இடத்தில் சின்னச்சாமி என்பவருக்கு மகனுக அவதரித்தார். இவர் தோன்றிய காலத்தில் பாரத நாடு ஆங்கிலேயர்க்கு அடிமை நாடாக இருந்தது. பாரதமக்கள் ஆங்கிலேயர்களுக்கு அடிமைகளாக தம் சொந்த நாட்டில் வாழ்ந்ததைக் கண்ட பாரதியாருக்கு சுதந்திர உணர்ச்சி ஒளிப்பிழம்பாகத் தோன்றியது. பாரதியார் அடிமை வாழ்வை வெறுத்தார்; பாரதத்தாயின் அடிமை விலங்கை அறுத்தெறிய வீறு கொண்டெழுந்தார். அவரின் சுதந்திரதாகம், சுதந்திர வாழ்வைச் சக்தியின் கோலமாகக் காண வைத்தது. பாரதியாரின் உள்ளத்தில வீறு கொண்டெழுந்த சுதந்திர வேட்கை, கவிதைகளாக வடிவெடுத்தன. அக்கவிதைகள் பாரதியாரின் உணர்ச்சி வேகத்தையும், உரிமைக் குரலையும் புலப்படுத்தி நிற்கின்றன. சுதந்திர வாழ்வை ஆரமுது என்று புகழ்கின்ருர். அடிமை வாழ்வைகள் என்று இகழ்கின்ருர். ஆரமுதத்தை உண்ண ஆசை கொண்டவர்கள் இழிவான கள்ளைக் குடிப்பதற்கு விரும்ப மாட்டார்கள். ஆகவே மானத்தோடு வாழ விரும்பும் மனிதன், சுதந்திரத்தை தன்உயிரினும் மேலாகக் கருதுவான். ஊன் பொதிந்த உடல் அழிய நேர்ந்தாலும் அவன் அடிமை வாழ்வை வாழ உடன்படவே மாட்டான். எனவே,

'வீர சுதந்திரம் வேண்டி<br>நின்ருர் பின்<br>வேறொன்று கொள்<br>வாரோ?<br>ஆரமுது, உண்ணுதற்<br>காசை கொண்டார்<br>கள்ளில் அறிவை செலுத்<br>துவரோ?'

என்று பாரதியார் உரிமைக் குரலோடு எழும்புறெ கேள்வி எவ்வளவு பொருத்தமானதாகும். அவ்வுரிமைக் குரலிலே பாரதியாரின் சுதந்திரதாகத்தைக் கண்டு கொள்ள முடிகின்றதல்லவா?

## இறவாத பாரதி

**'கலையரசன்'**

மாங்குயில் கூவிடும் கானமெலாம்—தேன்<br>மணக்கும் மலர் தரு சோலையெலாம்—அவன்<br>திங்கனி செந்தமிழ் பாட்டிசைத்து—தென்றல்<br>தழுவியே நற்சுகம் தருவதைப்பார்.

பூமகள் தன்னிலே தேனெடுத்து—அதில்<br>புதுமை எனும் கவிப் பண்ணிணைத்து—அவன்<br>வேய்ந்திடும தீந்தமிழ் கீதங்களை—வண்டு<br>வேட்கையில் பாடிப் பறப்பதைப்பார்.

ஓடிவருகின்ற மானழகில்—தோகை<br>ஆடவருகின்ற மயிலழகில்—நீர்<br>பாடி வருகின்ற அருவிகளில் அவன்<br>பாடல் கமழ்ந்து சிரிப்பதைப் பார்.

தூங்கிடும் பிஞ்சு முகங்களிலே—அவன்<br>தூய்மை தவழ்ந்து சிரிப்பதைப்பார் இங்கு<br>ஏங்கிடும் ஏழைகள் உள்ளத்திலே—தமிழ்<br>ஏக்கம் புயலாய் வருவதைப் பார்.

துன்பத்தை எட்டி மிதிக்க வைத்தான்—வரும்<br>தொல்லையை எள்ளி நகைக்கவைத்தான்—<br>உனக்கு<br>இன்பத்தை அள்ளிக் கவிபடைத்தான் நெஞ்சில்<br>இறவாத பாரதி ஆகிவிட்டான்

## ஓடிப்போனவன்

…• நவசோதி •…

மலைநாட்டுப் பிரயாணத்தால் வசந்தனின் உள்ளம் ஓரளவு அமைதி கண்டது. அனைவரும் கொழும்பு திரும்பினர் மீண்டும் கல்லூரிக்குப் போனுன் வசந்தன்.

வசந்தனுடன் முன்போல அலகலப்பாகப் பேசத் தயங்கி மாணவர்கள் அனுதாபத்துடன். அவனைப் பார்த்தனர் அன்னையை இழந்த பின் முதன் முதலாக அவர்களைக் கண்ட வசந்தன் கலங்கினுன். அவனை அறியாமலே கண்ணீர்த்துளிகள் மேசையிலே பட்டு தெறித்தன.

ஆனல் நாட்கள் நகர்ந்தன—

மீண்டும் முன்போல மாணவர்களுடன் கலந்து கொண்டான். கல்லூரியின் ஆண்டு விழாவின் ஒரு அம்சமான பேச்சுப் போட்டியும் சமீபித்தது. இதற்கு முன் நடைபெற்ற போட்டிகளிலெல்லாம் பரிசைத் தட்டியிருந்த வசந்தனுக்கு இம்முறை உற்சாக மேற்படவில்லை. அதற்கேற்ற மனநிலையிலும் அவன் இல்லை. ஆனல் மாணவர்கள் உற்சாகமூட்டினர். மாலதியும் துணையாக நின்று தூண்டினுள். வேலுப்பிள்ளை வாத்தியார் கூட அவனின் போக்கை ஒரு முறை கண்டித்தார்.

அனைவரினதும் தூண்டுதலினுல் வசந்தனின் மனம் மாற்றப்பட்டது. இதனுல். 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்ற தலைப்பில் பேசுவதற்கான ஆயத்தத்தில் ஈடுபட்டான். முதலாம் இடத்தைப் பெறுபவரின் பேச்சு ஆண்டு விழாவிலும் இடம் பெற இருந்ததினுல் தன் குட்டிப்பிரசங்கத்தைத் திறமையாகத் தயாரித்தான் அவன்.

ஆண்டு விழாவில் அரங்கேற்ற 'தியாகச்சின்னம்' என்ற நாடகம் தயாரிக்கப்பட்டது— ஒரு காலை இழந்த தங்கைக்காக அண்ணன் செய்யும் தியாகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது நாடகம்.

அதில், அண்ணனின் பாகம் வசந்தனுக்குக் கொடுக்கப்பட்டது. நாடகத்தில் திறமையாக நடிப்பவர்களுக்குக் கூட ஒரு பரிசை வழங்கத் திர்மானித்திருந்தனர். இவற்றில் வசந்தன் உற்சாகமாக ஈடுபட்டாலும் இடையிடையே அவன் மனம் கலங்கும் சம்பவங்களும் இடம் பெற்றன. அன்ெருருநாள்—

வகுப்பு மாணவர்களின் விபரங்களைக் கேட்டுப் பதிந்து கொண்டிருந்தார் வேலுப்பிள்ளை வாத்தியார்.

ஒவ்வொரு மாணவர்களும் தத்தம் பெற்ருேரின் பெயர் தொழில் போன்ற தகவல்களை ஒருவரின் பின் ஒருவராய் எழுந்து தெரிவித்தனர். வசந்தனின் முறை வந்தது. அவனுல் என்ன கூறுவதென்றே தெரியவில்லை. இருந்த இடத்திலிருந்து எழுந்திருக்கக்கூட அவனுல் முடியவில்லை.

அமைதி நிலவுவதைக் கண்ட ஆசிரியரும் தலை நிமிர்ந்து வகுப்பைப் பார்த்தார். அங்கு— கலங்கிய கண்களுடன் காட்சியளித்தான் வசந்தன். வேலுப்பிள்ளை' வாத்தியாரும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு தன் பார்வையைத் திருப்பிக் கொண்டார்'

இப்படிப் பல நிகழ்ச்சிகளும், நாட்களும் உருண்டோடின.

சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு விழாவை நடத்துவதாக நிகழ்ச்சி நிரலும் அச்சடித்தாகிவிட்டது. அன்று வெள்ளிக்கிழமை—

இறுதிப் பேச்சுப் போட்டியில் பன்னிருவர் கலந்து கொண்டனர். அவர்கள், மாணவர்கள் அரசியலில் ஈடுபடவாமா, இன்றைய தமிழர் நிலை, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, முத்தமிழ், போன்ற பல தலைப்புகளிலும் பேசினுர்கள் வசந்தனும் தனது தலைப்பில் பேசினுன்.

பேச்சுப் போட்டியின் முடிவை 'முதலாம் பரிசுக்குரியவர் 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்பதைப் பற்றிப் பேசிய வசந்தன்...' என்று கூறி முடிப்பதற்கு முன்பே அடக்கமுடியா ஆனந்தத்தினுல் கைதட்ட ஆரம்பித்து விட்டாள் முன் வரிசையில் இருந்த மாலதி.

அடுத்த நாள், ஆண்டு விழாவின் பிரதம விருந்தினராக கல்வி மந்திரி வந்திருந்தா.

மந்திரிக்கு மாணவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட போது வசந்தனுக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மகாவலி கங்கையில் மூழ்கி மாள இருந்த மாணவனைக் காப்பாற்றிய சம்பவத்தைக் கல்லூரியின் தலைமை ஆசிரியர் புகழ்ந்துரைத்தார்,

முதற் பரிசினைப் பெற மேடைக்குக் கம்பிரமாக நடந்து வந்த வசந்தனுடன் கைகுலுக்கி விட்டு 'குட் போய்' என்று ஆங்கிலத்திலே கூறி வசந்தனின் முதுகைக் கல்வி மந்திரி தட்டிக் கொடுத்த போது சபையோரின் கைதட்டல் வானைப் பிளந்தது.

மண்டபம் நிறைந்து வழிந்த பலநூற்றுக் கணக்கான மக்களின் முன்னிலையில் வசந்தன் தனது குட்டிப் பிரசங்கத்தைப் பேசிய போது பத்திரிகைக்காரர்கள் ஒருவருடன் ஒருவர் மோதி முந்திக் கொண்டு படம் பிடித்தனர்.

விழவின் இறுதி நிகழ்ச்சியாக நாடகம் இடம் பெற்றது. திறமையான நடிகருக்கான புத்தகப் பரிசையும் பாராட்டுப் பத்திரத்தையும் வசந்தன் பெற்றுக் கொண்டான்.

விழாமுடிந்து வீடு திரும்பிய போது, படிப்பில் மட்டுமன்றி சகல துறைகளிலும் முதன்மையாக விளங்கும் வசந்தனைப் புகழ்ந்து பேசிக் கொள்ளாதவர்கள் இல்லையென்றே கூறிவிடலாம். வசந்தனைப் போல தங்களின் பிள்ளைகள் இல்லையே என்று ஆத்திரத்தையும் வழி நெடுக கொட்டிச் சென்றனர்.

வீடு திரும்பிய வசந்தன் தனது பரிசுகளையெல்லாம் தன் தாயின் படத்திற்கு முன்னுல் வைத்துக் கலங்கினுன். தன்னை இந்தப் பெருமையுடன் கண்டு களித்து உச்சிமீது முத்தமிடுவதற்கு அன்னை இல்லையே என்று ஏங்கினுன்.

விழா முடிந்து இரவாகியும் வீடு திரும்பாத விமலநாதனைத் தேடி அறைக்குள் நுழைந்தாள் மாலதி

,ஏனண்ணு ... எந்த நேரமும் அம்மான்ரை படத்துக்கு முன்னுலை போய் அழுது கொண்டு...' தன்னைச் சமாளித்துக் கொண்டே,' இல்லை தங்கச்சி... அது சரி, தம்பி இன்னும் வீட்டுக்கு வரவில்லையா?' என்று கதையை வேறு பக்கம் திருப்பினுன் வசந்தன்.

'ஓமண்ணு... அம்மா பேசிக் கொண்டுதான் இருக்கிறு. ஆளை இன்னும் காணவில்லை...'

'வா அண்ணு! நாங்க சாப்பிடுவம்'

,தம்பியும் வரட்டுமே மாலதி!'

விமலநாதனின் வருகையை எதிர்பார்த்து இருவரும் வாசற் பக்கம் விரைந்தவர்

மணி பத்து அடித்தது. ஆனுல்— விமலநாதனை இன்னும் காணவில்லை.




அன்புள்ள மருமக்களே,

வணக்கம். இம்மாதம் 11-ந் திகதி மகாகவி பாரதியார் தினமல்லவா? அதையொட்டி இம்முறை வளர்மதியில் அவரது நினைவுதினக் கட்டுரை இடம்பெற்றுள்ளது.

தற்போது நவசோதி எழுதிவரும் 'ஓடிப்போனவன்' தொடர்கதையை தவருமல் படித்து வருகிறீர்கள் தானே! கதை முடிவில், ஒருபோட்டி உங்களுக்காக காத்திருக்கிறது.

விரைவில் வேறு பல போட்டிகளையும் எதிர்பாருங்கள்.

அன்புள்ள,<br>வளர்மதி மாமா.




ஆர். கே. திருகோணசுந்தரம்,
புதுவட்டகொடை.

கே: நாடு கடத்தப்படவிருக்கும் இந்திய வம்சாவளியினர் 115000 பேர் தற்பொழுது எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி காணுமல் போய் விட்டதாக கூறுகிருர்களே இவர்கள் எல்லாம் எங்கு சென்று விட்டார்கள்?

ப: மலையகத்தின் ஆயுட்காலத் தலைவர் அவர்களை அந்தமானுக்கு கொண்டு போயிருக்கலாமென்று தொப்பித்தோட்டம் வட்டாரத்தில் செய்தி அடிபடுவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை.

கே: ஒருவனுக்கு புகழ் வளரும் போது பல துன்பச்சோதனையும் வளர்வதேன்?

ப: புகழில் மயங்கி மனிதத் தன்மை இழக்கும் மனிதத் தன்மையைத் தடுப்பதற்காக.

ஃ

ஆனந்த சுப்பிரமணியம்,
நீர்கொழும்பு.

கே: 1967-ம் வருடப் பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் காங்கிரஸ் தோற்றுப் போனல் திரு. காமராஜின் நிலை என்னவாகும்?

ப: அவரது அகில இந்தியத் தலைமை ஆட்டம் காணும். அதன்பின் வடநாட்டார் அவரை மதிக்கமாட்டார்கள்.

ஃ

மு. கருணநிதி,
ஏழாலை மேற்கு.

கே: என்னைப் பற்றி சிறிது கூறுங்கள் பார்ப்போம்?

ப: ஒரே தபால் அட்டையில் 2 டசன் கேள்விகளை அடுக்கும் அளவுக்குச் சிக்கனப் பேர்வழி நீங்கள்!

ஃ

ஏ. கார்த்திகேசு,
கொழும்பு - 10

கே: ஒரேநாளில் ஒரே முகூர்த்தத்தில் நான்கு நண்பர்களுக்குக் கலியாணம்! நால்வரும் எனக்கு மிகவும் வேண்டியவர்கள். யார் கல்யாணத்துக்குப் போகலாம்? எப்படி அதனைத் தெரிவு செய்வது?

ப: கர்ணுமிர்த டப்பாப் பாட்டு ரெக்கோர்டுகளை எந்தக் கலியாணத்தில் ஸ்பீக்கரில் கேட்கக் கூடியதாகப் போடுகிருர்களோ, அந்தக் கலியாணத்துக்குப் போங்கள்.

கே: குயுக்தியாரே, உங்கள் பதில்களில் துணிச்சல், துணிவு என்ற சொற்கள் அடிக்கடி அடிபடுகின்றனவே! நீங்கள் யாருக்குமே பயப்பட மாட்டீர்களா?

ப: ஊ ஹூம்! நான் யாரைக் கண்டும் பயப்பட மாட்டேன் திருமதி குயுக்தியாரைத் தவிர!

ஃ

எஸ். எஸ். பிரான்ஸிஸ்,
முகத்துவாரம்.

கே: நான் ஒரு காலத்தில் பணக்காரனுக இருந்தேன். இன்று கையில் காசின்றி கஷ்டப் படுகிறேன். என்னசெய்யலாம்?

ப: என்ன செய்யலாம்! என் கையிலேயும் காசில்லை கடன் கொடுப்பதற்கு!

ஃ

டபிள்யூ. காந்திமதிநாதன்,
கண்டி.

கே: புற்றீசல் போல் பத்திரிகைகள் புதிது புதிதாகக் கிளம்பிக் கொண்டிருக்கின்றனவே இதனுல் ஆபத்து ஏதுவும் ஏற்படுமா?

ப: ஜாக்கிரதை! தட்டித் தவறி தடுக்கி விழுந்தால் ஒரு புதினப் பத்திரிகை மீதுதான் விழ வேண்டி வரும்!

ஃ

டி. அப்புக்குட்டி,
ஜா-எல

கே: நான் எந்த ஒரு வேலையை தொடங்கினலும், ஆரம்பத்தில் இன்பமாயிருக்கிறது! பிறகு துன்பமாக மாறிவிடுகிறது. ஏன்?

ப: மனேதிடமில்லாமை தான் காரணம், வறுமை மற்ருெரு காரணமாகும்.

ஃ

மகேஸ்வரி,
கொழும்பு-3

கே: நான் ஒருவரைக் காதலித்தேன். பின்னர் அவரையே கலியாணம் செய்து கொண்டேன். காதலில இருந்த வேகத்தையும் சக்தியையும் கலியாணத்தில் காணமுடியவில்லையே! காரணம்?

ப: காதல் பெட்ரோல்-கலியாணம் தண்ணீர். பெட்ரோலிலுள்ள வேகமும் சக்தியும் தண்ணீரில் எப்படியிருக்க முடியும்?

ஃ

எஸ். பி.
வட்டுக்கோட்டை.

கே: உண்மையில் என்னை காதல் புரிந்த வீர வாலிபனை ஏமாற்றி விட்டேன். இதனுல் என் எதிர்கால வாழ்வு பாதிக்குமா?

ப: காதலனை ஏமாற்றினுலும், காதலை ஏமாற்ற முடியாது. விரைவில் காதலிடம் நீங்கள் ஏமாறப் போகிறீர்கள்.

ஃ

செல்வி. எஸ். பத்மா,
யாழ்ப்பாணம்.

கே: இனிக்கும் செய்தி ஏதாவதிருந்தால் சொல்கிறீர்களா?

ப: வருடம் ரூ. 34 இலட் நஷ்டம் ஏற்பட்டபோதிலும் கல்ஓயா சீனி உற்பத்தி நிறுத்தப்பட மாட்டாதாம்.

கே: என் கையெழுத்தைப் பார்த்து என்னைப் பற்றிச் சற்று கூறுவீர்களா?

ப: எதையும் ஒழுங்கு முறைப்படி செய்யக் கூடியவர். பணச் செலவைப் பொறுத்த வரையில் நீங்கள் ஊதாரியல்ல. உங்களிடம் அவசரப் புத்தி கிடையாது. கோபக்குறைவு. எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.

ஆர். பாலகிருஷ்ணன்.
மாத்தளை.

கே: தமிழகத்தின் அரசியல் வாதிக்கும் ஈழத்தின் அரசியல் வாதிக்குமுள்ள வித்தியாசமென்ன?

ப: ஈழத்தின் அரசியல் வாதியிடம் தந்திரம் அதிகம். தமிழக அரசியல் வாதிக்கு மக்கள் தொடர்பு அதிகம்.

ஃ

'செந்தூரன்'
கொச்சிக்கடை.

கே: மலையக மக்களுக்கு அரசாங்கம் கல்வியில் பாரபட்சம் காட்டுவதேன்?

ப: மலையகத் தலைவர்களின் அசட்டைதான் காரணம்.

கே: பொ. கட்சிக்குள் போர்க்களமாமே, உண்மையா?

ப: அப்படித்தான் செய்திகள் முறையிடுகின்றன.

ஃ

ஆ. ஆ. நடராஜா,
புன்னலைக் கட்டுவன் தெற்கு.

கே: 'சிறந்த தொண்டாற்றுவேன் என்ற நம்பிக்கையுடன் ஐ. நா. வுக்கு செல்கிறேன்' என்று திரு. பொன்னம்பலம் கூறியுள்ளார். இத் தொண்டு யாது?

ப: சிக்கலான உள்நாட்டுப் பிரச்சினைகளைச் சிறிதுகாலத்துக்கு மறந்து 'ஹாய்'யாக அமெரிக்காவில் இருப்பதும் சுகவாசிகளுக்கு ஒரு தொண்டு தான்.

ஆனந்த சுப்பிரமணியம்,
நீர்கொழும்பு.

கே: தற்போதுள்ள அரசியற் சூழ்நிலையில் திரு. பொன்னம்பலம் செய்ய வேண்டியதென்ன?

ப: தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அவர் ஓரளவு உதவி செய்யலாம். அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு வெளிநாடு சென்றுவிட்டாரே.

ஃ

கே. எம். ஹனிபா,
கின்னியா.

கே: படித்தவன் படிப்பற்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் அவன் நிலை எவ்வாறிருக்கும்?

ப: கணவனுக மட்டுமின்றி உபாத்தியாயராகவும் வீட்டில் கடமையாற்ற வேண்டியிருக்கும்.

ஃ

பாலச்சந்திரன்,
வியாபாரிமூலை.

கே: இந்துப் பல்கலைக்கழகத்திற்கு மானியம் ஒதுக்கப்பட்டது உண்மையா?

ப: உண்மைதான். இதற்கு முன்பு ஒதுக்கப்பட்டதைப் போல இம் முறையும் செய்யப்பட்டுளது. இது ஒரு வெறும் சம்பிரதாயமாகி விட்டது. அதில் முக்கியத்துவம் எதுவும் கிடையாது.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1188
கொழும்பு-12.

இந்த அடையாளத்தை யுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறர்.



பிளவு!

மட்டக்களப்பகள் நாட்டைப் பிளவு படுத்தி விடும். —ஆர். ஜி.

—நாய்க்கு எங்கு நோவேற்பட்டாலும், காலைக் காலைத் தூக்குவதுபோல ஆர். ஜிக்கு எதைப் பார்த்தாலும் 'பிளவாகவே' தெரிகிறது! பாவம்!

இனிப்பு
கசக்கிறது

சீனித் தொழிற்சாலையில் 34 இலட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.
—செய்தி.

—இனிக்கவேண்டிய சீனி கசக்கிறதே!

'மஞ்சளு'க்கு ஆபத்து

மஞ்சளபிரசுரங்களுக்குத் தடை விதிக்க கலாச்சார இலாகா ஆலோசனை.
—செய்தி.

—காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்என்பது தமிழ்ப் பழமொழி. ஆனுல் தேசிய அரசுக்கு காமாலைக்கண் இருக்காது என்று நம்பிக்கை தெரிவிக்கிருர் ஓர் ஆசிரியர்.

அழுதபிள்ளை......

நடப்பு வருடத்தில் சகல பிள்ளைகளுக்கும் பால் கிடைக்காது.
—செய்தி.

—அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும் போலும்!

பாம்பின் கால்......

சீனுவில் நடப்பது கலாசாரப் புரட்சியல்ல; ஒரு காவாலிச் சேட்டை.
—சோவியத் யூனியன்.

—பாம்பின் கால் பாம்பறியும்.

உழைப்பும் உரிமையும்

உழைப்புக்கு முக்கியத்துவமளிப்பவர்கள் வடமாகாண மக்கள்.
—ஜே. ஆர்.

—உழைப்பதுக்கு மட்டுமா? உரிமைக்கும் முக்கியத்துவம் அளிப்பவர்கள் அவர்கள்!



டிஸ்பிரின்
உங்களுக்கு
துரித
நம்பிக்கையான
நிவாரணமளிக்கும்

பிளக்கும் தலைவலி, பல்வலி, தடிமல், காய்ச்சல், உடல்வலி, மாதவிடாய் முதலியவற்ருல் அவஸ்தைப்படும்போது டிஸ்பிரினை பாவியுங்கள். டிஸ்பிரின் வேதனையைத் தணித்து உடன் நிவாரணமளிக்கும்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபார்சு செய்கிருர்கள்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். வில்லையை விழுங்கி விடலாம் அல்லது தண்ணீரில் கரைத்துக் குடிக்கலாம்.



றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

JWT RC 104

# சுதந்திரன்

SUTANTIRAN

1966 செப்டெம்பர் மாதம் 13-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 8411 த. பெ. 1188


# எப்படி அமுல் நடத்துவது?

"சிறிமா - சாத்திரி ஒப்பந்த அமுலுக்கான மசோதா விரைவில் பாராளுமன்றத்துக்கு வரவிருக்கிறது! நாடற்றவர்களின் இடாப்பு தயாராயிருக்கிறது! - இந்தியாவுக்குச் செல்லும் அகதிகளின் புனர் வாழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்ய காங்கிரஸ் தலைவர்கள் புதுடில்லிக்குப் பறக்கிறார்கள்! அகதிகளைக் குடியேற்றுவதற்காக அந்தமானில் தோட்டங்கள் திறக்கப்படும்!" இம்மாதிரிச் செய்திகள் அடிபடத் தொடங்கி விட்டதால் இன்று மலையகமெங்கும் ஒரு வித பீதி பரவியுள்ளது.

இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டு பல்லாண்டுகளாக இங்கேயே வசித்துவரும் இந்திய வம்சாவளி மக்களும் ஒரு கட்டத்தில் தங்களையும் நாடுகடத்தி விடுவார்களோ என்று அஞ்சும் நிலைமை உருவாகியுள்ளது.

சிங்களப் பிரதேசங்களில் வசிக்கும் இந்திய வம்சாவழி மக்களினதும், மலையகத் தமிழர்களினதும் நிலை இன்று நிலையற்றதாகவே இருக்கிறது. எதிர்காலம் என்னவாகுமோ என்ற பீதியுடன் தான் அவர்கள் வாழவேண்டியிருக்கிறது. 'எதுவித கட்டாயமுமின்றி, சொந்த சம்மதத்தின் மீது இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல முன்வருபவர்கள் மட்டுமே அனுப்பப்படுவார்கள். ஏனையோர் இங்கு கவலையின்றி வாழலாம்'' என்று கூறப்படும் செய்தியைப் பொதுவாக அவர்கள் நம்புவதில்லை.

அதற்குப் பல காரணங்களுண்டு. சிறிமா - சாத்திரி ஒப்பந்தத்தின் படி 525,000 நாடற்றவர்களென்போர் இந்தியாவுக்கு 15 ஆண்டுகளில் திருப்பி அனுப்பப்படுவர். ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்காகக் கட்டாய நாடுகடத்தல் கூடாதென்று தமிழரசுக் கட்சி வற்புறுத்திவந்துள்ளது. சொந்த விருப்பத்தின் மீது இந்தியாவுக்குச் செல்ல முன்வரும் இந்திய வம்சாவழியினரை திரும்பிச் செல்ல அனுமதிப்பதில் தனக்கு ஆட்சேபம் கிடையாது என்பதையும் கட்சி ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளது.

ஆனால் ஒப்பந்தம் அமுலாகும் போது கட்டாய நாடுகடத்தல் தவிர்க்க முடியாததாகிவிடும் என்ற அச்சமே தற்போது மலையக மக்களிடையே ஏற்பட்டுள்ள பரபரப்புக்குக் காரணமாகும்.

ஐந்தேகால் இலட்சம் மக்கள் இந்தியாவுக்குச்செல்ல முன்வருவார்களென்று உறுதியாக நம்புவதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? ஒன்பதே முக்கால் இலட்சம்பேர்களில் ஐந்தேகால் இலட்சம் பேரைத் தெரிவு செய்வது எப்படி? அவர்கள் ஒவ்வொருவரையும் அணுகி அவர்களின் சம்மதம் கேட்கப்படுமா? ஐந்தேகால் இலட்சத்துக்குக் குறைவாக சம்மதம் தெரிவித்தால் என்ன செய்வது? சம்மதிப்பவர்கள் ஐந்தேகால் இலட்சத்துக்குக் குறைவாக இருந்தால்,எஞ்சிய எண்ணிக்கையினர், ஒன்பதே முக்கால் இலட்சம் பேர்களின்இடாப்பிலிருந்துதெரிவு செய்யப்படுவார்களா? எந்த அடிப்படையில் அவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்? தெரிவுசெய்யப்பட்டவர்கள் இந்தியாவுக்குச் செல்ல விரும்பாவிட்டால் என்ன செய்வது? அவர்கள்நாடுகடத்தப்படுவார்களா? ஒப்பந்த அமுலில் இதுபோன்ற கேள்விகள் பல எழக்கூடும்.

ஒப்பந்தத்தின்படி ஆண்டுதோறும் 35,000 பேர் இந்தியாவுக்குச் செல்லவேண்டும். சம்மதத்தின் மீது இந்தியாவுக்கு அனுப்புவது என்ற நிலை அமுலாகும்போது, அநேகமாக முதல் ஈராண்டுகளில் மட்டுமே ஒப்பந்தம் அமுல் நடத்தக் கூடியதாயிருக்கும். என்று கூறலாம். தற்போதையநிலையில் 70 ஆயிரத்துக்குமேல் இந்தியாவுக்குத் திரும்பிச்செல்ல சம்மதிப்பார்களென்று யாருமே துணிந்து கூறமுடியாது.

ஈராண்டுகளுக்குப் பின்னர் சொந்த விருப்பத்தின்மீது வெளியேறுபவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிடுமென்பது கருத்தாம். அந்தநிலை ஏற்பட்டால், ஒப்பந்தத்தை எப்படி அமுல் நடத்துவது? கட்டாய நாடுகடத்தலே அப்பொழுது ஒப்பந்த அமுலுக்கு ஒரே வழியாக இருக்கமுடியும்.'

வேறு சொற்களிற் தெளிவாகக்கூறவேண்டுமானால், சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தின் அமுல், தொடக்கத்தில் சம்மதத்தின்மீது வெளியேறுவதாகவும், பின்னர் கட்டாய நாடுகடத்தலாகவுமே இருக்கும். இந்த நிலைக்குத்தான் தேசிய அரசாங்கம் பரிகாரம் காணவேண்டும். அடுத்த பொதுத் தேர்தலின்போது இந்த ஒப்பந்த அமுலை ஒரு தேர்தல் பிரச்சினையாக்குவதற்குச் சுதந்திரக்கட்சி காத்துக்கொண்டிருக்கிறதென்பதையும் தேசிய அரசாங்கம் மறந்துவிடக்கூடாது.

இ. தொ. காங்கிரஸின் போக்கு மலையக மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எப்படியும் ஐந்தே கால் இலட்சத்தை அக்கரைக்குக் கொண்டு சென்று, அந்தமானிலோ,அசாமிலோ குடியேற்றிவிட வேண்டுமென்பதில் துடியாய்த் துடிப்பதைப் போல அமைந்துள்ளன இ. தொ. கா. வின் சமீபகால நடவடிக்கைகள். இதற்குக் காரணம் எதுவாக இருந்தாலும், இந் நடவடிக்கைகளைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கிவிட்டனர் மலையகத் தமிழர்கள்.

"ஏதோ ஓர் வழியில் ஐந்தேகால் இலட்சத்தையும் அனுப்பிவிட்டால், ஒப்பந்தப்படி 3 இலட்சம் பேருக்கு குடியுரிமை கிடைக்குமே! அதனால் 3 இலட்சம் வாக்குகள் இ. தொ. காங்கிரசின் செல்வாக்கின் கீழ் வந்து விடுமே!' என்றெல்லாம் இ. தொ. கா. தலைமை கனவுலகில் கணக்குப்போடுவதாகவும் இதன் விளைவாகவே இ. தொ. கா. தலைவர்கள் கொழும்புக்கும் தில்லிக்கும் பறந்த வண்ணம் இருக்கிறார்களென்றும் கூறப்படுகிறது. இந்தப் போக்கு மலையக மக்களைப் பாதிக்குமென்பதில் ஐயமில்லை.

ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் விடயத்தில் தேசிய அரசாங்கம் மிகவும் நிதானத்துடன் நடந்து கொள்ளவேண்டுமென்றும், எந்தக் கட்டத்திலும் கட்டாய நாடுகடத்தல் அறவே கூடாதென்றும் மீண்டும் வற்புறுத்துகின்றோம்,

# தமிழ் ஊழியர் பிரச்சினைக்கு உடன் தீர்வு வேண்டும்

'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பது நாடோடி வழக்கு. தமிழ் அரசாங்க ஊழியரின் நிலையும் இதுவாகவே இருக்கிறது. பண்டாரநாயக்காவின் ஆட்சியுடன் ஆரம்பமாகிய பிரச்சினைகள் தேசிய அரசு பதவியேற்றும் தீர்ந்தபாடாகஇல்லை. அன்று தனிச் சிங்களக் கெடுபிடி தமிழ் அரசாங்க ஊழியரின் குரல்வளையை நசுக்கிக் கொண்டிருந்தது. இக்கெடுபிடியிலிருந்து சிறிதளவு விடுதலை இப்பொழுது கிடைத்திருந்தாலும்,இதையொட்டி எழுந்த பிரச்சினைகள் இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றன. அதுவும் 1956 செப்டம்பர் 24-ம் திகதிக்குப் பின்னர் சேவையில் சேர்ந்த தமிழ் ஊழியர்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது.

தேசிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் பழைய சேவையாளர்களாகிய தமிழ் ஊழியர்களின் நிலை சிறிதளவு திருப்தியாக இருக்கிறது. ஆனால் 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் சேவையில் சேர்ந்துள்ள புதிய சேவையாளர்களின் நிலைஎத்தகைய மாற்றமும் இன்றிப் பழைய நிலையிலேயே தொடர்ந்திருக்கிறது. தமிழ் அரசாங்க ஊழியரின் நிலையை யதார்த்த பூர்வமாகத் தரிசித்தவர்கள் இந்த உண்மையை நிச்சயம் மறுக்க முடியாது.

ஆனால் பழைய சேவையாளர்களின்சேவைநீடிப்பதற்கு சிங்களத் தேர்ச்சி கோரப்படவிருக்கிறது. இதனை விளக்கி வெகுவிரைவில் திறைசேரிச் சுற்று நிருபம் ஒன்று வெளிவரவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

## சேவை நீடிப்புக்கு சிங்களம் ஏன்?

காலம் முழுவதும் சிங்கள அறிவின்றிச் சேவை செய்தவர்களின் இறுதிகாலத்தில் ஒரு சில ஆண்டுகள் சேவை நீடிப்பிற்கு சிங்களத்தகைமை கோருவது வேடிக்கையாக இருக்கிறது. இது' உங்களின் சேவை 55 வயதுக்குப் பின்னர் எங்களுக்குத்தேவையில்லை' என்பதை மறைமுகமாகக் கூறுவது போன்றே இருக்கிறது. இங்ஙனம் ஒரு நிபந்தனையை விதிக்காது, பழைய சேவையாளர்களாகிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் கண்டிப்பாக 55 வயதில் சேவையிலிருந்து ஓய்வு பெற, வேண்டுமென்று எத்தகைய கூச்சமுமின்றிநேரடியாகக்கூறியிருக்கலாம். இதனைச் செய்ய சம்பந்தப்பட்டவர்களுக்குத் துணிவு இல்லை என்பதையே வரவிருக்கும் திறைசேரி சுற்று நிருபம் மறைமுகமாகக் கூறுகிறது.

இதற்கிடையில் 1963-64ம் ஆண்டுகளில் கட்டாய ஓய்வில் சென்ற தமிழ் ஊழியர்கள் மீண்டும் சேவைக்குத் திரும்ப புதிய திறைசேரிச் சுற்று நிருபத்தில் இடம் இருப்பதாக தினசரி ஏடுகள் தொடர்ந்து செய்திகள் வெளியிடுகின்றன. ஆனால் நமக்கு திறைசேரி வட்டாரத்திலிருந்து கிடைத்த தகவலில் இத்தகைய வசதி எதுவும் திறைசேரி புதிய சுற்று நிருபத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இதில் எது உண்மையாக இருப்பினும் கட்டாய ஓய்வில் சென்றவர்களின் பிரச்சினை இற்றைவரையில் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

கட்டாய ஓய்வில் சென்றவர்களை அரசாங்கம் ஆசை காட்டி மோசம் செய்கிறது என்றே கூற வேண்டும். தேசிய அரசாங்கம் தோன்றிய காலத்தில் இவர்களுக்கு மீண்டும் பழைய வேலை கிடைக்கலாம் என்று கூறப்பட்டது. பின்னர் இவர்களைக் கூட்டரவு போன்ற அரசுசார்ந்த நிறுவனங்களில் சேர்த்துக் கொள்வதாகக் கூறப்பட்டது. தமிழரசுக் கட்சியினர் அக்காலகட்டத்தில் இப் பிரச்சினை பற்றிப் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடாத்திய பொழுதும் இத்தகைய வாக்குறுதி ஒன்று தெரிவிக்கப்பட்டது. இப் பிரச்சினையையிட்டு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை

சுதந்திரன் அரசியல் நிருபர்

பூச்சியமானதாகவே இருக்கிறது. இப்பொழுது பத்திரிகைகள் ஏமாற்றுக் காட்டுகின்றன. அரசாங்கம் கட்டாய ஓய்வில் சென்றவர்களின் நிலைபற்றி ஒரு விரிவானதும், திட்டவட்டமானதும், முடிவானமான அறிக்கை ஒன்றை விடக் கடமைப்பட்டுள்ளது.

பழைய சேவையாளர்கள் பெயரளவில் சிங்களக் கெடுபிடியிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் புதிய ,சேவையாளர்களின் பிரச்சினை தொடர்ந்தும் அதே நிலையில் இருக்கிறது. அவர்கள் குறிக்கப்பட்ட அளவு சிங்களத் தகைமை பெறுதவரையில் சேவையில் உறுதிப்படுத்தப்பட மாட்டார்கள். இதனால் பெரும்பான்மையினர் தமது பதவி உயர்வையும், சம்பள உயர்வையும், சேவை மூப்பையும் இழந்து வருகிறார்கள். இதே காலகட்டத்தில் சிங்கள மொழி மூலம் சேவையில் சேர்க்கப்பட்டவர்களின் பதவி உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், பதவி உயர்வும், சம்பள உயர்வும் பெற்று வருகிறார்கள். இது தமிழ் மொழிமூலம் சேவையில் சேர்ந்தவர்கள் மீது வேண்டுமென்றே பழிவாங்குவது போன்று இருக்கிறது.

மேலும் சேவையில் உறுதிப் படுத்தப்பட்ட புதிய தமிழ்ச் சேவையாளர்களும் கூட தமது சம்பள உயர்வையும், பதவி உயர்வையும் பெற முடியாது இருக்கிறார்கள். இவர்களின் நிலையை விளக்கி மொழிவழித் தொழிற் சங்கங்களில் ஒன்றான அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் செயலாளர் திரு. த. சோமசுந்தரம் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் அஞ்சல் திணைக்களத்தில் கடமையாற்றும் புதிய தமிழ் சேவையாளர்களின் இன்னலை தெளிவுபடுத்தியிருக்கிறார். இதே நிலை தான் ஏனைய அரசாங்கப் பகுதிகளிலும், சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் தங்கள் பதவி உயர்வுப் பரீட்சையை எடுப்பதற்கு வேண்டிய துணை நூல்கள் தமிழில் இல்லை. ஆனால் இந்நூல்கள் என்றோ சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு விட்டன. தமிழ் மொழி மூலம் சேவையில் சேர்ந்தவர்கள் போதியளவு ஆங்கில அறிவு அற்றவர்கள். இதனால் இவர்கள் ஆங்கிலத்தின் துணை கொண்டும் பதவி உயர்வு பரீட்சைகளை எடுக்க முடியாதிருக்கிறார்கள். இப்பரீட்சைக்கு வேண்டிய துணை நூல்களும், சட்டவிதிகளும் உடனடியாகத் தமிழாக்கம் செய்யப்பட வேண்டும். இதனை முன்னரும் இப்பத்திகளில் வலியுறுத்தியுள்ளோம். மீண்டும் இச்சந்தர்ப்பத்தில் இதனை வலியுறுத்த விரும்புகிறோம்.

## புதிய சுற்று நிருபம்

அண்மையில் வெளியாக இருக்கும் புதிய திறைசேரிச் சுற்று நிருவத்தில் புதிய சேவையாளரின் பதவி உயர்வுப் பரீட்சைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இவர்கள் விரும்பினால் தங்கள் பதவி உயர்வுப் பரீட்சைக்கு சிங்கள மொழி மூலமும் தோற்றலாம் என்பதே அக்குறிப்பு. இது புதிய ஊழியரின் மீது சிங்களத்தை அளவுக்கதிகமாகத்திணிக்கும் ஓர் மறைமுக முயற்சி. பதவி உயர்வுப்பரீட்சைக்கு வேண்டிய தமிழ் நூல்கள் தமிழில் இல்லை என்ற குறையை மறைப்பதற்கும் இக்குறிப்பு உதவுகிறது. புதிய சுற்று நிருபத்தில் இப்பகுதி சேர்க்கப்பட்டிருப்பது தமிழ் ஊழியர்கள் மீது கரிசனை கொண்டு அல்ல என்பது இப்பொழுது தெளிவாகுகிறது.

மேலும் வரவிருக்கும் புதியதிறைசேரிச் சுற்று நிருவம் பழைய சேவையாளர்களுக்கும் ஒரு சில நிபந்தனைகளை விதிக்கலாம். அவர்கள் சிங்களத்திலும் கடமையாற்ற கடப்பாடுடையவர்கள் என்று ஒரு குறிப்பும் அதில் சேர்க்கப்படவிருக்கிற தாம். இது முடிந்த பிரச்சினைக்கு மீண்டுப் புத்துயிர் அளிக்கும் முயற்சி என்பதை எவரும் மறுக்க முடியாது.

கிராம சேவகர் போன்ற பதவிகளில் உள்ளவர்களுக்கும் குறிப்பிட்டளவு சிங்களத் தகைமை கோரப்படுகிறது. தமிழ்ப்பகுதிகளில்வேலை செய்யும் கிராம சேவகர்கள் தமிழ் மக்களுடனேயே தொடர்புடையவர்கள். அவர்களின் பதவி ஒப்பந்தத்தின் பிரகாரம் சேவைககாலம் முழுவதும் தமிழ்ப் பகுதிகளிலேயே கடமையாற்ற வேண்டியவர்கள். இவர்கள் தொடர்புகொள்ளும் நேரடி மேல் அதிகாரிகளும் தமிழர்களாகவே இருப்பார்கள். இவர்களுக்கும் சிங்கள அறிவு வேண்டுமென்று நிர்ப்பந்திப்பது அர்த்தமற்ற ஒரு நிபந்தனையாகும்.

சிங்களத் தகைமையிலிருந்து சில பதவியாளர்கள் விதிவிலக்களிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் சுருக்கெழுத்தாளர்களும் உள்ளனர். ஆனால் தட்டெழுத்தாளர்களுக்கு இந்த விதிவிலக்கில்லை. இதுவும் ஒரு கேலிக்கூத்தான முறையாகவே இருக்கிறது.

## உடன் தீர்வு வேண்டும்

வரவிருக்கும் புதிய திறைசேரிசுற்றுநிருவம் அரசாங்க சேவையிலுள்ள தமிழ் ஊழியர்களின் பிரச்சினைக்கு முடிவுகாணும் என்று கூறுவது தவறு. இது சில சமயம் பிரச்சினையை மேலும் சிக்கலாக்க உதவலாம். இதனை அமைச்சரவை உணர்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரச்சினையை முடிவின்றி இழுத்துச் செல்வது நாட்டு நிர்வாகத்திற்கு நல்லதல்ல. இப்பிரச்சினையில் தெளிவற்ற ஒரு நிலை நிலவுவதால் அரசாங்கத்திணைக்களங்களில் வேலைகள் மலைபோன்றுகுவிந்து கிடக்கிறது. மக்களின் வரிப்பணம் இதனால் வீண் விரயம் செய்யப்படுகிறது. எனவே தேசிய அரசாங்கம் நாட்டின் முன்னேற்றத்தை மனதிற் கொண்டாவது இப்பிரச்சினைக்கு உடன் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

# இந்தியர்களைத் தடுப்பதற்கு ஓர் இயக்கம்

## நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முடிவு

### "தவஸ" தரும் செய்தி

"இந்தியாவுக்குச் செல்ல விரும்பும் இந்தியர்களை அங்கு செல்ல இடமளிக்காமல் இங்கேயே நிறுத்தி வைத்துக்கொள்ளும் ஓர் இயக்கம் இப்பொழுது மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மலைநாட்டுத் தமிழ் தலைவர்கள் சிலர் இவ்வியக்கத்துக்குத் தலைமை தாங்குவதாகக் கூறப்படுகிறது.

இதுபற்றி விசாரணை செய்து, இந்தியாவுக்குப் போகிறவர்களுக்கு இடையூறு செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதுபற்றி சட்டம் இயற்றுவதற்கும் பிரதமமந்திரி தயாராயிருக்கிறார்.'

இவ்வாறு ஒரு செய்தியைத் 'தவஸ' (8-9-66) வெளியிட்டுள்ளது.

"இந்தியாவுக்குச் சென்றால் இங்குபோல் வசதியான வாழ்க்கை நடத்த அங்கு இடம் கிடைக்காது என்று மேற்கண்ட மலையகத் தலைவர்கள் இந்தியர்களிடம் பிரசாரம் செய்வதாக அறியப்படுகிறது.

இந்த நாசவேலைக்கு இலங்கையிலுள்ள இந்தியத் தூதராலயத்தின் சில அதிகாரிகளும் உதவி செய்வதாகத் தெரிகிறது.

#### இடாப்பு தயார்

இதற்கிடையே, இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் இந்தியர்களின் இடாப்பு ஒன்றுஉடனே தயாரிக்கப் பிரதமமந்திரிஎண்ணியுள்ளார். இவ்விடயத்தில் அரசாங்கம் இந்தியத் தூதராலயத்தின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளும்.

இந்தியர்களிடமிருந்து பணம் வசூல் செய்து படிப்படியாக மலைநாட்டில் தேயிலைத் தோட்டங்களை விலைக்கு வாங்கும் ஒரு திட்டம்பற்றியும் அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது' என்று 'தவஸ' செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

#### 'நாம தமிழருக்கு' தோட்டங்கள்

"மலைநாட்டில் 'நாம் தமிழர் இயக்கத்தினர்' இப்பொழுது அவசர அவசரமாக வெள்ளையர்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர்தேயிலைத்தோட்டங்களை வாங்கிக்கொண்டிருக்கின்றனர்.

நாவலப்பிட்டியில் 'பரகல்ல' என்னும் 800 ஏக்கர் விஸ்தீரணமுள்ள தேயிலைத் தோட்டத்தை அந்தப் பிரதேசத்திலுள்ள தி. மு. க. பிரமுகர் ஒருவர் உட்பட ஒரு கோஷ்டி விலைக்கு வாங்கியுள்ளது."

—'ஜனதின' (9-9-66).

## செய்தித் தலைப்புகள்

அபுசாலி நானு வேண்டாம்! சிதா நோனுவும் வேண்டாம்!

—எத்த (9-9-66).

உயர் பதவிகளுக்கு வெளிநாட்டினர் வருகிறார்கள்

—ஜனதின (9-9-66)

இந்தியப் பிரச்சினையைத் தொண்டமானிடம் ஒப்படைத்ததேன்?-திருமதிசிறிமாவோ கேட்கிறார்.

—ஜனதின (9-9-66).

நேரு ருவான்வெலி தாது கோபுரத்துக்குப் பரிசாக வழங்கிய குளிர் சாதன இயந்திரம் துருப்பிடிக்கிறது

—ஜனசத்திய (6-9-66)

வகுப்புவாதக் கொள்கையைக் கையாளுகிறார் தொழில்மந்திரி

—ஜனசத்திய (6-9-66)

எண்கோண மண்டபப பித்தலாட்டத்தால் மல்வத்தை—அஸ்கிரி பீடங்களிடையே தகராறு சூடுபிடிக்கிறது.

—எத்த (7-9-66).

சிறிமா-சாத்திரி ஒப்பந்தம் காட்டி கொடுக்கப்படுகிறது—தொண்டமானிடம் கடிதக் கோவைகள்.

—ஜனதின (3-9-66)

தேர்தல் காலத்துக்கு முந்திரிப்பழம்.

—ஜனதின (3-9-66)

பாண் விலைகூடியது-நாய்வரி குறைந்தது.

—ஜனதின (3-9-66).

பதவி உயர்வு

## பரீட்சையை பிற்போடுக

### அ. ஊ. வி. செயலாளர் அறிக்கை

அக்டோபர் திங்களில் நடைபெறவிருக்கும் அஞ்சற் திணைக்கள பதவி உயர்வுப் பரீட்சையைப் பிற்போட வேண்டும் என்று அஞ்சல் எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு. த. சோமசுந்தரம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். அதற்கான காரணங்களையும் இந்த அறிக்கையில் அவர் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். அஞ்சல் திணைக்கள சட்டவிதிகளைத் தமிழில் மொழி பெயர்க்காது காலம் தாழ்த்துவதால் 1956லும் அதற்குப் பின்னரும் அரசாங்க சேவையில் சேர்ந்த அஞ்சல் திணைக்கள தமிழ் ஊழியர்கள் தமது பதவி உயர்வுப் பரீட்சையை எடுக்க முடியாது இருப்பதாகவும், இதே கால கட்டத்தில் சேவையில் சேர்ந்த சிங்கள ஊழியர்கள் இச்சட்டவிதிகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதால் எத்தகைய இடர்பாடுமின்றி தமது பதவி உயர்வுப் பரீட்சையை எடுத்து வருகிறார்கள் என்றும் அந்த அறிக்கையில் திரு. சோமசுந்தரம் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இந்த அறிக்கையில் மேலும் திரு. சோமசுந்தரம் தெரிவித்திருப்பதாவது:-

'பதவி உயர்வுப் பரீட்சைகளுக்கு தமிழ் ஊழியர்கள் தோற்ற முடியாது இருப்பதால் அவர்கள் தங்கள் சம்பள உயர்வையும், சேவை மூப்பையும் இழக்கிறார்கள். இவர்கள் போதியளவு ஆங்கில அறிவு இல்லாதகாரணத்தினால் ஆங்கில மொழி மூலம் நடைபெறும் பதவி உயர்வுப் பரீட்சைகளுக்கும் தோற்ற முடியாதிருக்கிறார்கள். இப்பரிதாப நிலைக்குள்ளான தமிழ் ஊழியர்கள் பற்றி நமது சங்கம் பலமுறை அதிகாரிகளிடம் முறையிட்டிருந்தபோதிலும் அவர்கள் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது அதிகாரிகளின் மாற்றாந்தாய் மனப்பான்மையையா அல்லது அரசகரும மொழித்திணைக்களத்தினரின் அசிரத்தையை காட்டுகிறது என்பதையிட்டு நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

'இச்சட்டவிதிகள் தமிழில் கிடைக்காதவரை பரீட்சைப் பகுதியினர் பதவி உயர்வுப்பரீட்சைகளை நடாத்துவது தமிழ் ஊழியர்களுக்கு இழைக்கும் பெரும் அநீதியாகும். ஆகவே அடுத்த திங்கள் நடைபெறவிருக்கும் இப்பதவி உயர்வுப் பரீட்சையை சட்டவிதிகளின் தமிழாக்கம் கிடைக்கும் வரை பிற்போடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.'

#### பாரதிவிழா

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றத்தின் ஆதரவின் கீழ் இன்று மாலை (13-9-66) மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நலத்துறை அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. கு. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் பாரதி விழாவில் திரு. செ. இராசதுரை பா. உ., 'தீபம்' ஆசிரியர் திரு நா. பார்த்தசாரதி ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

## நல்லூர்க் கந்தன் திருவமுதத் தேன்துளிகள்

வெளியிட்டவர்கள்: மெய்கண்டான் நிறுவனத்தினர்.

ஆண்டுதோறும், மெய்கண்டான் நிறுவனத்தினர், நல்லூர்க்கந்தன் திருவிழாவின்போது வெளியிடும் இலவசப் பாமாலை இம்முறையும், சிறந்த முறையில், அழகிய கண்ணைக் கவரும் மூவண்ண அட்டையுடன் வெளிவந்துள்ளது. அட்டையில் வள்ளி, தெய்வயானையுடன் ஆறுமுகப் பெருமான் காட்சி தரும் இவ் வெளியீட்டில் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தோத்திரப் பாமாலைகள் இடம்பெற்றுள்ளன.

இப்படியொரு பக்திப் பிரசுரத்தை இலவசமாக வெளியிட்டு இறைபணியாற்றும் மெய்கண்டான் நிறுவன உரிமையாளர் திரு. இரத்தின சபாபதி அவர்களை சைவ உலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

## சிங்கள இதழ்களில்...

## மேலும் அவகாசமா? மன்னிக்க முடியாது

### பிரதமரும் சிங்களத்தில் பணியாற்ற வேண்டும்

### "லங்காதீப்ப" எச்சரிக்கை

'26-9-1956க்குப் பின்னர் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்கு 1968 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த நிலையற்ற கொள்கையை மன்னிக்கவே முடியாது' என்று 'லங்காதீப' (9-9-66) எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத் தலையங்கம் மேலும் கூறுவதாவது:-

'அரசாங்க அலுவலகங்களில் 90 சத விகிதம் சிங்கள மொழியில் செய்யக்கூடிய சிங்களம் படித்த அரசாங்க ஊழியர்கள் இருக்கின்றனர். அவர்களின் உதாசீனத்தால் சிங்கள அமுலாக்கல் குன்றுவதாகியுள்ளது.

சிங்களத்தில் பணியாற்றுவதில் ஆர்வம் கொண்ட அரசாங்க ஊழியர்களுக்கு மொழிவிரோதிகளான உயர்தர அதிகாரிகளால் ஏற்படும் இடையூறுகள்பற்றி புகார் செய்வதற்கு இடம் இல்லாதிருப்பதும், புகார் செய்தாலும், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதிருப்பதும் சிங்கள அமுல் தாமதமாவதற்கான மற்றொரு காரணமாகும்.

இந்த நிலையில் சிங்களத் தேர்ச்சி பெறுவதை 1968 வரை ஒத்திப்போட்டதுபற்றி நாம் அரசாங்கத்துக்கு ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகின்றோம். அதாவது சிங்கள அமுலின் தற்போதைய ஆமை வேகத்தைத் தொடர்ந்து அனுமதித்தால் 1968ல் சிங்களத் தேர்ச்சிபெற வேண்டிய காலத்தை மேலும் ஒத்திப்போட வேண்டிய நிலை ஏற்படுமென்பதே.

அன்று கிளம்பும் மக்கள் எதிர்ப்பைப்பற்றி புதிதாக ஒன்றும் கூறுவதற்கில்லை. இதற்குள்ள ஒரே பரிகாரம் பிரதமமந்திரி உட்பட பொறுப்புள்ள அதிகாரிகள் அனைவரும் இன்றிருந்தே அரசகரும மொழியில் பணியாற்றத் தொடங்குவதே!'





பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

தந்தி: [illegible] இல. 15, செட்டியார் தெரு, கொழும்பு 11. தொலைபேசி: [illegible]

# பாரதி பாடல் தந்த பலன்

வை. அ. கயிலாசநாதன்



உள்ளத் துணர்வை ஒளிவு மறைவின்றி வெள்ளத் தனையப் பாயும் கற்பனையில் கருக்கொண்டு, நல்ல தமிழில் யாக்கப் பெற்ற கவிதைகளை இயற்றித் தந்த கவிஞர் பெருமக்கள், நூற்றாண்டுகளின் வரப்பில் மிகச் சிலராகவே இருக்கின்றனர்.

ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட புலவர்கள் சங்ககாலத்தில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பொழுதும், அந்த ஐந் நூற்றுவரின் பெயர்ப் பட்டியலை, நினைவில் அமிழ்ந்தி இனிமை ததும்ப நிற்கும் அடிகளை—அன்றோ இன்றோ அதிகளவுக்கு நினைத்துப் பார்க்க முடியவில்லை.

காலத்துக்கு மட்டும் கவிதை யாத்தவர்கள் அக்காலம் முடிவுற்றதும் தாமும் தம் கவிப் பெயருடன் மடிந்தனர். காலத்துக்கு மட்டுமன்றி, அக்கால வாழ்க்கை முறை, வளப்ப நிலை போன்ற தன்மைகளுக்கு எதிர்கால விளக்கங் கொடுத்துப் பாடப் பெற்ற கவிதைகள் இன்றும், நாளையும் நிலைத்து நிற்பனவாகின்றன.

## கவிஞன் இயல்பு

பாரதிக்கு விழாவெடுக்கும் வேளையிலே, அவர் தம் பாடல்களை எண்ணுந் தோறும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழ் செய்து, பெயர் பெற்றவர்களையும், பெயர் பெறாதவர்களையும், நினைப்பது வேண்டியதொன்றாகும்.

பாரதியாருடைய பாடல்கள் காலத்தால் பிறப்பிக்கப் பெற்றவை என்பதை முதலில் கூறலாம். அவர் வாழ்ந்த இந் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் தமிழ் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார நிலைகள் முடிவுக்கு வந்து விட்டவை போன்றே இருந்தன, அந் நிலையில், கவி உணர்ச்சி கொண்ட ஒருவன் மனவெழுச்சி பெற்று, சமூகத்தின் அரசியல் பொருளாதார கலாச்சார விடுதலைகளுக்காக தன் மொழியை, தன்னியல்பைக் கருவியாக்கி இப் புது வாழ்வு அல்லது புனர் வாழ்வு காணப்புறப் படுவதும் இயல்பு.

அந்நியரின் ஆதிக்கத்திலே தமிழ் நாடு தவஞ் செய்து பெற்றிருந்த—காலங் காலமாக நிலைத்து வந்த அன்பு உணர்ச்சி, வீர நெறி போன்ற அக நிலை ஒழுக்கங்கள் படிந்திருந்தன. அதற்கு முற்பட்ட தெலுங்கர் ஆட்சியில் தம்மினத்திடமே தம்மை இழந்திருந்தனர் தமிழர்கள். விஜய நகரர் என்னும் தென்னாட்டுப் பெருந்தலைவர்கள் என்று தம்மைக் கூறிக் கொண்ட வட நாட்டுப் பிரதிநிதிகள் தமிழை, தமிழர் கலாச்சாரத்தைப் போட்டிப் பொருளாகப் பணயம் வைத்து அவற்றின் ஏரையும் சிறப்பையும் கெடுத்திருந்தனர்.

இந் நிலை இருதாம் நூற்றாண்டு என்னும் இனியதோர் காலப் பிரிவு உதயமாவதற்கு முன்வர் நீடித்து நிலை பெற்றிருந்தது.

## வழிகாட்டிகள் தோன்றினர்

நாடே அவல நிலையில் தவித்த பொழுது, அதனை வீடே எனக் கொண்ட பெருந் தேசிய உணர்ச்சி கொண்ட அரசியல் தலைவர்களும், மொழித் தலைவர்களும் தோற்றினார்கள். அவர்களைக் காலச்சூழ்நிலைதான தோற்றுவித்தது.

அடிமை உணர்ச்சி கொண்டு விடிவு காண வழியறியாது துடித்த பாரதப் பெருமக்களுக்கு வழிகாட்டிகளாகப் பலர் புறப்பட்டார்கள்.

வட பகுதிகளில் இன மன உணர்ச்சிக் கவிதைகள் செழித்து நின்றன. தென்னாட்டில் அடிவருடி நிலை அதிகரித்திருந்த தேயோழிய, தாமே முன்னின்று நாட்டுக்கு உழைக்கத் துணிவும் திறமையும் உள்ளவர்கள் தோன்றாத ஒரு துர் நிலை பிடித்திருந்தது.

பாரதியாருக்கு முன்னராகச் சிலர் துணிவு பெற்று நாட்டுக்கு உழைக்கத் தொடங்கினார்கள். வட நாட்டு மகான்கள் சிலரின் வழிகளைப் பின்பற்றத் தலைப்பட்டார்கள் அவர்கள்

அவ்வேளை பாரதி பாடல்கள் பிறந்தன!

பாரதியாருடைய பாடல்களைப் பொதுப் படையாகப் பார்க்கும் பொழுது, இதுகாறும் கூறிய சில அடிப்படைப் பண்புகள் நினைவுக்கு மறுபடியும் வருகின்றன.

## பாரதி பாடல் நிலைக்கக் காரணம்

காலத்தின் தேவைக்காகப் பாடப் பெற்ற பாடல்கள் பலவற்றைப் பாரதியார் படியுள்ளார். அவை இந் நூற்றாண்டின் முடிவிலேனும் தமிழர்களே தமிழர்களை ஆண்டு, தமிழையன்றிப் பிற வற்றைத் தாயாகக் கொள்ளாத பண்பும நிலைக்கின்ற ஒரு நேரம் வருமானால் மறைந்தவையாக இருந்து விடும். ஆனால் பாரதியாருடைய தேசியப் பாடல்கள், தமிழ் பாடல்கள் யாவும் இன்னும் நின்று நிலவுவதற்கு காரணம், தமிழர்களுக்கு இன்னமும் இனியதொரு விடிவு ஏற்படாத காரணத்தாலாகும்.

என்று தணியும் இந்தச்
சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள்
அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை
விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள்
தீர்ந்துபொய் யாகும்?

என்று பாரதி கேட்டவாறே, நாமும் கேட்டுக் கொண்டேயிருப்போம் அத்தகைய இருள் நிலையே இன்றும் உள்ளது.

மனிதன் காலத்தின் இல தேவைகளில் தன்னைச் சரி செய்வதற்காக, அல்லது சமாளிப்பதற்காகச் சில பல கட்டுப்பாடுகளை, அல்லது நீதிகளை வகுத்துக் கொள்கிறான். தமிழன் எண்ணும் தோறும் இவ்விடர் நிலை மனத்தில் எழுவது இயல்பு.

## உழவுத் தொழில் உயர்வு பெற்றது

தொழில் முறைகள் என்ற அடிப்படையில் மிருகங்களைக் கொன்று தின்றும், மீன்களை எற்றி உண்டும், பொருளுடையோரைக் களவாடியும் வாழ்ந்தவர்கள் ஆரம்ப காலத் தமிழர்கள். அவர்கள் அன்று வாழ்ந்த அருகர்மதத்

(14-ம் பக்கம் பார்க்க)

ANTON
தரம்
பூரணத்துவம்
சேவை
ஆகியவற்றின்
சின்னம்
நீங்கள் நினைவில் இருத்த வேண்டிய பெயர்
நீங்கள் நம்பத் தகுந்த நாமம்
செண்ட் அந்தனீஸ் தொழில் துறைக் குழு
752/1, பேஸ்லைன் வீதி, கொழும்பு - 9.
GRANTS/0003

# "நமது கலாசாரத்துக்கு ஆபத்து"

## கலாசாரப் பகுதியினரே கடும் நடவடிக்கை எடுங்கள்

## மட்டுநகர் எம். பி. கோரிக்கை

"கலாசாரம் என்பது ஒரு நாட்டிலே மிக முக்கியமாகப் பேணிப்பாது காக்கப்பட வேண்டிய ஓர் அருங் கலைச் செல்வமாகும். இன்று இந்நாட்டுக் கலாசாரத்துக்கு ஆபத்தான சூழ்நிலை உருவாகிவருகிறது. இந் நாட்டின் தலை சிறந்த கல்விமான்களாக வரவேண்டிய மாணவர்களை திசை திருப்பும் விதத்தில், வெளிநாட்டுக் கலாசார மோதல்கள் பல துறைகளிலும் இந்நாட்டிலே தலை காட்டிக் கொண்டிருக்கிறது. பத்திரிகைகளைப் புரட்டினுல், கொலை, கொள்ளை போன்ற பாலுணர்வைத் தூண்டும் செய்திகளைத்தான் காணக்கூடியதாக இருக்கிறது. எனவே கலாசாரப்பகுதியினர் இத்துறையில் மிகவும் கவனம் செலுத்தி இங்கு இறக்குமதியாகும், பத்திரிகைகளும், புத்தகங்களும், சினிமாப்படங்களும், நமது கலாசாரத்துக்கு முரண்பட்டவையா என்பதை ஊன்றிப் பரிசீலிக்க வேண்டும்" இவ்வாறு மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை கல்வித் திணைக்கள மானியம் மீது வரவு செலவு குழுநிலை விவாதத்தில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் பேசியதன் சுருக்கம் வருமாறு:-

'கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த அளவில் ஒரு கனிட்ட தொழில் நுட்பக் கல்லூரியை அங்கு அமைக்கவேண்டுமென்று கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இச்சபையில் கிழக்கு மாகாணப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்திருக்கிருர்கள். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த அளவில் அப்பகுதிப் படித்த வாலிபர்களின் பிரச்சனைகள் அத்தனையும் தீர்க்கக் கூடியதாக ஒரு கனிட்ட தொழில் நுட்பக்கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று காலத்திற்குக் காலம் பல பிரதிநிதிகள் கேட்டிருக்கிருர்கள். நாம் இப்பிரச்சனையைப் பல சந்தர்ப்பங்களில் இச்சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். ஆனல் இப்பிரச்சினை, முன்பு இருந்த கூட்டாட்சி அரசாங்கத்தினுலும் இப்பொழுதிருக்கின்ற தேசிய அரசாங்கத்தினுலும் கவனம் செலுத்தப்படாத ஒரு பிரச்சினையாக இருப்பதைப் பார்க்க மிகுந்த வேதனையாக இருக்கிறதென்பதை நான் இச்சபையில் குறிப்பிட விரும்புகிறேன்.

### தொழில் நுட்பக் கல்லூரி

'கிழக்கு மாகாணம் சுமார் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்களைக் கொண்ட ஒரு பகுதியாகும். இப்பகுதி மக்களிற் படித்த பலர் தமிழ் ஆசிரியர்களாகவோ அரசாங்க லிகிதர்களாகவோ தாம் இருந்து வந்திருக்கிருர்கள். நாட்டில் பரவிவருகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்க்கத் தொழில் நுட்பக் கல்லூரிகள் மிக அவசியம் என்று கேட்கப்படுகின்ற இக்காலத்தில் கிழக்கு மாகாணத்திலே ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை அமைப்பதில் ஏன் அரசாங்கம் அசிரத்தையாக இருக்கவேண்டுமென்று நான் கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

### ஆசிரிய நியமனத்தில் குறைபாடு

'கிழக்கு மாகாணம் கல்வியைப் பொறுத்த அளவில் படுமோசமான நிலையிலேயே இருந்து வருகின்றது. எமது மாகாண படித்த வாலிபர்களுக்கு ஆசிரியர்களாகவும் லிகிதர்களாகவும் வரும் சந்தர்ப்பம் தான் இதுகால வரை இருந்தது. ஆனல் கடந்த சில வருடங்களாக வாலிபர்கள் மத்தியில் ஏற்பட்ட கல்வித் தாகம் ஒரு சிலரைப் பட்டதாரிகளாக ஆக்கி வைத்திருக்கிறது. இவர்களில் சிலருக்குக் கல்வி அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஆசிரியர் நியமனம் வழங்கி இருக்கிருர். இதற்காக நான் அவருக்கு இங்கே நன்றிகூறுகிறேன்.

'ஆனல் வழங்கப்பட்ட நியமனங்களிற் பல குறைபாடுகள் இருப்பதாகப் பட்டதாரிகள் மனக்குறை அடைந்துள்ளனர். ஆகவே மிகுதியாக உள்ள பட்டதாரிகளின் பிரச்சினையைக் கல்வி அமைச்சர் அவர்கள் எப்படித் தீர்க்கப்போகிருர் என்பதைப் பற்றிய அவரது கருத்தை இச்சபையிலே இப்பொழுதோ பின்னரோ வெளியிட வேண்டும் தங்களுடைய வாழ்க்கைக்கு ஏதாவது விமோசனம் கிடைக்குமா என்று ஏங்கும் பட்டதாரிகளுக்குக் கல்வி அமைச்சர் அவர்கள் நம்பிக்கை அளிப்பார் என்று நம்புகிறேன்.

### மாணவர் தொகையை அதிகரிக்குக

அடுத்ததாக தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்படுகின்ற மாணவர் தொகையை அதிகரிக்க வேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாக இச் சபையிலே பாராளுமன்ற உறுப்பினர் பலர் வற்புறுத்திக் கொண்டு வருகின்ருர்கள். ஒரு மாணவன் பயிற்றப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டே தனது கல்வியைப் பெற வேண்டுமென்று கல்வி விதிகள் கூறக் கூடுமாயினும் ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் இன்னைறக்கு ஆசிரியபயிற்சிக் கல்லூரிக்குச் சென்று ஆசிரிய பயிற்சி பெற முடியாதவர்களாக இருக்கிருர்கள். ஆகவே இந்த ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளாக கணிக்கப்பட்ட முறையை விடுத்து அதிகமான மாணவர்களை ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்ய வேண்டுமென்று நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக நான் சொல்லக் கூடியது என்னவென்ருல் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி எய்தி ஆசிரியர்களாக இருப்பவர்களை மட்டும் ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யாமல், எஸ். எஸ். சி. சித்தி அடைந்து விட்டு, ஆசிரியர்களாக இல்லாமல் தம் எதிர்கால வாழ்விற்கு ஏதாவது விமோசனம் கிடைக்குமா என்று எதிர்பார்த்து இருப்பவர்களிருந்தும் ஒரு கணிசமான தொகையினரை ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

### ஏன் இந்தப் பாரபட்சம்?

'அடுத்ததாக, சமீபத்தில் கொழும்பிலேயுள்ள நுண்கலைக் கல்லூரிக்கு பயிற்சிபெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் கிழக்கு மாகாணத்திலிருந்து ஒருவர்தானும் தெரிவு செய்யப்படவில்லை என்பதை மிகவும் வேதனையோடும், கண்டனத்தோடும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கொழும்பு நுண்கலைக் கல்லூரிக்கு அனுமதி பெறும் புகுமுகப் பரீட்சையில் சித்தியடைந்துங்கூட, நேர்முகப் பரீட்சையில் பல மாணவர்கள் தவறிவிட்டார்கள். ஒருவர்தானும் தெரிவு செய்யப்படவில்லை.

'யாழ்ப்பாணத்தி லுள்ள நுண்கலைக் கல்லூரிக்கு போதியளவு வசதியையும் போதியளவு போதனுசிரியர்களையும் அளித்து அதை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### பிராந்திய கல்வி அலுவலகம்

'மட்டக்களப்புப் பிராந்தியத்துக்கான கல்வி அலுவலகத்திற்கு ஒரு சொந்தக் கட்டடத்தை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். உள்நாட்டமைச்சுக்குச் சொந்தமான மாகாண அதிபருடைய வீட்டிலேதான் மட்டக்களப்புக் கல்விப் பிராந்திய அலுவலகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசாங்கம், கல்வி அமைச்சுக்குச் சொந்தமாக ஒரு காணியைச் சுவீகரித்து மட்டக்களப்புப் பிராந்தியகல்வி அலுவலகத்தைக் கட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

'இஸ்லாமிய வழிபாட்டுத் தலைவரான நபிகள் நாயகம் அவர்கள், 'சிறந்த கல்வி சீனுவிலிருந்தாலும் அதை அங்கேசென்றுதேடிப்படியுங்கள்' என்று ஒரு புனிதமான வாக்கியத்தைக் கூறியிருக்கின்ருர்கள். ஆகவே, நம் நாட்டில் கல்வி வசதிகளை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

'கடந்தகால கூட்டரசாங்கத்தின் நடவடிக்கை காரண

(10-ம் பக்கம் பார்க்க)

பண்டைக்காலத்து அழகின் ரகசியத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்



தூய சந்தன எண்ணெயினுல் உங்கள் அழகுக்கு மெருகு கூட்டுங்கள்

சோப்புகளில் ராணி,
ராணி சந்தன சோப்




ராணி

அசோக்கமாலா இலங்கை சரித்திரத்திலேயே இடம்பெற்றஅழகு ராணி. அவளின் கவர்ச்சியான அழகு, துட்டகைமுனு என்ற அரசனின் மகன் சாலியா என்னும் இளவரசனின் இதயத்தையே கொள்ளை கொண்டது. இத்தகைய இயற்கை அழகு வாய்ந்த அசோக்கமாலாவை "பஞ்ச கல்யாணி" என்றழைத்தனர். அசோக்கமாலாவின் பெயரையே ஓர் அழகான பூந்தோட்டத்திற்குச் சூட்டினர். இத்தகையஅழகின் மர்மம்என்னவாயிருக்கும்? அசோக்கமாலாவின் அழகின் மர்மத்தை, பகிர்ந்து கொள்ளுங்கள்—இம்மர்மம் ஒவ்வொரு ராணி சந்தன சோப்பிலும் காணப்படுகிறது. இச்சோப்பில் மட்டும் தான் சுத்தமான சந்தன எண்ணெ சேர்க்கப்பட்டுள்ளது. ஈழத்தேய அழகு மங்கைகளின் அழகின் மர்மம் இதுவேயாகும். அதனுல் நீங்களும் அழகான மேனியைப் பெற்று பெருமை கொள்ளுங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்
மல்லர், பிப்ஸ் (சிலோன்) லிமிட்டெட்.

இது சுவதேஸி இண்டஸ்ரீயல் ஸ்தாபனத்தாரின் ஓர் தயாரிப்பு



அத்துடன் குழந்தைகளுக்கும்..........
தாய்மார்களே! பூப்போன்ற மிருதுவான குழந்தையின் சருமத்தை ராணி பேபி சோப்பினுல் பாதுகாருங்கள்




GRANTS 56



# நல்லூர்க் கந்...
# தேர்த் திருவிழா...

## பன்னிரு தடந்தோள் வள்ளல்

**ப**ரம ஏழை ஒருவன் பசிக் கொடுமையால் துடிக்கின்றான். அரைவயிற்றுணவு தானும் அகப்படவில்லை. யாராவது மனமிரங்கிப் பாராரா என்று அவன் நெஞ்சம் ஏங்குகின்றது. அப்பொழுதுதான் அதிர்ஷ்டவசமாகஒரு செய்தி-அருமையான செய்தி அவன் செவியில் கேட்கிறது. மனம் விரும்பியவாறு அவன் வங்கியிலிருந்து பணம் பெற்றுக்கொள்ளலாம் என்பது அந்த நற்செய்தி! ஏழை துள்ளி எழுந்தான். பசிதீர உணவு வாங்கி உருசிபார்த்து உண்டான். குடியிருக்க அழகான இல்லம் கொண்டான். மனம் விரும்பியவாறு வகை வகையான இன்பங்கள் துய்த்தான் அவனது ஆசை குரங்காட்டம் ஆடியது. நெடிய மலையில்வாழ்ந்தவன் குடிசை வாழ்வை நாடினான். குடிசை வாழ்வு கசந்ததும் நெடிய மனையைத் தேடினான். அவ்வாறே உண்பனவும் உடுப்பனவும் அவன் பெற்று அனுபவியாதன இல்லை. முடிவிலே அவன் மனத்திலே நூதனமானதோர் தாகம் பிறந்தது. தனக்கு வேண்டிய வேண்டிய பொருளையெல்லாம் வெறுக்காது தந்து தந்து தன் விருப்பப்படி அனுபவித்தற்கு உதவும் அந்த உபகாரி யார்? இதனை அறிய வேண்டும் என்பதே அவ்வேழையின் இறுதி ஆசை.

### பன்னிரு தடந்தோள் வள்ளல்

அந்த ஆசைகாரணமாக அவன் மனம உலகப்பொருள் ஒன்றிலும்செல்லவல்லை இரவும் பகலும் கனவும் நினைவும் அவ்வாசையே அவனை ஆட்கொண்டது. ஏழையின் எண்ணத்தை அறிந்து இரங்கி, அவ்வள்ளல் அவன் முன் எதிர்ப்பட்டார். அப்பொழுது அவ்வேழையின் நிலை எத்தகைய இன்பமயமாய் இருக்கும்? அவ்வேழைக்குக் கிடைத்த அவ்வள்ளலைபோல் ஒரு வள்ளல் நமக்குக் கிடைக்கமாட்டாரா? அந்த ஏழைக்கு விருப்பம் திரக் கொடுத்துதவிய வள்ளலைப்போல நமது எண்ணமெல்லாம் ஈடேற ஒருவள்ளல் இரங்கி நமக்கு உதவமாட்டாரா? அப்படி ஒரு வள்ளல் இல்லை என்பவர், பாவம், அறிவில்லாதவர்கள்! ஏழைக்கிரங்கிய அந்த வள்ளலை விடப் பல் கோடி மடங்கு உயர்ந்த, ஒப்பற்ற வள்ளல் ஒருவர் உள்ளார்! அவர் தாம் பன்னிருதடந்தோள் வள்ளல்!

### அறுமுகனின் பெருங்கருணை

ஆறுமுக வள்ளல் நம்மிடத்தில் கொண்டுள்ள அருளும், அவர் நமக்குச் செய்யும் உபகாரமும் இவ்வளவு அவ்வளவு அல்ல! அறியாமையாகிய இருளிலே கிடந்து ஆசையாகிய பசி வருத்த, அப்பசியைத் தீர்த்தாகு யார் உதவுவார் என்று அலைந்து இருந்த நமக்கு இந்த வைபத்தையும் இவ்வையகத்தில் வாழ்வதற்கு உடம்பினையுந் தந்தவர் அந்த வள்ளலல்லவா? இந்த உடம்பினையும் உலகத்தினையும் அவர் தந்ததோடு விடவில்லை. நம்மோடு உடனுகின்று நம்மைப் படிமுறையாகத் திருத்தியருளுதலும் செய்கின்றார்! தாய் தந்தையர் தம் பிள்ளைகள் களவு முதலிய தீய செயல்களைச் செய்யக்கண்டால் அவர்கள் அவ்வாறு செய்யாமல் உடனே கண்டித்து அப்பிள்ளைகள் நல்வழியிலே செல்லவும் நல்லதையே செய்யவும் விடுகின்றனர். எமது பரம பிதாவாகிய முருகப்பெருமான் நமதுஇச்சைப்படியேதீயதையும் நல்லதையும் செய்ய விட்டு அவ்வவற்றின் பயனையும் அனுபவிக்கச் செய்து, நாம் விரும்பிச் செய்த அந்த நல்வினை தீவினைகளிலே மெல்ல மெல்ல நமக்கு உவர்ப்பு ஏற்படச் செய்யும் அவ்வள்ளலின் பெருங்கருணையை என்னென்பது!

### நன்னெறி காட்டும் திருவருள்

அழுக்கு நிறைந்த ஆடைக்கு அழகான நிறமூட்டுவோர் முதலில் அழுக்கைப் போக்கிப்பின்னரே நிறத்தை ஊட்டுவர் ஆசை நிறைந்த ஆன்மாவின் அருட்டேசு நிறைந்த தாக்குதற் பொருட்டு இறைவன அவ்வாசை தீரும் வகையில் பலப்பல பிறவிகளைச் சலிக்காமல் தந்தருளுகின்றான். எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்ற நிலை நமக்கு ஈற்றில் உண்டாகின்றது. அந்தச் சமயம் பார்த்து இறைவன் தன்னை வணங்கும் தூய அன்பினை நமக்குத் தருகின்றான். முன்பு தன்னைக் குறித்தும், தன் மனைவி மக்களைக் குறித்தும், தன் நண்பரைக் குறித்தும், தன் உட்டவரைக் குறித்தும், அல்லும் பகலும் அலைந்தும் உழைத்தும் அறபயன்பந்தடியவருமவன் இறைவனளித்த இன்ப அன்பினைப் பெற்றதும் இறைவனையும் இறைவனடியார் களையும் வணங்குதலிலும், அவர் பணி செய்தலிலும் இன்பங் காண்கின்றான். தன் மனைவியும் தன்னைச் சேர்ந்தாரையும் புனைந்தும் வனைந்தும் உள்ளம் பூரித்த நாம், இறையன்பு எய்தப் பெறுவோமாகில 'ஆறான் திருவடிக்கே அசங்குல பூசேன், அலைபுருகேன், பூமாலை புனைந்தேத்தேன், புகழ்ந்தேத்தேன், புத்தேளிர் கோமான் நின் திருக்கோயில் தூகேன், மெழுகேன், கூத்தாடேன்; சாமாறே விரைகின்றேன்' என்றுதான் இரங்கித் துடிப்போம். இவ்வாறு ஆறுமக வள்ளல் நம்மை ஆசையாகிய புலநெறி விலக்கி இறையன் பாகிய நன்னெறி பொருளுகச் செய்வராகில், அவரது வள்ளன்மையை என்னென்பது!

### அருட்குரு

ஐம்புலன்களின் வழிப் போகாமல் அன்புவழியிலே செல்லும்போது நினைப்பனவும் சொல்வனவும் செய்வனவும் அன்புமயமே ஆகின்றன. அந்நிலையில் நமக்குத் தோன்றாது நின்று நம் உயிருக்கு உயிராய் நின்று நம்மை நல்வழிப்படுத்திய அந்தக் கந்தவேள் அருட்குருவாய் வந்து உண்மையறிவை உணர்த்தியருளுகின்றார். அந்த அறிவு ஐயந்திரிபுக்கு அப்பாற்பட்ட அறிவு; மாசற்ற அறிவு மெய்யறிவு. அதனை நமையுறக் காட்டி... அனுபூதிபெற்ற ஆன்றோர். அந்தக் காட்சியை அறுமுகன் நமக்கு அளித்ததும் நாம் ஆர், நம் உள்ளம் ஏது, ஞானங்கள் யாவை? என்ற உண்மை வெளிக்கும். உண்மையை உள்ளவாறு கண்டதும் பொய் பொய்யாகப் போய் ஒழியும்.

### மணிவாசகர் வாக்கு

அறிவும் இன்பமும் சிறிதும் இன்றி இடபிலை வெள்ளியையன்றும், இவைவே இன்பமெனவும் கண்டு மயங்கி உழன்ற உயிருக்கு பாடசிவக்க காட்சியையும் என்றும் குன்றாத இன்பத்தையும் தாமே இரங்கித் தந்தருளிய வள்ளலாகிய அறுமுகப் பெம்மான் அவ்வளவில் நம்மை விட்டு விடுவதல்ல, நம்மையே அடிமையாகக் கொள்கின்றார். நாம் அவருக்கு அடிமையானதும் சும்மாவிருக்கும் சுகத்தைப்பெறுகின்றோம். அளவல்லாத பிறவிகளில் ஓய்வு ஒழிவு இன்றி நினைந்து நினைந்து, பேசிப் பேசி, எண்ணிறந்த நல்வினை தீவினைகளைச் செய்து செய்து மெய்வருந்தி உழன்ற நாம் ஆண்டவனின் அருட் பெருங் கருணையால் ஆனந்த மயமான உயர் நிலையைப் பெறுகின்றோம். நமது சிந்தையில் நின்று அவனே நினைக்கின்றான். நமது வாக்கில் நின்று அவன் பேசுகின்றான் நம கரணங்களைக் கொண்டு அவன் தொழிற்படுகின்றான். நாம் சும்மாவிருக்கின்றோம். இதற்கு முன் நம உயிர் ஆணவமயமாய் இருந்தது. நமது உடல்

மாயா'... இறைவன்... கொண்ட... ம... சிவ... நம் செய... களாகின்... நிலையை அ... மணிவாச...

'முத்திநெற... மூர்க்க... பத்தி நெறி... பழவினைக... சித்தமலம்... சிவ... அத்தன் எ... ஆர் பெ... என அரு...

உலகத்... கேட்டும... ளில் ஒரு... கேட்ட... யென்னுப... கள், மற்... கோள... றிந்து கு... வர். வே... நாம் பி... சென்று... கேளா வ... செல்வ ந... வல்லவரா... யில் கொடு... தவள்ளல்... வானெங்... வள்ளல்... தோள் வ... நமது உ... இருந்து ந... ருர். அவ... ண்டு... குறைதிர... அவரது... இத் தன்... முடியாத... வாய்ந்த...

வித்துவான் பொன். முத்துக்குமாரன் பி. ஓ. எல்.


அன்புள்ளுருகி, அடிய... இன்பக் கடலில் திளைத்...


**மலச்சிக்கல் மற்றும் அஜீரணக்கோளாறுகளுக்கு**

# ரிஷிலேகியம்

66 வருடங்களாகப் புகழ் பெற்றதும் வைத்திய பரம்பரை ஆயுர்வேத டாக்டர் T. H மதுரநாயகம் வைத்தியராஜ் அவர்களால் தயாரிக்கப்பட்டதுமான அபூர்வ சஞ்சீவி.

ரிஷி லேகியம் நாள்தோறும் மலத்தை ஒழுங்காக வெளியேற்றி, கைகால் அசதி, கை கால் கணுக்களில் வலி, தேககாங்கை, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வாய்வு, வாதம், திரேகமெலிவு, பசியின்மை, கண் எரிச்சல், நெஞ்செரிவு, வாய்ப்புண், சோம்பல், சூதக சிக்கல், உள்மூலம் வெளிமூலம், இரத்த மூலம் முதலிய வியாதிகளை அதிவிரைவாக குணப்படுத்துகிறது. ஆப்ரேஷனின்றி மூலவியாதியை குணப்படுத்த விரும்புவோர் ரிஷி லேகியம் சாப்பிட்டால் உடன் பலனடைவர். சகபேதியாகவும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை.

**15 நாள் மருந்து ரூ. 3-50**
**30 நாள் மருந்து ரூ 6-50**

**ஞானசுந்தர வைத்தியசாலை**

183, செட்டியார்தெரு, கொழும்பு.



**நல்லைக் கந்தன் திருவிழாவின் போது குளிர்மை தரும் போட்டெல்லோ**

**●**

**தங்கநிற அன்னுசிரசம் இவற்றை அருந்தி ஆனந்தமடையுங்கள்**

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

**பியர் பெவரேஜஸ் கம்பெனி லிமிடெட்**


கொழும்பு.

PURE BEVERAGES CO. LTD

COLOMBO

# ...ந்தன் ...ா மலர்





...ி, அடியரெலாம் 'அரோகரா' என்றுரப்பரித்து ...் திளைத்தாடும் இயல்பை இங்கு காணிரே.

## நல்லூர் கந்தப்பெருமானை நயந்து நம்பால் வரக் கூவாய்!

—வித்துவான் க. வேந்தனார்—

இன்பத் தமிழின் தீஞ்சுவைபோல்
   இனிமை பரப்பும் இளங்குயிலே
அன்பர்க் கினியான் ஆறுமுகன்
   அமரர் கோமான் அருளாளன்
துன்பப் பிறவி தொலைத்திடுவோன்
   தொல்லோன் நல்லூர்த் திருமுருகன்
என்பும் உருக்கி எமையாள்வோன்
   ஈசன் மைந்தன் வரக்கூவாய்.

கல்லுங் கனியக் கூவியுளங்
   களிக்கும் குயிலே கற்றுணர்ந்தோர்
சொல்லும் பொருளும் கடந்தானைத்
   தூய ஞானச் சுடர்விளக்கை
அல்லும் பகலும் அடியார்கள்
   அழுதும் தொழுதும் அருள்வேண்டும்
நல்லூர்க் கந்தப் பெருமானை
   நயந்து நம்பால் வரக்கூவாய்.

கன்னற் சாற்றின் சுவைநாணக்
   கானம் பொழியுங் கருங்குயிலே
அன்னை தனிலும் மிகநல்லோன்
   அவுணர் குலத்தை வேரறுத்தோன்
இன்னற் பிறவி எய்தாமல்
   எம்மைக் காக்கு இளஞ்சேயோன்
தென்னை செழிக்குந் திருநல்லூர்ச்
   செவ்வேட் பெருமான் வரக்கூவாய்.

தெள்ளத் தெளிந்த அமுதினிசைத்
   தேனைச் சொரியுந் திருக்குயிலே
வள்ளிக் குறந்த மணவாளன்
   மாலோன் மருகன் மறைவல்லோன்
புள்ளிக் கலாப மயில்வீரன்
   புனிதன் போக்கு வரவில்லோன்
வில்லற் கரியான் திருநல்லூர்
   வெற்றி வேலன் வரக்கூவாய்.

பண்ணின் பயனும் குரலெடுத்துப்
   பாடுங் குயிலே பாவாணர்
கண்ணுங் கருத்துங் களிகூரக்
   காட்சி கொடுக்கும் கதிர்வேலோன்
உண்ணின்(று) உயிர்க்குள் உடனாகி
   ஒன்றுய் வேறுய் உடனாகி நிற்போன்
நண்ணும் அடியார் நலம்புரப்போன்
   நல்லூர்க் கந்தன் வரக்கூவாய்.

எங்கும் இசையின் நலங்கனிய
   இன்பம் நல்கும் எழிற்குயிலே
சங்கம் இருந்து தமிழாய்ந்தோன்
   தவத்தோர் பரவும் தண்ணளியான்
கங்கை மைந்தன் களிற்று முகக்
   கடவுள் பின்னோன் காங்கேயன்
கொங்கின் சோலைத் திருநல்லூர்க்
   குமரப் பெருமான் வரக்கூவாய்

கொந்தார் சோலைக் கொம்பிருந்து
   கூவுங் குயிலே குலமகளிர்
செந்தீ மெழுகாய் நெஞ்சுருகித்
   திருமுருகாற்றுப் படை பாடச்
சிந்தா நிறை சேர் விழிநீர்
   தினம் வளர்க்கும் நெய்யாகி
நந்தா அன்பின் நலங்காட்டும்
   நல்லூர்க் கந்தன் வரக் கூவாய்.

அருள்வள்ளலின் விருந்தளிக்கும்
   அமுதக் குயிலே அடியார்கள்
உள்ளம் உருகி ஊனுருகி
   ஊற்றெழக் கண்ணீர் வார்ந்தோடக்
கள்ளந் தவிர்ந்த மெய்யன்பால்
   கருணைக் கடலே என்றேத்தும்
வள்ளற் பெருமான் திருநல்லூர்
   வடிவேற் கந்தன் வரக்கூவாய்.

தேமாங் கனிகள் தேன்சொரியச்
   சிந்தை சிறந்து பூங்குயிலே
பூமான் கடம்ப மலர்மாலை
   புனையும் மார்பன் பொன்னகரின்
கோமான் தேவ குஞ்சரியின்
   கொழுநன் சேவற் கொடிவீரன்
பாமான் புலவர் பயில்நல்லூர்ப்
   பதியுறை கந்தன் வரக்கூவாய்.

தென்றல் தவழச் செர்மாந்து
   தெய்வக் கானஞ் செயுங் குயிலே
குன்றம் எறிந்தோன் குறுமுனிக்குக்
   கொழுந்தீந் தமிழின் புலமளித்தோன்
மன்றல் கமழும் மலர்க்கூந்தல்
   மங்கை உமையாள் மகிழ் புதல்வன்
நன்று நயந்தோர் ஞானச் செல்வன்
   நல்லூர்க் கந்தன் வரக்கூவாய்.

மாயா மயமாய் இருந்தது. இறைவன் நம்மை ஆண்டு கொண்டதும் நம உயிர் சிவமயமாகின்றது. நம் அறிவு சிவஞான மயமாகின்றது. நம் செயல்கள் சிவன் செயல்களாகின்றன. இந்த உயர்ய நிலையை அனுபவித்தின்புற்ற மணிவாசகப் பெருமான்

"முத்திநெறி யறியாத
   மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப்
   பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
   சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய வாறு
   ஆர் பெறுவார் அச்சோவே"

என அருளியுள்ளார்.

உலகத்தில் நாம் கண்டும் கேட்டும் அறியாதவர்களில் ஒரு சாரார் நாம் கேட்ட பொருளை இல்லையெனாது கொடுப்பவர்கள். மற்றொரு சாரார் நாம் கேளா முன்னரே குறிப்பறிந்து குறைதீர்க் கொடுப்பவர். வேறும் ஒரு சாராரோ நாம் பிறரொருவரிடத் திற் சென்று தன்னை யென்று கேளா வகையில் நமக்குச் செல்வ [illegible] செய்ய வல்லவராகவும் தக்கவகையில் கொடுக்க வல்லவர். இந்தவர்களுக்கள் எல்லாரினும் வாரிக் [illegible] டைய வள்ளல் பண்ணிருந்து தான் வள்ளலானவர். அவர் நமது உயிருக்கு உயிராய் இருந்து நம்மை உய்விக்கின்றார். அவர் தமது [illegible] களுக்கு [illegible] குறைநீர வழங்குகின்றார். அவரது கொடைச் சிறப்பு இத்தன்மையது என்று கூற முடியாத [illegible] சிறப்பு வாய்ந்தது. அவர் இருக்

கும் இடம் என ஒன்று இல்லை, மலையிலும் இருப்பார். வனத்திலும் இருப்பார். காடும், சாரலும் கவின் பெறு துருத்தியும், யாறும் குளமும் வேறு பல வைப்புகளும் கழும் சந்தியும் புதுப்பூங் கடப்பும், பன்றழும், பொதியிலும் கந்துடை நிலையும் ஆகிய எங்கும் உள்ளார். அவரை அடைந்து வணங்கி

(12-ம் பக்கம் பார்க்க)


## 'மெய்கண்டான்'

| | | | |
|---|---|---|---|
| 1. திருக்குறட் கலண்டர் No. 1 ஸ்பெசல் | 2-40 | 15. No. 7 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி B (பக்கம் 2 நாள்) | 3-30 |
| 2. திருக்குறட் கலண்டர் No. 1 (சாதாரணம்) | 2-[illegible]5 | 16. No. 8 அலுவலக (Official) டயறி (3 ளாஸ்ரிக் கவர்) | 3-[illegible] |
| 3. ஆபிஸ் கலண்டர் (தனித்தாள் 5"X7½" அளவுள்ளது) | 5-00 | 17. ஜெம் பிளாஸ்ரிக் டயறி | 1-85 |
| 4. நுண்மொழிக் கலண்டர் No. 2 | 1-35 | 18. புரொபேஷனல் பாக்கெட் டயறி (Appointments) | 3-3[illegible] |
| 5. மாதக் கலண்டர் (பஞ்சாங்கக் கலண்டர்) | -95 | 19. No. 2 பொக்கெட் திருக்குறள் டயறி (பொக்கெட் சகிதம்-With Purse) | 3-15 |
| 6. சிங்கள கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) | 2-15 | 20. No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் 'B' டயறி (பக்கம் 2 நாள்) | 4-40 |
| 7. ரேசின் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) | 5-50 | 21. ஜெம் பேர்ஸ் டயறி | 2-[illegible]5 |
| 8. தகரம் படம் (அழகிய பல பாதிரிகள்) | 2-75 | 22. வலற் டயறி (Wallet Diary - மிகச் சிறந்தது) | 6-50 |
| 9. No. 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி (பிளாஸ்ரிக் கவருடன்) | 2-75 | 23. பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 5-50 |
| 10. No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ,, | 2-[illegible]0 | 24. பிளாஸ்ரிக் சிங்கள பாக்கெட் டயறி | 2-20 |
| 11. No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 3-[illegible]0 | 25. சிங்கள பஞ்சாங்க 'A' டயறி (Plastic) | 3-85 |
| 12. No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 2-20 | 26. ,, ,, 'B' டயறி ,, | 3-30 |
| 13. No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1-75 | 27. புரொபேஷனல் பிளாஸ்ரிக் (Appt.) டயறி 7½"X9½" | 7-00 |
| 14. No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி A (பக்கம் 1 நாள்) | 3-85 | 28. புரொபேஷனல் பாக்கெட் பேர்ஸ் டயறி | 4-15 |

இன்னும் பல உண்டு. மற்றும் விபரங்களுக்கு

### மெய்கண்டான் அச்சியந்திரசாலை லிமிட்.,

161, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 79141

# நமது கலாசாரத்துக்கு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி) மாக இலங்கைக்கு வெளியே யுள்ள பல்கலைக் கழகங்களி லே மனையியல்,உடற்பயிற்சி, சித்திரம், சங்கீதம், பொறி யியல், நடனம் ஆகிய துறை களில் பட்டதாரிகளாக ஆக ஆக முடியாத நிலை இலங் கை மாணவர்களுக்கு— குறிப்பாக தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஏற்பட்டி ருக்கின்றது. கூட்டரசாங்கத் தால் உருவாக்கப்பட்ட இக்



கொள்கையை இந்தத் தே சிய அரசாங்கம் மீண்டும் புனராலோசனை செய்து எதிர்காலத்தில் இலங்கையி லிருக்கின்ற' படித்த வாலி பர்களை இலங்கைக்கு வெளி யே இத்துறைகளில் பயிற்சி பெறுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட் டுக் கொள்ளுகிறேன்.

### கலாசாரத்துக்கு ஆபத்து

'கலாசாரம் என்பது ஒரு நாட்டிலே மிக முக்கிய மாகப் பேணிக் காக்கப்பட வேண்டிய ஓர் அருங்கலைச் செல்வமாகும். கீழைத்தேச நாடுகளுக்கென விசேஷ கலாசார முறைகளும் பண் பாட்டு முறைகளும் இருந்து வந்திருக்கின்றன. அவை

பலகாலமாக விதகலாசார தாக்குதல்களுக்கு ஈடு கொ டுத்துக் கொண்டு, பல ஆயி ரக்கணக்கானவருடங்களாக அழியாமல்நிலைபெற்றுஇருப் பதைநாம்காணுகிறோம்.இன் று இலங்கைப்பொறுத்தஅள விலே பல கலாசார மோதல் கள் தினமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பத்தி ரிகைகள் வயிலாகவும், புத் தகங்களின் வாயிலாகவும், சினிமாப்படங்களின் வாயி லாகவும், இந் நாட்டிலே ஏற் பட்டுவரும் கலாசார மோ தல்கள்பற்றி, கலாசாரப், பகுதியினர் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

### மாணவர்களை பாழாக்குகிறது

'இந்நாட்டின் தலைசிறந்த கல்விமான்களாக வரக்கூ டிய மாணவர்களுடைய கவர்ச்சியைத் திருப்பக் கூடிய விதத்தில் வெளிநாட் டுச் கலாசார மோதல்கள், பல துறைகளிலும் இந்நாட் டிலேயும் தலைகாட்டிக் கொண்டிருக்கிறது. நமது குழந்தைகளுடைய கவனம், இதனால் வேறு திசைகளிலே திருப்பப்படுகின்றது. பத்தி ரிகைகளைப் புரட்டினால் தின மும், கொலை, கொள்ளை போன்ற பால் உணர்ச்சியை யுடைய செய்திகளைத்தான் பல பத்திகளிலே காணக்கூ டியதாகவிருக்கின்றது. நமது கீழைத்தேச கலாசா ரத்தின் மீது மோதிக்கொண் டிருக்கின்ற வேறு கலாசா ரங்களைத் தடுப்பதில் போ திய கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்நாட்டிற்குக் கொண்டுவரப்படுகின்ற சினி மாப் படங்கள், இந்நாட்டுக் குத் தருவிக்கப்படுகின்ற புத் தகங்கள், இந்நாட்டுக்குத் வருகின்ற பத்திரிகைகள், அவைகள் எந்த மொழியைச் சேர்ந்தவைகளாக விருந்தா லும் சரி, அவற்றைச் சரியா கப் பரிசீலனை செய்து அவை இந்நாட்டுக் கலாசாரத்தை தையும், இந்நாட்டுப், பண்பு களையும் கீழைத்தேச மக்க ளுக்கு விசேடமாகவுள்ள கலாசாரத் துறைகளையும் அழித்து நாசமாக்கக்கூடிய னவா என்பதை நன்றாகக் கவனிக்க வேண்டும்.

### பரிசிலனை செய்க

'இல்லையென்றால் நமது நாட்டினுடைய வருங்காலத் தலைமுறையினரின் கலாசா ரம் அதள பாதாளத்தில் தள்ளப்பட்டுவிடுமெனக்கூறி கலாசாரப் பகுதியினர் மிக வும் கவனத்தோடு இந்நாட் டுக்கு இறக்குமதி செய்யப் படுகின்ற பத்திரிகைகள் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற சினிமாப் படங்கள் அத்தனையையும் ஊன்றிப் பரிசிலித்து நமக் கென்வுள்ள — கீழைத்தேச நாட்டுக்கு விசேஷமாக வுள்ள கலாசார துறைகள் வருங்காலத்தில் பாதுகாக் கப்படுவதற்கான — வளர்க் கப்படுவதற்கான — முயற்சி களில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டு, எனது தொகுதியைப் பற்றி நான் குறிப்பிடுகையில் விசேஷமாக கிழக்கு மாகாண மக்களுடைய தொழிற் பிரச்சினையைத் திர்ப்பதற்கேதுவான முறை யில் கனிட்ட தொழில் நுட் பக் கல்லூரியை அடுத்த ஆண்டிலாவது அமைப்பதற் குரிய வேலைகளை அமைச்சர வர்கள் மேற்கொள்ளவேண் டுமெனக் கேட்டு எனது பேச்சை முடிக்கின்றேன்.



# 'ம.பொ.சி. பேசுகிறார்'

இலங்கை வானொலி, சட் டக் கல்லூரி, சரசுவதி மண் டபம், விவேகானந்தசபை ஆகிய இடங்களில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர் கள் நிகழ்த்திய பேச்சின் தொகுப்பு 28-9-66 ம் திகதி இதழிலிருந்து கட்டுரை வடிவில் தொடர்ந்து வெளி யாகும், இக்கட்டுரைகளை சிலம்புச் செல்வர் அவர்களே எழுதியுள்ளார்.


★ மாணவ ஆசிரியர்
★ சிறுப்பர் சேவை
★ பொதுச் சௌக்கியம் பயில்வோர்

தேர்வுப்பரீட்சை-அக்டோபர் 1966

மேற்படி பரீட்சைக்கென்றே தயாரிக்கப் பட்டுள்ள பயிற்சி கோவைகள்

★ தமிழ் பாஷை — ரூ 5/-
★ பொது அறிவு — ரூ 5/-
★ பொது விவேகம் — ரூ 5/-

சிறந்த முறையில் பரீட்சையில் சித்தியடைய எமது பயிற்சி கோவைகள் துணை செய்யும்.

கையிருப்பு முடியுமுன் உடனே பணத்தை போஸ்டல் ஓடர் செய்து அனுப்பவும்.

வி. பி. பி. ஏற்றுக்கொள்ளப்படும்.

சர்வகலாசாலை போதனு கழகம்

540, மருதானை வீதி, த. பெ. இல: 1079

கொழும்பு-10

தொலைபேசி: 91699






ரிஷி நேத்திர சஞ்சிவியின் புதிய விலை:

6 அவுன்ஸ் பாட்டல் 3-50

12 „ „ 6-50



● சகல விதமான கட்டிடவேலை,
● தச்சு வேலை, கொல்ல வேலை,
● என்ஜினியரிங் வேலை,
● விவசாயம் நீர்பாசனம்,
● தீந்தை வகைகள்,
சுவர் வர்ணப் பூச்சுக்கள்

இவைகளுக்கான சகலவித உபகரணங்களும், உபபொருட்களும், தரமானதாகவும் மலிவானதாகவும் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.


மக்னில்ட்ஸ் டிரேடிங் ஏஜென்சி

10 ஸ்டேசன் வீதி,
சுன்னுகம்.

ஏற்றுமதி, இறக்குமதி அனுவலகம் தந்தி: "சேதலி"
த. பெ. என்: 833 கொழும்பு
கொழும்பு.



கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14,டாம் வீதி, கொழும்பு-12.

எமது சிறுகதை

# பூனை

மருதூர்வாணன்

வைகாசி மாத வெய்யில் உபைதா உம்மா தன் வீட்டுத் திண்ணையில் நெளிந்து நித்திரையின் கவ்வலிலே கிடந்தாள். முலைகளை உறிஞ்சிக் கொண்டு கிடந்தன அவளின் இரு குஞ்சுகள்.

ஆமாம், உபைதா உம்மாவின் இரட்டைச் சிசுக்கள் காக்கைக் குஞ்சுகளாகப் 'பற பற' வெனக் கிடந்தன தாயின் மடியில். காக்கைக்குப் புனுக்குஞ்சுகளா பொரிக்கும். கல்யாணமாகி, நான்கு வருஷத்திற்குள் குடும்பக் கட்டுப்பாடில்லாதவர்கள், ஐந்து குழந்தைகளல்லவா ஈன்று விட்டனர்! ஏனைய மூன்று குழந்தைகளும் புறத்திவாசலில், மாமரத்தின் கீழ் நிர்வாணமாக விளையாடிக்கொண்டிருந்தன.

கெட்ட கனவு கண்டவள் போலும்; 'விசுக்' கெனவிழித்தாள் உபைதா உம்மா. எதேச்சையாக எழுந்திருக்க முடியவில்லை. இடுப்பு வலி. இப்படி இரண்டிரண்டாக குஞ்சுகளைத் தட்டிவிட்டா இடுப்பு வலி மட்டுமா வரும்? ஒரு கையை நிலத்திலும் மறு கையை இடுப்பிலுமாக 'பவ்விப் பவ்வி' முக்கி, முனகி எழுந்தாள். அறைகுறை அமுதுண்ட குஞ்சுகள் சிதறிக் கிடந்தன. கால்களை நீட்டிப் போட்டவாறு பக்கத்தில் கோலமாகக் கிடந்த குழந்தைகளைப் பார்த்தாள் தன் குஞ்சு பொன் குஞ்சுகளைப் பாசக் கயிறினால் திரித்து ஒவ்வொன்றாக அமுதூட்டிக் கொண்டிருந்தாள்.

'கிணிங்? கிணிங்??'

தெருப் படலையில் 'சைக்கிள்' மணியடியோசை உபைதா உம்மாவின் செவிப் பறைகளில் எட்டின.

சிசுக்களை வரிசைப்படுத்தி விட்டு, மெல்ல எழுந்து தெருப் படலையை நோக்கி நடந்தாள்.

'உன்ரை...பெயர்...?'

'... ...ப்...பொ.. லி... ஸ்...' பயத்தினால் நா முணுமுணுத்தது. முக்காடு நடுக்கத்தினால நழுவிக்கொண்டிருந்தது.

'நீ, பயப்படாதை? உன்னைப் பிடிக்க வரல்லை. அலியார் லெப்பை உபைதா உம்மா யார்?'

'...நா...... னி...ல்...' அவளின் தேகமெல்லாம் 'படபட'த்துக் கொண்டு தானிருந்தன. பொலிஸாரும் அவதானித்துக் கொண்டுதானிருந்தார்.

'நம் உடையையும் உத்தியோகத்தையும் கண்டவள், தொடை நடுங்கிறவள்' என்ற அங்கலாய்ப்பு. புது வருட முதற் கடமை. அனுபவமில்லை.

பக்கத்துவீட்டு அப்துல் ஹமீதும் தெருவிற்கு வருகின்றான். 'பொலிஸ் பியூனை' கண்டதும் விடயத்தின் பொருளைப் புரிந்துகொண்டான்.

'என்ன சார்? யாரத் தேடுகயள்?'

"அலியார் லெப்பை உபைதா உம்மாவுக்கும், சாலிகு லெப்பை அப்துல் ஹமீதுக்கும் நடந்த சண்டையைப் பற்றியது. உனக்கு விளங்குமே?

'நான்தான் சார், அப்துல் ஹமீது.' பொலிஸாரிடம் கூறிக்கொண்டு, கடைக்கண்களால் உபைதாவை அவதானிக்கின்றான். அவள் நகர்ந்து கொண்டுதானிருந்தாள்.

'உன்ரை எதிரி...?'

'...அதோ...' விரல் சுட்டிக் காண்பித்தான்.

'என்ன?? ஏ...பிள்ளே...? எங்கே ஒழிக்கின்ற நீ? என்னை ஏமாத்திப் போட்டுப் போகலாம். ஆனால் அரசாங்கம் விடுமே? அனியாயமா 'வாறன்' வந்து பிடிப்படப் போற நீ.'

'பாத்தியளா சார்? நீங்க சொல்லுகத்தக் கேளாம போகுதுபொடிச்சி. அவளவு முங்கி...'

'ஹூம்?, முங்கியா முங்கி. இவடள்ள முங்கியநாளக்கிப் பாரு மேன். அவயள், கிடக்கட்டும். நாலாந் தேதி தவணை. இந்தா, உன்ரை சம்மன்ஸ்...'

'...ம்...சரிசார்.'

பொலிஸார் விரைகின்றார்.

அப்துல்ஹமீது சம்மன்ஸை வாசித்தவனாகத் தன் படலை சாய்ந்துகொண்டு நிற்கின்றான். பழைய சம்பவங்கள் திரை ஓடின.

'இவனுகளேன், இன்னமின்னம், எங்களை ஏசிக்கிட்டிரிக்கானுகள். ஆயிரம் ரூவாக் குடுத்துத்தானே வளவுறுதி வாங்கினம். நாங்க வாங்கினத்தை எப்பிடியும் விப்பம். இடக் கேக்க இவனார்? இவனர்? ஆத்தாத, சொணயத்த நாடன். ஹூம்?, இவர் பெரிய மூளகாரனும். லேசா எடுத்துக்கு வாராம். அவஞ் செய்யிற கெட்டித்தனத்தப் பாப்பம்?' உபைதா உம்மா 'பிள்ளைத்தாச்சி' பாய்ந்து பாய்ந்து ஒரு ஆடவனின் கம்பீரியத்தில் ஜெயிக்கலானாள்.

'புள்ளேய்?, நீ துள்ளாதே யாபமா? என்ர மூளையப் பத்தி நீ தெரியவேணுமெண்டாக் கொஞ்சம் பொறுகாம்மா. பெரிய கோட்டில பாத்துக்குவம்.' மிக மரியாதையுடன் பதில்கூறி விழாசினான்.

'ஹூம், இவர் பெரிய 'லோக்காறனும்.

'என்ர பொறுமையச் சோதிக்காதேயாம்மா, தங்கச்சி. ஒண்ட வாய்க்கு குடுதிப்போட வெக்கப் பொலிஸிக்காரனக் கொண்டாரன். விடியட்டும்...'

'...பொலிஸியக் கொண்ணந்து எனக்க குடுதிபோட? ஓம்......' அப்பப்பா, நாவினால் உரைக்கத் தகுதியற்ற வார்த்தைகளால் தூற்றிக் கொண்டிருந்தாள்.

"டேய் நாயே, வழிசல், நக்குண்ணி...' உபைதாவின் புருசனும் சொல்லுந் தரமற்றவைகளாக இகழ்ந்துகொண்டிருந்தான்.

அப்துல் ஹமீது பொறுமையை ஈரமாக்கிக் கொண்டு, பொழுது புலரும் வரை, தேரியபாதையில் முள்பரவும் திட்சணிய 'லோ'விலை மூளையை ஆலாபனம் பயிற்றி வந்தான்.

முஹம்மது காசின் மரைக்காயர் அப்துல் ஹமீதுக்கு ஒன்றுவிட்ட சிறிய தந்தை. உபைதாவுக்கும் அப்படியே. ஒரு குடும்பத்தில் சர்ச்சைகள் வரக்கூடாதே; எனப் பாசம் காட்டுபவர். இப்போது வந்து விட்டதே? என்ன செய்யலாம்?' என்ற வியூகத்தில் சமரச வேலையில் மூழ்ந்து அவரது இல்லத்திலேயே இரு தரப்பினரையும் வரவழைத்து விளக்கமெடுக்கவந்த பொலிஸாருக்கும் உபசரணை பண்ணிக்கொண்டிருந்தார்.

'ஐயா, இந்தாங்க சோடா.'

'ம்... அப்படி வெய்யுங்கோ. அதைப் பேந்து குடிப்போம். ஆ... தம்பி உன்ரை முறைப்பாட்டைச் சொல்லு. இவ, என்ன வென்று பேசினவ?'

'ஸார்... உங்களின் 'டைறி'யைப் பொரட்டிப் பாருங்க. வாயினால் விள்ளவுமியலாத, கூடாத வசைவம்புகளை ஆயுதமாகப் பாவித்து என் மாபெரிய மதிப்பைக் கெடுத்துக் கர்ச்சித்தனள்? அன்பும் பண்புமில, அது மிக மனிதருக் கவசியமன்றன்றோ ஸார்.'

'...நீர்...' அவன் பேசிய தமிழைக் கேட்ட பொலிஸாருக்கு, வியப்பு வந்தது.

'ஐயா, என் வார்த்தைகள் பொருள் மிகவுடைத்து. யானொழுக்க மிகவுடன் பிறந்தவன், நீவிர்கள் கூறலாம். இங்குள முழுவரும் வியம்புவர். மருதமுனை யெங்கணு மட்டில, தமிழ் நவில் தரையெலாம் நூறறிலொன்றேனும் எந்தனை அறிஇலாருமிலே.'

ஒரு பண்டிதர் சொற்பொழிவாளனுக்குரிய தோரணையில் எழுநது நின்று கவிமணியாக உகுத்தும் பொழுது, அப்துல் ஹமீதை யாபேரும் 'பிரமையோ' வென ஐயுற்றனர்.

'ஐயா மார், தம்பி சொல்லுகதைத் தவறாக எண்ணப்படாது- அவனொரு கவிஞன்.

'இவர்கள், பிழையானவரில்லை. பத்திரிகையள்ளை எழுதுகவர்.'

'இந்தப் பொடியன் நல்ல மூளகாரன். எவருடனும் அன்பாகவே இருப்பான்.

அப்துல் ஹமீதைப் பற்றிய நன்மாராயங்கள் பொலிஸாரின் செவிப்பறைகளில் தேனைப் பனித்துக் கொண்டிருந்தன.

'இவனப்பத்தி இந்தாக்கள் சொல்லுக எல்லாம் பச்சைப் பொய்யையா?'

'த்சீ, மூடு வாயை? உன்னிடக் கேட்டதே?, நீ ,அடய் புடய்' என்று ஏன் பேசுகினறனீர்?' கோபம் பூகம்பமாக வெடித்தது.

"...ஆ...பாருங்க ஸார். நீங்களெல்லாம் இப்படி இருக்கும்போது பேசுகின்றனள்....பிறகென்ன நடந்திருக்கும் யூகித்தறிந்து விடலாகமன்க. பிறிதொரு காலம், சா, வாழ் வென்றென்று வருமின்...'

'ஓம் தம்பி? 'ஓம்

அவளின் முகத்தினில் எள் போட்டால் பொரியலாமென்பதைப் பொலிசார் அறிவர்.

'உன் பெயரென்ன?' உபைதாவிடம் கடுமையாகத் தான்கணை விடுத்தார் பொலிஸ்,

ஈ ஓட்டும் சப்தம் கூட எழவில்லை.

'உம், நீ, பேசாமைநிக்கற? வயதென்ன? 23, ... பதைப்புடன் பதிலிறுத்துக்கொண்டு நின்றாள்.

எல்லோரும் கலகல என்று சிரித்தனர்.. சகிக்க முடியாத வலை தெறித்தது உபைதா உம்மா கருவதனத்தில்.

ஆள்ச் சின்னன் வயது 23 மூணே? எத்தினை புள்ளை' கேள்விகள் சுவாரசியமாக இருந்தன. பொலிசாரின் கரிசனைக் கிண்டல்.

'மூணு...' உபைதா 'சடுக்" கெனச்சொன்னாள் மீண்டும் 'கொல்' லெனச் சிரித்து விட்டனர்.

'என்னடி சிரிக்கயள்??' பின்னால் குழுமி நின்ற பெண்களில் வெடுக்கெனப் பாய்ந்தாள்.

பெண்களின் நகைப்பொலிகள் பொலிசாரின் செவிப்பறைகளைத் துளைத்துக் கொண்டிருந்தன.

'ஏ... என்ன கிடுகிடுப்பு...?'

சிறிது மௌனம்நிலவியது.

'தம்பி' நடந்ததெல்லாம் நடந்துவிட்டது. கோடுகச்சேரியெல்லாம் போறது நல்லாயில்லை, ஒரு குடும்பம், இப்ப இரண்டு தரப்பினரும் ஒற்றுமைக்கி வாருங்கோ? என்ன, மரக்கார் பேசாமை இருக்கிறயள்?'

முஹம்மது காசின் மரக்காயரை பொலிஸார் மத்திமாகப் பேசச் சொல்வது போலிருந்தது.

...'ஐயா, இந்தச்சனங்கள், என்ர பேச்சக்கேட்டிருந்தா, பொலிஸி ஸ்டேசனுக்கெல்லாம், ஏனையா வரவேணும்?' சினந்து தள்ளினார் மரக்காயர். அவரின் பேச்சு அப்துல் ஹமீதை மறைமுகமாகத் தாக்குவது போலிருந்தது.

விரிச்சென எழுந்தான் அப்துல் ஹமீத்.

'ஐயா' நான் சமாதானத்துக்குச் சம்மதம். ஆனால், இனிமேல் இவர்கள் என்னையோ, எனதாய் தந்தை உற்ற சுற்றத்தினரையோ இழிவாகப் பேச மட்டோமென்று; உங்களது முன்பாக ஒரு ஒப்பந்தம் எழுதித் தர வேணும்.'

அப்துல் ஹமீதை எரித்து விடும் விஷப்பார்வையாக உன்னி நின்றாள் உபைதா உம்மா.

'...ஐயா, இவன்த்தான் சொல்லுங்க, என்னை ஒரஞ்சாமே மானமா நடந்துக்கச் செல்லுங்க.

இவனுலே என்ர அல்லசல்ல குடியருக்க ஏலாதையா. ஒரே என்ன ஓரஞ்சிக்கிரிக்கான்...'

'சீ, வாயமூடு? வாயாடியாரிக்கின்றநீ?

உனக்குப் பத்துப் பதினைஞ்சி மூத்தவனை நீமரியாதை கெடப் பேசுகின்றநீ? உன்ட ஆணவப் பேச்சக் கேட்டாலே சமாதானப்பட மாட்டாய். கோட்டில வந்து கைகட்டி நிக்கப் போறிய நீ? அதுவும் புள்ளைத்தச்சி. உன்னைமாதிரி, இந்த மருதமுனையில ஒருபெண்ணைக் காணன்'

அன்று பொலிசார் விளக்கத்திற்கு வந்து கர்சித்துப் போய் அரை மணியேனும் ஆகவில்லை. உபைதாவும் அவளுடைய சகாக்களும் அப்துல் ஹமீதை மிகமிகக் கீழ்த்தரமான வார்த்தைகளை உபயோகித்து, தூற்றிக் கொண்டிருந்தனர்.

ஹமீத் பொறுமையைக் கடைப பிடித்துக் கொண்டிருந்தான். எல்லோரும் அவனைப் பயந்தான் கொள்ளி என்றுதான் பிரவாகித்து நின்றனர்.

கூட்டிவிட்டுக் கூத்துப் பார்க்க அதிகமானோர் முயற்சித்தனர். அப்துல் ஹமீத் அப்படி ஒன்றும் கைமாற்று மூளைகாரனில்லையே?

எவர் எதை எப்படிச் சொன்னாலும அப்துல் ஹமீதின் முகம் புன்முறுவலாகவே இருக்கும்.

எப்படியாக் கொத்த பக்தனுக்கும் பொறுமை உண்டு. அதற்கும் ஒரு எல்லை உண்டு.

இரண்டாம் முறையும் பொலிஸில் புகார் செய்து வந்தான் அப்துல் ஹமீத்.

'டபிள்கேஸ்' விசயமாதலால், உடனடியாகப் பொலிசார்கள் விளக்கத்திற்கு வந்தனர். எதிரிகள் ஓடி ஒழிந்து விட்டதும் ஏமாற்றமே.

'...நாளை மட்டும் எதிரிகளைப் பொலிஸ்ரேஸனில் எதிர்ப்பார்க்கிறோம. வரத் தவறினால்...' பல எச்சரிக்கைகளை முழங்கிவிட்டு பொலிஸார்கள 'ஜீப்பில்' பறந்து கொண்டிருந்தனர்

எதிரிகளுக்கு இடி விழுந்தாற்போல்...

உபைதாவும் அவளைச் சேர்ந்த பிரமுகர்களும் நாலைந்து வாடிக்கைக் கார்களில் விடிந்தும் விடியாததுமாகக் கல்முனைப் பொலீஸ் ரேசனுக்குப் பறந்தனர்.

பொலிஸார் இவர்களின் படை எடுப்பைக் கண்டு திகைத்தனர்.

'அப்படியா...உடனே 'வாக்'...' இவ்விசயத்தை அவதானித்த ஒரு பிரமுகர், சார்ஜனை அணுகி சட்டைப் பக்கட்டில் கரத்தைவிட்டு ஏதோ துருவி எடுத்து நீட்டினார்.

'...இது...சந்தோசம்...'

,நான்சன்ஸ், நாங்கென்ன லஞ்சக்காரரென்று எண்ணி எண்ணி இருக்கிறாய்? இவர்களையெல்லாம் 'லொக்காப்' பண்ணுங்கள்...' பொலிஸ் பங்களாவெல்லாம் சார்ஜனின் சிம்மக்குரல் ஒலித்தது.

சிங்கத்தின் வாயில் சிக்கிய மந்தைகள் தப்பிச் செல்லவா முடியும்

உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு கேற்றில் சாய்ந்துகொண்டு நின்ற அப்துல் ஹமீத் சுயநினைவுக்கு வந்தான்.

உபைதா உம்மாவும் அவளின் புருசனும் அப்துல் ஹமீதின் கல்விட்டு வளவுக்கு ஆசைப்பட்டனர். குடும்பச் சர்ச்சைகளால் முடியாமல் போய்விட்டது. ஈடு வைத்திருந்த வளவுறுதியை ஹமீதுக்குத் தெரியாமல் கையொப்பமில்லாமல் களவாகக் கையொப்பமிட்டு விற்று விட்டனர்.

பக்கத்து வீட்டுக்காரனுக்குத் தெரியாமல் எத்தனை நாளைக்குத்தான் மறைக்க முடியும். அறையிலாடியது அம்பலத்துக்குள்ளானது.

வேலி பயிரை மேய்வது போல ஒருவனின் சொத்துக்கு ஆசைப்பட்டு, ஐயாயிரம் ரூபா ஆதனப் பிணையில் உபைதாவும் சகாக்களும் பொலிஸ்ரேசனைவிட்டு வெளியாகினர்.

இன்று எல்லாருக்கும் 'சமன்ஸ்' வந்தன எதிரிகள் 'சம்மன்ஸை' வாங்க மறுத்தனர். அப்துல் ஹமீதுக்கு நல்ல காலமிருப்பதை யாரறிவார்.

உபைதாவின் வீட்டில் ஒப்பாரிச் சப்தம் சிறிது சிறிதாகத் தொடங்கி வானளவில் முரசெழுந்து கொண்டிருப்பது அப்துல் ஹமீதின் செவிப்பறைகளுக்கெட்டியது.

ஏதோ எழுதிக்கொண்டிருந்தவன், விசுக்கென மேசையை விட்டெழுந்து தெருக் கேற்றை நோக்கி துரிதமாக நடந்தான்.

"உர்...ர்...ர்' பொலிஸ் ஜீப்பின சப்தம் அப்துல் ஹமீதின் செவிகளிலிருந்து சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டிருந்தது.

'ஒன்ன நாசமத்துப் போவாய்.என்ரபுள்ளேரெட்டப் புள்ளப் பெத்தவளையும். மருமகனை...யு...ம்...மூத்த மருமகனை...யும்...பொலிஸிக் காரரெனக் ..கொண்டு ...வாந்து!...ஏன் ரா...நீ... ஏத்திச்...கி...கீ...போரு... ய்ய்...'

உபைதாஉம்மாவின்பெற்ற தாயாரின் ஒப்பாரிச் சப்தம் மட்டும்தான் இப்போது அப்துல் ஹமீதின் செவிகளில் வசைமாரியாகக் கேட்டுக் கொண்டிருந்தன.

புன்முறுவலுடன் அப்துல் ஹமீத் தெருவுக்கு நடந்த வேகத்தில் தன வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

(யாவும் கற்பனை)

## தமிழ் படமும் தங்கப் பதக்கமும்

# 'நியாயம் என்னைத் தேடி வரட்டும்'

### நானாக அதைத் தேடி போக மாட்டேன்

### திருச்சி விழாவில் கே. எஸ். ஜி. சூளுரை

நான் தயாரித்த 'என்ன தான் முடிவு' படத்திற்கு ஒரு பாராட்டுப் பத்திரம் கூட தரப்படவில்லை. இது குறித்து நான் அதிக கவலைப்படவில்லை. ஏனெனில் அரசாங்கப் பாராட்டை விட மக்கள் பாராட்டையே பெரிதென மதிக்கிறேன். எனினும் தமிழனுக்கு கிடைக்க வேண்டிய நியாயம் ஒரு நாள் தானாக என்னை தேடி வரத்தான் போகிறது. அப்பொழுது தமிழ்ப் படம் தங்கப் பதக்கம் பெறப் போவது நிச்சயம்' இவ்வாறு டைரக்டர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் திருச்சி தேவர் மண்டபத்தில் தமக்களிக்கப்பட்ட ஒரு பாராட்டு விழாவில் கூறியிருக்கிறார்.

கே. எஸ். ஜியைப் பாராட்டிப் பேசிய டி. கே. சண்முகம் அவரை 'திரையுலக அகத்தியர்' என்று வர்ணித்தார்.

கே. எஸ். ஜி மேலும் பேசுகையில் கூறியதாவது:-'நான் தயாரித்த 'என்ன தான் முடிவு' படத்துக்கு என்ன கிடைத்தது? தங்கப்பதக்கம் வேண்டாம். வெள்ளிப்பதக்கம்கூட வேண்டாம். ஒரு பாராட்டுப்பத்திரம் கூடவா அதற்கு கிடைக்கக் கூடாது?

'இந்தக்குறை நல்ல படங்களைத் தயாரிக்கும் மற்ற மாநிலங்களிலும் இருந்து வருகிறது. என்னைப்பொறுத்தவரை தங்கப்பதக்கத்தை விட, மக்



களின் பாராட்டைத் தான் பெருஞ்செல்வமாக மதிக்கிறேன்;

'தமிழனுக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தைப் பெற நானாகத்தேடிப் போக மாட்டேன். அதுதானாக என்னைத்தேடி வரும்வரை காத்திருப்பேன்'



கண்ணிறைந்த காதலன் ஒரு கன்னிக்குக் கிடைத்துவிட்டால் அவளது மகிழ்ச்சிக்கு ஈடேது? எல்லையேது?
—வி கே. ராமசாமி சொந்தத்தில் தயாரிக்கும் வி கே. ஆர். பிக்சர்ஸ் 'செல்வம்' படத்தில் பத்ம ஸ்ரீ கணேசனும், அழகி விஜயாவும்.

### கல்கியும் கலைவாணரும்

ஒரு சமயம் காலஞ்சென்ற பேராசிரியர் கல்கி அவர்கள் கலைவாணரின் வீட்டுக்கு சென்றிருந்தார்.

என். எஸ். கே., கல்கியை நாற்காலியில் உட்காரச் சொல்லி உபசரித்த பின்பு 'என்ன சாப்பிடுகிறீர்கள்? காப்பி கொண்டு வரச் சொல்லட்டுமா? அல்லது டீ கொண்டுவரச் சொல்லட்டுமா? என்று கேட்டார்.

கல்கி அவர்கள் சற்று யோசித்து விட்டு, 'டீயே மதுரம்' என்று கூறினார்.

கல்கியின் நகைச்சுவை, கலைவாணரைக் கவர்ந்தது.



கவர்ச்சி, கவர்ச்சி என்று ஆடைக்குறைப்பு செய்கிறார்கள் சில நடிகைகள். ஆனால் இதோ, நெற்றியில் குங்குமப் பொட்டும், தலைநிறையப் பூவுடனும் குடும்பப் பெண்ணாக காட்சிதரும் என்னிடம் உள்ள கவர்ச்சியை அவர்களிடம் காணமுடிகிறதா? என்று சவால் விடுகிறாரோ விஜயகுமாரி. படம்—சினிமாஸ் திரைகளில் அடுத்து வெளிவரவிருக்கும் ஏ. வி. எம். அளித்த வெற்றிப்படமான 'காக்கும் கரங்கள்'.

### பாரதியை பயமுறுத்திய பயங்கர விபத்து

பத்மினி பிக்சர்சாரின் 'எங்க பாப்பா' படப்பிடிப்புநடந்து கொண்டிருந்த நேரத்தில், ஒருவர் புதுமுகம் பாரதியிடம் சென்று, 'என்னம்மா நீங்கள் நடித்துக் கொண்டிருந்தபோது ஏதோ விபத்து நேர்ந்து விட்டதாமே' என்று கேட்டார்.

உடனே பாரதி, 'அதை ஏன் கேட்கிறீர்கள்? நான் உயிர் பிழைத்ததே அந்தப் பாண்டுரங்கன் அருளால் தான்' என்று பதிலளித்து விட்டு, அந்த விபரத்தை வருணித்தார்

'நான் கார் ஓட்டி வரும் காட்சி சாரதா ஸ்டுடியோவில் படமாக்கப்படவிருந்தது நான் சற்றுத்தொலைவிலிருந்து காரையோட்டி வந்தேன குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் 'பிரேக்' போட்டேன். பிரேக் சரியாகப் பிடிக்காமல் எதிரே இருந்த கமராவுடன் மோதி அங்கில் இருந்த பலமாத்தின் மீதும் மோதியது. மோதிய வேகத்தில் அப்பலமரமே சாய்ந்து விட்டது. என்



னால் பார்த்துக் கொள்ளுங்களேன் நானே 'பாண்டுரங்கா, பாண்டுரங்கா' என அலறி விட்டேன். கொஞ்சம் தவறி இருந்தால் கூட, 'ஹாண்டின் பார்' உடைந்து என நெஞ்சில் பாய்ந்திருக்கும். யார் செய்த புண்ணியமோ நான் அன்று பிழைத்துக் கொண்டேன். பாண்டுரங்கனின் அருளால் அப்படி எதுவும் நடக்காமல் காலில் மட்டும் சற்று காயம் ஏற்பட்டது. அந்த விபத்தை நினைத்தால் இன்றும் எனக்குப் பயமாக இருக்கிறது.' என்றார் பாரதி.

பன்னிரு—

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

னை அவர் வழங்குவது, யாது?

'இருள் திற முந்நீர்
வளை இய உலகத்து
ஒரு நீ ஆகித்
தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி'

என நக்கீரர் நமக்கு, கூறியாங்கு குன்றுதோறும் இடத்தில் பெருமையோடு மேன்மை வாய்ந்த அரிய பரி

சிலை சிவமாந்தன்மைப் பெரு வாழ்வினை வழங்கும் அவ்வள்ளலின் பன்னிரு கடந்தோளையும் பாததாமரைகளையும் பணிந்து வாழ்த்துவோமாக.

'புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து
நவையறு காட்சிநல்கி
என்னையும் அடியனாக்கி
இருளினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாத பங்கயங்கள் போற்றி'


# விரைவில் எதிர்பாருங்கள்!

## சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்!!



- முற்றிலும் இலங்கை நடிகர்களைக் கொண்டு இலங்கையில் தயாரிக்கப்பட்டது.
- தமிழகத் திரைப் படங்களுடன் போட்டியிடக் கூடிய தரமுள்ளது.
- பயங்கர சண்டைக் காட்சிகள், உள்ளங்கவர் காதல் காட்சிகள். இலங்கையின் இயற்கைக் காட்சிகள் அத்தனையும் உண்டு.

கலா பவன பிலிம்ஸ் அளிக்கும்

# 'கடமையின்எல்லை'



டைரக்ஷன்:
பி. எஸ். வோகநாயகம் பீ. ஏ.

# ஆங்கிலப் படங்களுடன் தமிழ் படங்களை ஒப்பிடலாமா?

## சண்டைக் காட்சிகள் எதற்காக இடம்பெறுகின்றன?

### எம். ஜி. ஆர். தரும் விளக்கம்

"தமிழ்த் திரைப்படங்களையும் ஆங்கிலப் படங்களையும் ஒப்பு நோக்கி, ஆங்கிலப் படங்கள் போல தமிழ்ப் படங்கள் இல்லையே என்று பலர் குறைப்பட ஆரம்பித்திருக்கிறார்கள். ஆங்கிலப் படத்தயாரிப்பாளர்களுக்குரிய வசதிகளும் வாய்ப்புக்களும் நம்மிடமில்லையென்பதுடன், அவர்கள் கலாசாரம் வேறு, நமது கலாசாரம் வேறு என்பதையும் குறை சொல்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் படங்களில் நமது கலாசாரத்தையும் பண்பையும் காணமுயற்சிக்க வேண்டுமே தவிர ஆங்கிலப் படங்களுடன் ஒப்பிடக் கூடாது" இவ்வாறு கூறுகிறார் மக்கள் திலகம் எம். ஜி. ராமசசந்திரன்.

அவர் மேலும் கூறுவதாவது:- "ஆங்கிலப் படங்கள் போல தமிழ்படம் இல்லையே என்று கூறுபவர்கள் ஒன்றைச் சிந்திக்க மறந்து விடுகிறார்கள். ஆங்கிலப படத்தயாரிப்பாளர்களின் வசதியென்ன? நம் வசதியென்ன? அவர்களுடைய பொருளாதார நிலை என்ன? நம்முடைய நிலை என்ன? இவைகளையெல்லாம் சிந்திக்கவேண்டும். ஆங்கிலப் படங்களில் அரைநிர்வாணக் காட்சிகளை ஏற்றுக் கொள்கிறார்கள். தமிழில், சோகம், ஹாஸ்யம், பண்பு, வீரம் எல்லாம்வேண்டியிருக்கிறது. அதற்கேற்ப படம் தயாரிக்கப்படுகிறது. இவற்றின் தரத்தையும், கலாசாரத்தையும், பண்பையும் காண முயற்சிக்க வேண்டுமே தவிர ஆங்கிலப் படங்களுடன் ஒப்பு நோக்குதல் தவறு.

சண்டைக்காட்சிகள் பற்றி புரட்சி நடிகர் கூறியதாவது: 'என்படங்களில் சண்டைக் காட்சிகள் அதிகம் இடம் பெறுகின்றன. அந்த நடிகரைப் போல நீங்கள் அமைதியாக நடித்தாலென்ன என்று பலர் யோசனை கூறுகிறார்கள். எனக்கு இதெல்லாம் பிடிக்காது. என்னிடம் இல்லாததை பிறரிடம் வாங்குவது கிடையாது. நான் வீணை அலட்டிக் கொள்ளாமல் இயற்கையாகவே பேசி நடிக்கிறேன்.

"இளைஞர்களின் உள்ளங்களில் வீர உணர்ச்சியை கிளப்பிவிட சண்டைக்காட்சிகள் மிகவும் தேவை. நான் நடிக்கும் படங்களில் சண்டைக் காட்சிகள் இடம் பெறுவதற்கு காரணம் அதுதான்.

"சினிமாப் படங்கள் வெறும் பொழுது போக்குச் சாதனமாக மட்டும் இருக்கக் கூடாது. அதை மக்களின் நன்மைக்கும் பயன்படுத்த வேண்டும். அறிவை, ஒற்றுமையை வளர்க்கவும் அதைச் சாதகமாகக் கொள்ள வேண்டும். இந்த தத்துவத்தையே என் படங்களில் பெரும்பாலும் கையாளுகிறேன்'



இப்பொழுது சினிமாஸ் திரைகளில் காட்சியளித்துக்கொண்டிருக்கும் 'பழநி' படத்தில் இலட்சிய நடிகரும், கவர்ச்சிக் கன்னி தேவிகாவும், காதலர்களாக வந்து கும்மாளமடிக்கிறார்கள்.

இவர்கள் இருவருக்குமிடையே





தகராறு என்பது உண்மையா? அடுத்த வாரம் நமது சென்னை நிருபர் விளக்குகிறார்

## 'சித்தி'

### இலவச குறுக்கெழுத்துப் போட்டி

### சரியான விடையும் பரிசு பெறுவோர் விபரமும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | த் | 2 தி | | 3 மீ | னு | ட் | 4 சி |
| த் | | 5 வி | 6 ஜ | ய | ஸ்ரீ | | வா |
| 7 ரா | 8 ணி | | ன | | | 9 வி | ஜீ |
| | 10 ரா | 11 தா | | 12 சு | 13 சி | லா | |
| 14 அ | தி | சி | ற | ந் | த | | 15 நி |
| பா | | | | 16 த | ம் | ம | ர் |
| 17 ர | 18 பா | 19 தி | | ரி | ன | | ம |
| 20 ம் | ச | பா | ஆ | | | 21 நி | லா |

முற்றிலும் சரியான விடைகளை அனுப்பிய நேயர்களில் முதலாவது பரிசான 6 மேல் வகுப்பு டிக்கெட்டுகளைப் பெறும் அதிஷ்ரீடசாலியான நேயர்,

இ. ஆறுமுகம்
தாவடி, கொக்குவில்.

இரண்டாவது பரிசாகிய 4 மேல் வகுப்பு டிக்கெட்டுகளைப் பெறும் அதிஷ்டசாலி நேயர்,

ஆறுமுகம் இரத்தினசிங்கம்,
உள்ளூராட்சி அலுவலகம், வவுனியா.

மூன்ருவது பரிசாகிய 3 மேல் வகுப்பு டிக்கெட்டுகளைப் பெறும் அதிஷ்டசாலி,

செல்லத்துரை அன்ரனி,
42, வித்தியாலயம் வீதி, திருகோணமலை.

ஆறுதல் பரிசாக தலா 2 மேல் வகுப்பு டிக்கெட்டுகளைப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளும் வருமாறு:

மகாலட்சுமி யோகானந்தம்,
16, டிக்மன்ஸ் வீதி, பம்பலப்பிட்டி.

வி. கு. பாலகுமாரன்,
'ஞானதெனி' வல்வெட்டித்துறை.

யோகநாதன் நடராசா,
4, இராசவல்லி லேன், கொழும்பு-6

சித்தி போட்டியில் கலந்து கொண்ட அத்தனை பேருக்கும், சிலோன் என்டர் டெயின் மண்ட்ஸ் ஸ்தாபனத்தாரும் சுதந்திரன் நிறுவனத்தினரும் நன்றி தெரிவிக்கின்றனர்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

## விமானியாக ஆசைப்பட்டேன் காதல்மன்னனுக மாறினேன்

### ஜெமினிகணேசன் தரும் சுவையான தகவல்

'நான் எனது இளம் வயதில் ஒரு விமானியாக அல்லது டாக்டராக வர வேண்டுமென்று விரும்பினேன். ஆனல் விதி என்னை சினிமா உலகிற்கு துரத்திவிட்டது' என்று கூறுகிருர் காதல் மன்னன் ஜெமினி கணேசன்.

நீங்கள் டாக்டர், அல்லது விமானியாக இருந்திருந்தால் உங்களுக்கு சிறந்த மனநிறைவு ஏற்பட்டிருக்குக்குமா? என்று அவரிடம் கேட்ட போது அவர் பின் வருமாறு சொன்னர்.

'இல்லாத ஒன்றைப் பற்றி ஊகிப்பது கடினம் ஆனல் ஆத்மதிருப்தி என்பது மிகவும் அரிதாகும்; ஒருவர் வாழ்க்கையை எதுவாக்குகிருர் என்பதைப் போன்றே வாழ்க்கையில் என்ன நிலையில் இருக்கிருர் என்பதும் முக்கியமானதன்று. நான் ஏழைக் குமாஸ்தாவாக இருந்தாலும், மகிழ்ச்சியுடன் இருந்திருப்பேன்'

"ஒரு தத்துவ ஞானியைப் போன்று பேசுகிறீர்களே" என்று கேட்ட போது, அலு



மாரியில் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தக வரிசைகளை ஜெமினிகணேசன் சுட்டிக் காட்டி, "எனக்கு மகிழ்ச்சியின் பொருளைக் கூறும் தத்துவ ஞானிகள் அதோ அங்கே இருக்கின்றனர். நான் அவர்களுக்கு பெரிதும் கடமைப் பட்டவன்' என்றார்;

'படங்களில் நுழைந்தவுடன் நான் கற்பது நின்றுவிடவில்லை. உண்மையில் இத் தொழிலை நான் பரந்த அறிவிற்குச் செல்லும் வாயிலாகவே எடுத்துக் கொண்டிருக்கிறேன். நான் வாழ்க்கையில் பலவற்றைக் கற்க படத் தொழிலில் எனக்குள்ள தொடர்புகள், வாய்ப்பளிக்கின்றன' என்றும் கூறினர்.

ஜெமினிகணேசன் இப்பொழுது ஓய்வான நேரங்களில் இந்தி படித்து வருகிருர். ஏன் இன்னும் ஹிந்திப் படத்தில் நீங்கள் நடிக்கவில்லையென்று கேட்டபோது அவர் அளித்த பதில்!—

'நான் தமிழனுக இருப்பதால் ஒரு டைரக்டர் எதிர் பார்க்கக் கூடிய அளவிற்கு கூடியமட்டிலும் நன்கு இந்தி பேச முடியாது. அதற்கு பழக்கம் வேண்டும். இந்தி மொழி அறிந்தவர்களுடன் பேசும் வாய்ப்பும் எனக்குக் கிடைக்கவில்லை."

# பாரதி பாடல்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தினர், போதி மதத்தவர் முதலானோர் தமது சமயங்களைப் பரப்ப வேண்டி, தமிழர்களின் செய்முறைத்தொழில் நிகழ்ச்சிகளை எண்ணி, கடிந்து, மறப்பதற்கும் வழி கூறிப் பாடி வைத்தனர் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் அதிகப்படியானவை அற நீதிகளைக் கொண்டவையாக இருப்பதே இதற்குச் சான்று அவற்றுட் பரவிவரும் அடிகளும் நினைவுக்குரியன. மற்றுமகொலைத்தொழிலற்ற உழவுத் தொழிலை மேற்கொண்டவர்கள் உயர்த்தப்பட்டதும் இதனலாகும். ஏனைய தொழில்கள் பாவச் செயல்களுக்குப் பலனைக் கொடுப்பவையாக இருந்தமையால் திருக்குறள் என்னும் பொது இலக்கியங் கூட, அதனை ஏனையவற்றிலும் பிரித்துஉயர்வுகூறியது.

## இது போல எங்குமில்லை

இச் சூழ்நிலை சாதி என்ற சமூகப் பிளவைக் கொடுத்தது. வேளாண்மை செய்த வேளாளர் (வெள்ளாளர்) உயர்ந்தவராஞர்கள். ஏனையோர் இழிந்தவராஞர்கள். பின் வந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் வைதிக சமய விருத்தி வேண்டி, அனைவரும் சமம் என்னும் அரிய தத்துவத்தை நிலைநாட்டத்தொடங்கினர்கள் எனினும் பிற்பட்ட காலங்களில் தமிழ் நாட்டில் சாதிமுறைபாராட்டப்பட்டதுபோல், அதனல் உயர்ந்தவர் எனப்பட்டவர் ஏனையோர்க்கு இழைத்த இன்னல்கள்போல், உலகில் எந்த நாட்டிலுமே, ஏன் உரோமாபுரியிலுமே நடக்கவில்லை.

அந்நியர்க்கு அடிமைப்பட்டுவிட்ட தமிழர்கள், தமக்குள்ளேயே இழிந்தவர்கள் என்ற வகுப்பினரை, சமூக வரம்புகளை, கொடுமைகளை, தமிழினத்தின் சாபக் கேடுகளை வைத்திருப்பதை அரசியல் ரீதியிலும், மனிதாபிமான அடிப்படையிலும் விரும்பாத பாரதியார், ஔவையாரும், பலரும் சொல்லி அலுத்துவிட்ட சாதியை ஒழிக்கப் பாடுபட்டார்.

ஜாதி மதங்களைப்
பாரோம்—உயர்
ஜன்மம் இத் தேசத்தில்
எய்தின ராயின்
வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும்
ஒன்றே
னைப் பறையர்க
ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங்
கிருப்பவர் அன்றோ?
சீனத்த ராய்விடு
வாரோ?—பிற
தேசத்தர் போற்பல
தீங்கிழைப்பாரோ?

என்று பாரதியார் கேட்பதும் எம்மைத்தான். செந்தமிழ்ச் சுவை சிந்தி, தேசியத் தேன் கலந்து, இலக்கிய இன்பமும் நிறைந்த எத்தனையோ பாடல்களைப் பாரதியார் எழுத முன், எழுதிய முதல் பாடலிலேயே, காலங் காலமாக நிலைத்து வந்து தமிழரின் தலைவிதியையே மாற்றியமைத்த சாதியைப் பற்றியே குறிப்பிடுகின்ருர். இந்த அநீதி இன்று மறைவதைக் காணும் பொழுது, பாரதியாரின் சமூக விடுதலை நெஞ்சில் நிறையும்.

## இலக்கிய உலகில் பாரதி

இலக்கிய மரபில் பாரதி செய்த புதுமை, இருபத்தாறு நூற்றாண்டுகளாக வளர்ந்து வரும் தமிழில் யாரும் செய்யவில்லை. பொருள் மரபு, யாப்பு மரபு, மொழி மரபு, ஆகிய மூன்று துறைகளிலும் பாரதியார் புது முறைகளைக் கையாண்டுள்ளார்.

பொருளை நோக்கும் பொழுது, காவியங்களிலே நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு என்று சிறப்புக்களையே பாடி வந்தனர் பழந்தமிழ்க் காவியப் புலவர்கள். பாரதியார் நாடு—அது எத்தகையது?—பெற்றவளுக்குச் சமமானது! எனப் பலவாறு; தன்மை, வினு, பதில் இனைய அடிப்படையில் பாடல்களை செய்துள்ளார்.

அகத்திணை இலக்கியங்களில் நிறைந்துள்ள காதல், தன்னிகரில்லாத் தலைவன் தலைவியர் (கலித் தொகை தவிர்ந்த ஏனைய அகப் பாடல்கள்) நிகழ்ச்சிகளாகவே வெளிப் படுத்தப்பட்டது. அவர்களுடைய காதலுக்கு இயற்கைத் தடைகளான ஆறுகள், அகழிகள், நரிபலி கொள்ளும் மிருகங்கள் முதலியன இருந்தனவே, அன்றிச் சமூகத் தடைகள் எதுவும் இருக்கவில்லை. ஆனல் பாரதியாருடைய பாடல்களில் அன்று அகப்புறமாகக் கருதப்பட்ட ஆசை உணர்ச்சியும் உள்ளது. '...பெருந்தோட் குறுமகள் சிறுமெல்லாகம், ஒரு நாள் புணரப் புணரின் அரை நாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே...'' என்று தலைமகன் சொல்வதாகக் குறுந்தொகைப்பாடல் ஒன்று கூறுகினறது. பாரதியாரோ,

கூடிப் பிரியாமலே-ஓரிரவெல்
லாம்
கொஞ்சிக் குலாவியிங்கே
ஆடி விளையாடியே - உன்றன்
மேனியை
ஆயிரங் கோடி முறை
நாடித் தழுவி மனக்குறை -
தீர்ந்து நான்
நல்ல களி எய்தியே
பாடிப் பரவசமாய் நிற்கவே
தவம்
பண்ணிய தில்லையடி!

என்று பாடுகின்ருர் அதுவும் காதற்பாட்டுத்தான்; இதுவும் அஃதே; ஆனல் இரு பாடல்களும் இருவேறுபட்ட மன உலகங்களைச் சித்திரிக்கின்றன.

## பாடல்களில் புரட்சி

பாரதியார் கையாண்ட யாப்புமுறை புதியது. நாயன்மார்கள் மக்கள் மனதில் எளிதிற் பதியவேண்டி விருத்தப்பாவைக்கையாண்டனர். இப்பாவினம் முன்னைய யாப்புகளிலும இனியதும், இளகியதுமாகும். பாரதியார் நாடோடிப்பாடல்மெட்டுக்களையும், அவை சான்ற இந்து, தெம்மாங்கு முதலிய இன்னிசை யாப்புக்களையும் பெரிதும் விரும்பிக் கையாண்டார். இனிய தமிழின் எளிய நடையில், புதிய முறையில் பழமையையும், புதுமையையும் இணைத்து; புதுமையையும் புரட்சியையும் புகுத்தி எழுந்த பாடல்கள் பாரதியாருடையவை.

அவர் வழியில் இன்று ஆயிரவர் சென்றுவிட்டனர். அவரது அடியானகத் தம்மைக் கொண்ட பாரதிதாசன் வெற்றியே, பாரதியார் பாடல்களின் வெற்றியாகும்;

அகராதி பார்த்து அறி பொருள் தேட வேண்டாத சொற்கள் பாடல்கள் தோறும் பயின்று வருவது மற்றெரு சிறப்பாகும்.

இவை தவிர, பாரதியார் வகுத்த பாதை, 'பெருங்காப்பிய நிலை பேசுங்கால்' என்று தொடரும் பெருங் காப்பிய இலக்கணச் சூத்திரத்தை (இதன் மூலம் வடமொழி; தமிழாக்கம் தண்டியலங்காரம்) முன் வைத்த கவிதை பாடுவதை விடுத்து, கலை நெஞ்சிற் குடி கொண்ட கற்பனையை, பயில்கின்ற மொழியிலே பாடுவது தான் பண்பு என்று சென்றது. அவ்வழிச் சென்ற கவிஞர்களுள் பாரதிதாசனுடன், கவிமணி தே. வி., நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுக்கு அர்ஙனம் வழிகாட்டியவை தாம், பாரதியாரின் காவிய முப்பெருங் கோயில்களான 'கண்ணன் பாட்டு' 'குயில் பாட்டு', 'பாஞ்சாலி சபதம்' ஆகியவை.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, களுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

**நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11**


## மத்திய வங்கி ஆண்டறிக்கை (63-64) மக்கள் பார்வைக்கு கிடைக்கும்

இலங்கை மத்திய வங்கி 1963 - 64-ம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கையின் தமிழ் மொழிப்பெயர்ப்பு நீண்ட நாளைய முயற்சியின் பின் இப்பொழுது வெளியாகியிருக்கிறது. இவ்வறிக்கையைப் பெற விரும்புபவர்கள் செயலாளர், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு' என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

நாட்டின் பொருளியல் விபரங்களைத் தெரிந்துக் கொள்ள விருப்பமுடையவர்கள் அனைவருக்கும் இவ்வறிக்கைபெரும் துணையாக இருக்கும். குறிப்பாக பொருளியல் கற்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இது ஒரு துணை நூலாகும்.

# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

—வி. கந்தவனம் பி. ஏ.—

### 1. கடவுள் வணக்கம்

வையம் அடி பணிய
வாழும் உயிர்க் கவிதை
செய்ய அருள் புரியும்
மெய்யன் விளங்கு மெழில்
ஐயன் ஞான குரு
யானை முக னடிகள்
எய்தி அருகிருக்க
ஏற்றிக் கவி எடுப்பேன்!

### 2. அவையடக்கம்

கெம்பும் உணர்வுகளைக்
கிண்டிக் கிடைத்த பொருள்
செம் பென்றுலுமதைத்
தீட்டி உயர்ந்த தங்கக்
கம்பி யாக்கிக் கவி
கட்டும் கனத்த புகழ்
அம்பி அவைத் தலைவ
ஆன்ற கவிஞர்களே!

கற்ற பெரியவர்கள்
கன்னித் தமிழ் வளர
உற்ற வழிவகைகள்
ஊட்டும் உயர்ந்தவர்கள்
வெற்றிச் செயல்புரியும்
வீரர் குழுமியுள்ள
மற்றும் அனைவருக்கும்
வணக்கம் செலுத்துகிறேன்!

### 3. நன்றி

தமிழெங்கள் உயிருக்கு நேரென்ற அடியைத்
தலைப்பாகத் தந்திங்கு கவிபாடு மென்று
தமிழரசு வாலிபர்கள் தகவான வாய்ப்பைத்
தந்தார்கள் அவர்க் கென்றன் கனிவான நன்றி!

### 4. தமிழ் எங்கள் உயிருக்கு நேர்?

ஐயகோ இதை யாரிடஞ் சொல்வேன்
யாரும் நம்வருங் காலத்து மக்கள்
உய்வதாய் ஒரு நற்செயல் பற்றி
உணர்கி ருரிலை ஓ! என்ன செய்வேன்!
செய்வதே தமெனெல் லாமென ஒன்றும்
தெரிகிலார் இவர் சிந்தனை என்னே
வையகம் புழி யாரினிற் போடும்
வாழ்க்கையில் உயர் நோக்கங்கள் வேண்டும்!

நானும் ஓர்வழி சென்றிங்கு வாழ்ந்தால்
நல்லதே யது போதுமென் றெண்ணி
பேனும் மூட்டையும் போல உறிஞ்சிப்
பெற்றி விட்டிவர் வாழ்வது மேனே
ஏனிப் போக்கிதன் உட்பொருள் என்ன
எம்மவர் குணம் இப்படி உண்டோ
மானம் என்பது உண்மையில் இல்லை
மாட்சி நம்மவர்க் கண்மையில் இல்லை!

ஏடு கண்டத மிழர்கள் வேறு
இன்று வாழ்பவர் முற்றிலும் வேறு
நாடுங் காரணம் நாதென்று சொல்வேன்
நல்ல வீரர்கள் போர்களில் அன்று
பீடு கண்டு மடிந்திட மெள்ள
ஓடிச் சென்றொழித் தோர்களின் கூட்டம்
பேடி யாய்ப்பெருக் கானது கண்டீர்
பெரிய சான்றிவர் பெற்றியில் உண்டே!

தக்க நற்றமிழ்ப் பண்புகள் இன்றி
தமிழர் என்றிவர் தங்களைச் சொன்னல்
மிக்க நற்பெரும் இலக்கியங் கூறும்
விஞ்சு தண்டமிழ்ப் பண்புகள் யாவும்
இக்கணத்தினிற் பொய்யெனப் போகும்
ஏடு கண்டவை இப்பொழு தில்லை
மொக்கு மூடர்கள் பண்டியின் பண்பை
முக்கிக் கட்டி யெழுப்புவ தேனோ?

நீறு தாங்கிய நெற்றியுங் கண்டோம்
நீசராய் இவர் வாழ்வதுங் கண்டோம்
கூறு போட்டுநம் பேர்குடி தன்னைக்
குலைக்க ஒற்றுமை குன்றிடக் கண்டோம்
வீறு கொண்டவர் வேலைக ளெல்லாம்
வீண ராலுடன் வீழ்வதுங் கண்டோம்
சிறி நாயொரு சிங்கமென் றுலோ
தீர்ப்ப ளிக்கொடுந் தீயவர் தம்மை!

நற்றமிழ் மொழி நற்பணி யென்றால்
நன்றெ னத்திரண் டொன்றெனக் கூடி
உற்ற வப்பணி வெற்றி நிலைக்க
ஊன்றி நின்றுழைக் காதது மேனோ
கற்றவர் கெட்ட காலங்கள் வந்தும்
கண்டிலர் செய்யுங் காரிய மிங்கே
ஒற்றுமைக் குணம் விட்டிவர் வேறாய்
ஓடுதல் பெருந் தன்னல மன்றோ?

பின்னலே இவர் வேலைக ளெல்லாம்
பின்னர் நீரிருந் தேங்குவ துண்மை
இன்னல் இக்கணம் ஏகிடச் செய்வீர்
என்ன போக்கிதை இன்றுடன் விட்டே
பன்னலம் எங்கள் பைந்தமி ழர்க்காய்ப்
பயக்கும் நல்லொரு பாதையிற் செல்வீர்
தன்னலக் குணஞ் சாகிடின் இங்கே
தண்ட மிழ்மொழி வாழ்ந்திடுங் கண்டீர்!

*(தமிழரசு வாலிப முன்னணி மாநாட்டுக் கவியரங்கில் கவிஞர் அவர்களால் 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ற தலைப்பில் பாடப்பட்ட கவிதையின் முதல் பகுதி இது. ஏனைய பகுதிகள் தொடர்ந்து வெளிவரும்.)*

## ஜீ. ஜீ. யின் ஐ. நா. விஜயம்

# இந்த நேரத்தில் அவசியம் தானா?—!

## பெருந் தலைவர்களைப் பின்பற்ற அவர் தவறிவிட்டார்

நேற்று முன்தினம் எனது காரியாலயத்தில் உட்கார்ந்து கொண்டு இவ்வாரம் என்ன எழுதலாமென்று யோசித்துக் கொண்டிருந்தேன். திடீரென அறைக்கதவை இடித்துத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார் நண்பர் ஒருவர். வேர்க்க விறுவிறுக்க வந்தவர் எனக்கு முன்னிருந்த ஆசனம் ஒன்றில் தொப்பென்று விழுந்தார். மேல்மூச்சுக் கீழ்மூச்சாக வாங்கிக் கொண்டிருந்தது.

'ஓய், நிருபரே, போயும் போயும் இந்தப் பெரியவருக்குத்தான் புத்தியில்லையென்றால் நீராவது சொல்லக்கூடாதா? இல்லை,நல்லாகப் படித்தவர் கியூ. ஸி. பட்டம் பெற்றவர், சொலிசிற்றர் ஜெனரல் உத்தியோகம் பார்த்தவர், என்றெல்லாம்நினைத்து ஒரு அமைச்சரை வைத்தோமே, அவராவது சொல்லக்கூடாதா? அவர்தான் போகட்டும், இந்தப் 14 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பினோமே, அவர்களாவது பெரியவருக்குப் புத்தி சொல்லக் கூடாதா?......' என்றெல்லாம் அடுக்கிக் கொண்டு போனார் வந்த நண்பர்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை, 'என்ன விஷயம், அமைதியாக விருந்து,பதருமல் சொல்லுங்கள் விஷயத்தை' என்றேன்.

'என்ன விஷயமா? சி. சி. பொன்னம்பலம்அமெரிக்காவுக்கு ஐக்கிய நாடுகளுக்கு போகிறாராம், பேப்பர்களெல்லாம் படங்களைப் போட்டு வெளுத்து வாங்குகின்றன. நீரென்னவென்றால் ஒன்றுந் தெரியாதவன் மாதிரி பக்தா இதுதானு பூலோகம் என்கிறீர்' என்று என்மேல் வாய்வைத்தார் நண்பர்.

'ஓஹோ, அதுவா? அதென்ன, சி. சி. பொன்னம்பலம் என்கிறீர். அவருடைய சரியான பெயர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அல்லவோ?

ஓய், திருபரே, எனக்கெந்தக் கூடுவிட்டுக் கூடு பாய்கிறவன்களுடைய கதையொன்றும் வேண்டாம். நான்மேடைப் பிரசங்கியாவதற்குத் தமிழரசுக் கட்சியில் சேர்ந்தவனல்ல, அல்லது தமிழரசுக்கட்சியின் செல்வாக்கென்னும்நிழலிலே ஒன்றிப் புத்தகமெழுதிச் சம்பாதிப்பதற்காகச் சேர்ந்தவனுமல்ல, சொந்த நலன்களைத் துச்சென மதித்துத் தியாகத்தீயிலே புடம் போடப்பட்ட ஆயிரமாயிரம் மறத்தமிழர்களில் ஒருவன் நான். எங்களுக்கெல்லாம் மனம் கொதிக்கிறது. திராதிரெனக் கூறப்படும் பொன்னம்பலம் சென்றமுறை ஐ. நா. சபைக்குப் போய்விட்டு வந்து, யானைகாட்டி ஆட்களைச் சேர்த்து தனது வீரப்பிரதாபங்களைப் பற்றிப்பாடச்செய்தார்.

மக்கள் ஏமாறவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனாலும் அவரது தாஸர்கள் தங்கள் வாலை ஆட்டிக்கொண்டு பொதுமக்களை மடையர்கள், ஏமாந்த சோணகிரிகள், செம்மறிகள் என்றெல்லாம் நினைப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.

இந்தமுறையும் போகிறார், திரும்பி வந்து என்ன பல்லவி பாடப் போகிறாரோ! வெள்ளை மனம் படைத்த அப்பாவிகள் இந்தப் பொன்னதாஸர்களுடைய வாலாட்டத்திலே எடுபட்டுத் திகைக்கும் பொழுது அவர்களுக்கு விளக்கம் சொல்லிச் சமாதானப் படுத்த வேண்டுமே அதுக்காகத் தான் சொல்லுகிறேன்.ஏன் இந்தத் தலையிடி?

எங்கள் தமிழரசுத் தலைவர்கள் முடியாது என்று சொன்னால் இவர் போக முடியுமா? சென்ற முறை ஒரு நோக்கத்துக்காக, இவர் இலங்கைக்கு வெளியேயிருந்தால் தமிழ் பேசும் மக்களின் நன்மைக்கு உதவியாயிருக்கும் என்று நினைத்து, சரி போகட்டும் என்று சம்மதம் கொடுத்தார்கள். இப் பொழுது எதற்காகச் சம்மதம் கொடுத்தார்கள். இப் பொழுது எதற்காகத் தலையிடியைத் திருப்பவும் விலைக்கு வாங்க வேண்டும்...' என்று அளந்து கொட்டிக் கொண்டு போனார் நண்பர்.



விஷயத்தை விளக்கி சிரித்துக் கொண்டே நண்பரைச் சமாதானப் படுத்தி அனுப்பினேன்.

### அரசியல் சிக்கல்

உண்மைதான், இந்த நண்பரைப் போல நினைப்பவர்கள் பலருண்டு. நமது தமிழ் பேசும் மக்கள் அரசியல் ஞானம் நிரம்பப் படைத்தவர்கள். நல்ல அரசியல் அவதானிகள். இருந்தாலும் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள், சிலர், தங்கள் பேச்சு வன்மையால், நடிப்புத் திறமையால் பகட்டுப் படாடோபங்களினல் அப்பாவி மக்களைத் திகைக்க வைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இந்தச் சந்தர்ப்பங்களில் உண்மையை எடுத்து விளக்கி, மக்களை நல்வழிப் படுத்தி, இலங்கையின் அரசியல் நிலையை விளங்க வைப்பது அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது.

இலங்கை அரசியல் வானிலே, மிகவும் சிக்கல்கள் நிரம்பிய நெருக்கடியான காலம் இது. ஒரு பக்கம் வாழ்க்கைச் செலவு இன்னும் குறைந்த பாடில்லை. அன்னிய செலாவணிச் சேமிப்பு அதாள பாதளத்தில் விழுந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யப் போதிய பணமில்லை. உற்பத்தி ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. மறுபக்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் இன்னும் முற்றாகத் தீர்ந்தபாடில்லை. மொழிப் பிரச்சினையில் அநீதி மேலும் வளர்ந்து கொண்டு போகாதவாறு ஓரளவு தடுத்து நிறுத்தப்பட்ட போதிலும் முற்றாகத் தீர்ந்து விடவில்லை. நமது இழந்த உரிமைகளை மீண்டும் முற்றாகப் பெற்று விடவில்லை. ஒரு சிறிதளவேனும் மக்களுக்குச் சுயாதீனம்

நமது நிருபர்

வழங்கக்கூடியதென்று கருதப்படும் மாவட்ட சபைகள் இன்னும் நிறுவப்படவில்லை.

இன்னுமொரு பக்கம் பார்த்தால் எங்கே தருணம் வரும், அரசாங்கத்தைக் கவிழ்த்து வீழ்த்தி, அரசாளும் அதிகாரத்தைக் கைப்பற்றிச் சர்வாதிகார ஆட்சியை ஸ்தாபிக்கலாம் என்று இலவுகாத்த கிளி போல் காத்துக் கொண்டிருக்கிறார்கள் கூட்டாட்சி எதிர்க்கட்சியினர். அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்து வருகிறது. சர்வாதிகார ஆட்சி வருமாயிருந்தால் தமிழ் பேசும் மக்களும் சிறுபான்மை மக்களும் இந்த நாட்டில் வாழ்வதைவிட இந்துசமுத்திரத்தில் தஞ்சம் புகுவது எவ்வளவோ மேன்மையானது.

இந்த நிலையிற்றான், நமது நாட்டின் அரசாளும் அதிகார பொறுப்பை ஏற்றுக் கொண்ட தலைவர்கள் இலங்கையில் இருந்து இந்த மண்ணிலே செயலாற்றுவதே தமது தலையாய கடமை என்று கருதுகிறார்கள். தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமைக்குரலை எழுப்பி தமக்கும் விடிவு காலத்தைப் பெற்றுத் தருவதற்காகத் தெரிந்தெடுத்து அனுப்பிய தமிழரசுத் தலைவர்கள் தமது பொறுப்பை ஓர் ஆயுட்காலச் சேவை எனக் கருதுகிறார்கள். அதை இந்த நாட்டிலேயிருந்து சாதிக்கலாமேயன்றி உலகம்சுற்றியல்ல என்பதை உணருகிறார்கள்.

மூஞ்சூறு தான்போக வழியைக் காணவில்லையாம் விளக்கு மாற்றுக் கட்டைக் கூடச் சேர்த்துக் கொண்டு போச்சுதாம் என்ற முதுமொழியில் உள்ள அறிவுரையை நன்றாக விளங்கியவர் நமது பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா. நமது நாட்டில் பிரச்சினைகளைத் தீர்க்கவழியைக் காணவில்லை, உலக நாடுகளுக்கு உபதேசம் செய்வதில் பயனில்லை என்பதை நன்றாக உணருகிறார். ஆகவேதான் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டுக்கு லண்டன் செல்லாமல் இங்கே தங்கியிருக்கிறார். இதே போலத்தான் பாரதப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி இந்தியாவிலே தங்கியிருக்கிறார். இதே போல,பாகிஸ்தான் ஜனாதிபதி மார்ஷல் அயூப்கான் பாகிஸ்தானிலே இருந்துவிட்டார்.

இது ஒரு புறமிருக்க, சர்வதேச நிலைமைதான் என்ன? இன்று ஐக்கிய நாடுகள்சபையானதுபள்ளிக்கூடப்பையன்கள் சேர்ந்து நடத்தும் விவாதச்சபையொன்றைப்போல வதாயிற்று. பேச்சுவன்மை படைத்தவர்கள் விளாசித் தள்ளுவதற்கு ஏற்றதோர் அருமையான மேடை, திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்றவர்கள் விரும்பக்கூடிய இதைவிடச் சிறந்த மேடைஇருக்கமுடியாது. இந்தச் சபை காரியத்தில் எதையும் சாதித்துவிட முடியாத நிலை சர்வதேச அரசியல் வானில் ஏற்பட்டுள்ளது.

வியட்நாம் விசயத்தில் உலக வல்லரசுகள் எவருடையபுத்திமதியையும் கேட்கப்போவதில்லை. காஷ்மீர் பிரச்சினையில் பாரதம் என்றாலும் சரி பாகிஸ்தான் என்றாலும் சரி கொஞ்சமும் மசியப்போவதில்லை. காங்கோப் பிரச்சினையில் சமாதானத் தீர்வு காண்பது அரிதாகிவிட்டது. செஞ்சீன ஐ. நா. சபையில் அங்கத்துவம் கேட்டு மன்றாடப் போவதுமில்லை. அமெரிக்கா அதற்கு விடப் போவதுமில்லை. இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றிலும் வருசக் கணக்காக உழைத்து அரும்பாடு பட்டுவந்துஇன்று மனமுடைந்த நிலையிலே பொதுக் காரியதரிசி பதவி வேண்டாம் என்று ஊதாண்ட் விலகுவதே இதற்கு சான்று.

எல்லாரும் ஏறி இளைத்த குதிரையிலே சக்கிடுத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தாராம் என்ற தமிழர்பழமொழியை நமது ப்ரதம மந்திரி நன்றாக அறிவார்.

'இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் தீர்வுகாண வேண்டும். அதற்காக தான் அமெரிக்கா போகிறேன். என்னைத் தெரிந்தெடுத்தது யாழ்ப்பாணத் தொகுதி மக்களைக் கௌரவித்தது ஆகும்' (என்று தொகுதி மக்கள் சொல்லவில்லை, பொன்னம்பலம் சொல்லுகிறார்) என்று மார்புதட்டிக்கொண்டு திரு. பொன்னம்பலம்சென்றாலும் நமது பிரதமர் கனவு உலகத்தில் வாழவில்லை.

சர்வதேச அரங்கிலே தத்தம் ஆதிக்கத்தை நிலைநாட்டும் ஒரே நோக்கத்துடன் வல்லரசுகள் மோதிக்கொண்டிருக்கும் விசயங்களில் இலங்கைபோன்ற சிறு நாடுகள் என்னசெய்யமுடியும்? எந்தப்பக்கத்துக்காகத்தான் பேசுவது? வல்லரசுப் போட்டிகளில் கலந்துகொள்ளாமல் நாம் நடுநிலைமை வகித்துக்கொண்டிருக்கிறோம். இராஜதந்திர சம்பிரதாயப்படி நமது நாட்டின் கொள்கை நிலைமையை பிரதமர் சொல்லிக்கொண்டிருக்கிறபடி அந்த அரங்கத்தில் சொல்லிவைக்க வேண்டும். இதற்கு யாரோ ஒருவர் தலைமையில் ஒரு கோஷ்டி போக வேண்டும்.

நல்ல காரியங்கள் செய்வதற்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்களை மேல்வீட்டுக்குக் கட்டியனுப்பி விடுங்கள் என்று சொல்வார்கள். ஆடம்பரம், பதவி, வெளிப்பகட்டு, இவற்றில் மோகங்கொண்டவர்களுக்கு இவற்றைக் கொடுத்து திருப்திப்படுத்துவது இராஜதந்திரங்களில் ஒன்று. அழுகின்ற குழந்தை கையில் சூப்பியைக் கொடுப்பதுபோல.

இதை எழுதும்பொழுது 19 வருடங்களின் முன் நிகழ்ந்த சம்பவம் ஒன்றுதான் எனது நினைவுக்கு வருகிறது. 1949ம் ஆண்டு பொதுத்தேர்தலின்பின் மந்திரிசபை அமைக்கப்பட்ட பொழுது அதில் சுந்தரலிங்கமும் சேர்ந்திருந்தார். இதை ஆதரித்து தேசியத் தமிழர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்ட ஒரு கோஷ்டி கொழும்பு நகரமண்டபத்தில் ஓர் கூட்டம் கூடியது. அந்த நேரத்தில் பிளவுக்கு முன் பொன்னம்பலத்தின் தலைமையில் இயங்கிய தமிழ் காங்கிரஸ் இந்தக் கூட்டத்தைக் குழப்ப நடவடிக்கைகள் எடுத்து குழப்பியும் விட்டது.

கூட்டத்துக்கு வந்த மக்கள் பலவாறு கலைந்து, ஒரு சிலர் மண்டப முன்றிலில் புற்றரையில் பொன்னம்பலத்தைச் சூழ்ந்துகொண்டு நின்றனர். இதை எழுதும் நிருபர் மேல் வீட்டில் நின்று காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். தன்னைச் சூழ்ந்து நின்றவர்களுக்குப் பிரசங்கம் வைத்துக்கொண்டு நின்ற பொன்னம்பலம், சற்றுத் தொலைவிலே நின்று Rank Organisation என்னும்ஸ்தாபனத்தார் இந்தக் காட்சியை சினிமாப் படம் எடுத்துக்கொண்டிருந்ததைக் கண்டுவிட்டார்.

உடனே பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்து 'தூக்கடா, தூக்கடா' என்று அவசரப்படுத்தினார். அவர்களுக்கு விளங்கவில்லை. 'என்னைத் தோளிலே தூக்கடா, படமெடுக்கிறார்கள்' என்றார். உடனே தோளிலே தூக்கப்பட்டார். 'ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்கு ஜே!' என்ற கோஷம் எழும்பியது. இந்தக் காட்சி படப்பிடிப்பில் நுழைந்து உலக நாடுகளில் காண்பிக்கப்பட்டிருக்கும். அது போதும், தூக்கினமக்கள் எக்கேடு கெட்டாலென்ன!

இதுதான் ஜீ. ஜீ. பொன்னம்பலம்!


**இ. போ. ச.**

ஜெர்மன் பயிற்சிப் பாடசாலையில் சேர்க்கப்படுவதற்கு நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சை

**அக்டோபர் 1966**

மேற்படி பரீட்சைக்கென்றே தயாரிக்கப்பட்டுள்ள

★ எண் கணிதம் ★ தமிழ் பாஷை ★ ஆங்கிலம்
★ தொழில் நுட்ப விவேகப் பரீட்சை
★ படம் வரைதலில் உளச்சார்பறிசோதனை

ஆகிய பாடங்களின் கடந்த கால வினு விடைகளும் எதிர்பார்க்கக் கூடிய வினு விடைகளும் அடங்கிய

**ஒரே பயிற்சிக் கோவை**

(ஆங்கிலம் / தமிழ்)

**விலை ரூ 5/-**

விபரங்களுக்கு! அதிபர்
சர்வகலாசாலை போதனு கழகம்
540, மருதானை வீதி, த. பெ. இல 1079
கொழும்பு 10.
தொலைபேசி: 91699

# மலையக மக்களும் இ. தொ. கழகமும்

அண்மையில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மூன்ருவது மாநாட்டையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

மொழிவழித் தொழிற் சங்கக் கோட்பாடு இன்று முழுமை பெற்ற ஒன்ருகி விட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பொதுத் துறையில் முளைவிட்ட இக்கோட்பாடு இன்று பரந்து விரிந்து வளர்ந்திருக்கிறது, தனியார் துறையிலும் பெரும் பகுதியை ஆக்கிரமித்திருக்கும் மொழிவழித்தொழிற் சங்கக் கோட்பாடு மலையகத்திலும் செழித்து வளர்ந்து வருகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அட்டன் நகரில் விரல்விட்டு எண்ணக்கூடிய உறுப்பினருடன் ஆரம்பிக்கப்பட்டது இலங்கைத் தொழிலாளர் கழகம். இன்று மலையகத்தில் உள்ள பெரிய தொழிற் சங்கங்களில் ஒன்ருக கணிக்கப்படும் நிலைக்கு கழகம் வளர்ந்துவிட்டது.

குறுகிய கால எல்லைக்குள் கழகம் அடைந்திருக்கும் இம்மாபெரும் வளர்ச்சிக்கான காரணங்களை சற்று பின்நோக்கிப் பார்க்கையில் ஒரு உண்மை தெளிவாகத் தெரியும். மலையக மக்களை ஆண்டாண்டு காலமாக வழி நடத்தி வந்த இயக்கங்கள், இயக்கம் வளர்த்து இன்பங் கண்டனவே தவிர மக்களின் குறை போக்க முயன்றதாக அவர்களின் வரலாறு கூறவில்லை. இன்றும் கூட பழம் பெரும் சங்கங்கள் என்று கூறிக்கொள்ளும் காங்கிரஸ் இயக்கங்கள் இரண்டும் தொழிலாளரின் வேதனை துடைக்க முயல்வதாகத் தெரியவில்லை.

## காங்கிரசார் கவலை

மலையக மக்களின் விருப்பத்திற்கு மாருக எத்தனை இலட்சம் பேரை நாடு கடத்தி கிடைத்திருக்கும் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று ஒரு காங்கிரசின் தலைவர்கள் கவலைப்படுகிருர்கள். அடுத்தவர்களோ தங்கள் பலப்பரீட்சையைக்காட்டி எதனை பெறலாம் என்ற கவலையில் இருக்கிருர்கள். இந்த இலட்சணத்தில் தான் காங்கிரஸ் இயக்கங்கள் மலையக மக்களை வழி நடத்தி வந்தன—வழி நடத்துகின்றன.

ஆனல், இலங்கைத் தொழிலாளர் கழகம் மலையக மக்களின் குறைகளைத் தெரிந்து அவர்களுக்கு வேண்டியதை வேண்டிய நேரத்தில் செய்து வருகிறது. சிறிமாவோ—சாத்திரி உடன்படிக்கை ஏற்பட்ட நேரத்தில் மலையக மக்களின் பிரதிநிதித்துவ இயக்கங்கள் என்று கூறிக் கொள்ளும் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் முதலில் செய்வதறியாது மருண்டன. இ. தொ. கழகம் உடன்படிக்கையின் தீமைகளைச் சுட்டிக்காட்டி முந்திக் குரல் கொடுத்தது. கழகத்தை பின் பற்றியே ஏனையவர்கள் கருத்து வெளியிட்டார்கள்.

## பறக்கும் தலைவர்கள்

கழகம் அன்று குரல் கொடுக்கத் தவறியிருந்தால் சிறிமாவோ—சாத்திரி உடன்படிக்கையில் உள்ள தீமைகளைத் தெரிந்துகொண்டும் காங்கிரஸ் இயககங்கள் வாழாவிருந்திருக்கலாம். இன்று இ. தொ. காங்கிரஸ் இவ்வுடன்படிக்கையை அமுல் நடாத்த வேண்டுமென்பதில் காட்டும் வேகம் முன் கூறிய கருத்தையே வலியுறுத்துகிறது. எப்படியும் மலையகம் வாழ் ஏழைத் தொழிலாளர்களை நாடு கடத்திவிட வேண்டுமென்பது தான் இ. தொ. காங்கிரசினரின் இன்றைய ஒரே நோக்கம். அண்மைக் காலத்தில் இ. தொ. காங்கிரஸ் தலைவர்கள் பறந்து திரியும் வேகம் இந்த உண்மையை மறுப்புக்கு இடமின்றித் தெளிவுபடுத்துகிறது.

சிறிமாவோ— சாத்திரி உடன் படிக்கை பற்றி ஜ. தொ. காங்கிரசினர் இன்று அக்கறை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இவர்களைப் பொறுத்வரையில் மலையக மக்கள் நாடு கடத்தப்படுவது பற்றியோ அல்லது பிரசாவுரிமை பெறுவது பற்றியோ அக்கறையில்லை. அவர்கள் முன் இன்று எழுந்து நிற்பது ஒரேயொரு பிரச்சினை தான். எப்படியும் இ. தொ. காங்கிரசின் செல்வாக்கை முறியடித்துவிட வேண்டும் என்பது. இதற்காகவே தான் இன்று

பூங்குன்றன்

விசேட வாழ்க்கைப் படிப் போராட்டம் கூட வேகமாக முன் வைக்கப்பட்டது.

இ. தொ. கழகம் மலையகத்தில் தலைமைப் போராட்டம் நடத்தவில்லை. மலையகம் வாழ் தமிழ் பேசும் மக்கள் தமிழ் பேசும் மக்களாகவே வாழவேண்டும் என்று விரும்புகிறது. மலையக மக்களுக்கு நன்மை பயக்கும் விடயத்தை யார் செய்ய முனைந்தாலும் அதனை ஏற்றுப் பின் நிற்க கழகம் தவறியதில்லை. அண்மையில் நடைபெற்ற விசேட வாழ்க்கைப் படிப் போராட்டம் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஜ. தொ. காங்கிரஸ் என்ன நோக்கத்துடன் வாழ்க்கைப்படிப் போராட்டத்தைத் தொடக்கியிருந்தாலும் கோரிக்கை நியாயமானது என்பதை உணர்ந்த கழகம் அப் போராட்டத்தில் கலந்து கொண்டது. அத்துடன் கழகம் தனது கடந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போதும் இக் கோரிக்கையை வலியுறுத்தியிருந்தது.

விசேட வாழ்க்கைப் படிப் போராட்டத்தைக் கழகம் ஆதரித்தது போலவே, ஒரு ரூபா சம்பள உயர்வையும் ஆதரிக்கிறது. இதற்காக ஒரு போராட்டம் நடைபெற்ருலும் கழகம் அதனை ஆதரிக்க தவறமாட்டாது. ஆனல் விசேட வாழ்க்கைப் படிப் போராட்டத்தை ஜ. தொ. கா. ஆரம்பித்தது என்ற காரணத்திற்காக இ. தொ. கா. அதனை எதிர்த்தது. சில சந்தர்ப்பங்களில் இப்போராட்டத்திற்கு எதிரான முறையில் கருங்காலி நடவடிக்கைகளிலும் மறைமுகமாக ஈடுபட்டது. இம் முறையை கழகம் எதிர்க்கிறது.

சிறிமாவோ— சாத்திரி உடன் படிக்கை பற்றி அன்று முதல் இன்று வரை ஒரே கருத்தைக் கொண்ட ஒரு மலையகத் தொழிற்சங்கம் உண்டு என்ருல், அது இ. தொ. கழகமே தான். தமிழ் பேசும் மக்கள் மீது அக்கறை கொண்டிருப்பதாக கூறிக் கொள்ளும் இயக்கங்கள் சில இதுவரை இதனையிட்டு தமது கருத்தை வெளியிடாது இருக்கின்றன. இந்த வகையில் குறிப்பிடக் கூடியதாக இருப்பது யாழ்ப்பாணப் பிரதிநிதியின் பொ. கட்சி முன்னர் மலையகத் தமிழ்ப் பாட்டாளிகளின் உரிமைக்கு உலை வைத்தவர்களும் இவர்களே. இன்று வாய்மூடி மௌனியாக இருப்பவர்களும் இவர்களே.

உண்மையில் மலையகத் தமிழ் பாட்டாளிகளின் உரிமைக்காக, உயர்ந்த வாழ்க்கைக்காக உழைத்து வருபவர்கள் இ. தொ. கழகத்தினரும் அது சார்ந்த தமிழரசுக் கட்சியினரும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

## ‘தீபம்’ ஆசிரியரின் இலங்கைச் சுற்றுலா

இன்று (13-9-66) காலை 11.30 மணிக்கு இந்தியன் ஏயர்லையின்ஸ் விமான மூலம் இலங்கை வந்துசேரும் ‘தீபம்’ ஆசிரியர் திரு. நா. பார்த்த சாரதி (மணிவண்ணன்) இத்திங்கள் 27ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார். அவர் இலங்கையில் தங்கியிருக்கும் நாளில் மலைநாடு. மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் விரிவான முறையில் சுற்றுப்பிரயாணம் மேற்கொள்வார். திரு. நா. பார்த்தசாரதியின் இலங்கைச் சுற்றுலா ஒழுங்குகள் பின்வருமாறு அமையும் என்று அவரை இலங்கைக்கு அழைத்துள்ள ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்கள இலக்கியமன்றச் செயலாளர் அறிவித்துள்ளார்.

13-9-66 மாலை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறும் ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தினரின் பாரதி விழாவில் சிறப்புரை நிகழ்த்துவார்.

14-9-66 மாலை வட கொழும்பு இந்து பரிபாலன சபையினரின் பாரதிவிழா.

15-9-66 காலை பேராதனை, கண்டி ஊடாக நுவரேலியா புறப்படல். அன்று மாலை நுவரேலியாவில் வரவேற்பு.

16-9-66 காலை வதுளையில் உள்ள பழம்பெருமை மிக்க நரங்கலை ஸ்ரீ கதிர்வேலாயுதசாமி கோவில் திருப்பணி வேலைகளை ஆரம்பித்து வைத்தல். மாலை மலையக கலை இலக்கிய மன்றத்தினரின் வரவேற்பு.

17, 18-9-66 மட்டக்களப்பு எழுத்தாளர் சங்க பொதுக்கூட்டத்திலும், வரவேற்பிலும் கலந்துகொள்வார்

19 9-66 காலை அம்பாறையிலிருந்து விமான மூலம் யாழ். நகர் புறப்படுதல். மாலை யாழ். இலக்கிய வட்டக் கூட்டம்.

20-9-66 மாலை சுன்னாகம், கைதடி ஆகிய இடங்களில் நடைபெறும் கூட்டங்களில் சிறப்புரை.

21-9-66 மாலை யாழ்ப்பாணத்தில்.

22-9-66 நயினாதீவு.

23-9-66 மீண்டும் கொழும்பு திரும்புதல்.


24-9-66 மாலை கொழும்பு விவேகானந்தசபை.

25-9-66 மாலை நீர்கொழும்பு இந்துவாலிபர் சங்கம்.

26-9-66 மாலை ‘மகாகவி’யின் குறும்பா கவிதைத் தொகுதி, ‘போட்டிக் கதைகள்’ சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா கொழும்பில்.

27-9-66 நண்பகல் தாய் நாடு திரும்புதல்.

சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிருர்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி ஸ்பெஷல்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,

62, மெசேஞ்சர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி : 2651

# அலைகடல்தான் ஓயாதோ?

"செங்கை ஆழியான்"

வேதனை என்பது என்ன? உருவமற்ற ஓர் உணர்விற்கு அவன் உருவமாக இருந்தான். நம்பிக்கைவறட்சிகளும், ஏமாற்றங்களும், இழந்து போன வாழ்வும், இனிக் கிடைக்காது என்ற உணர்வும் சேரும் போது... அவை இணைந்து குமையும் போது.

அவனுக்குச் சிரிக்கத் தெரியாது; அழத்தான் தெரியும் கண்களால் நீர் சொரிந்து அழத்தான் தெரியும்.

எழுத்திற்கு முதல் நாள் இரவு-

வீடே களைபூண்டிருந்தது. வருகிறவர்களும் போகிறவர்களுமாக ஒரே கும்மாளம்.

ஆச்சி அங்கும் மிங்கும் அலைந்து கொண்டிருந்தாள். சாரதா வருகிறவர்களை உபசரித்துக் கொண்டிருந்தாள். ஈஸ்வரி அறையை விட்டு வெளியே வர வெட்கப்பட்டுக் கிடந்தாள்.

வரப்போகிற புதியதொரு வாழ்வின் இனிய நினைவுகளை முன்கூட்டியே மனக்கண்ணில் காண்கின்ருளோ? இரவெல்லாம் பகலாகக் கொண்டவனுடன் கதை பேசும் நாட்களை எண்ணி மகிழ்கிருளோ?

நாகலிங்கத்தின் தங்கை தான். எவ்வளவு பெரியமாற்றம். திருமணம் என்ற வார்த்தை ஓர் இளம் பெண்ணை இரண்டு மூன்று வாரத்துள் மாற்றி விட்டது. முகத்திலே ஒரு வகைப் பூரண கவர்ச்சியும், நடையிலே ஒரு வித தயக்கமும் ஏறி நாணிக்கிடந்தாள், அவள்.

அவனுடைய வருங்கால மனைவியும் இப்போது, ஈஸ்வரிபோலத் தான் இருப்பாள், என அவன் எண்ணினன். அவளது இதய பீடத்தில் தான் ஏறி அமர்ந்திருப்பதாக நினைவு எழுந்தது. தன்னேடு நடத்தப் போகிற இனிய வாழ்வின் நினைவுகளில் அவள் பூரித்து நிற்பாள் என அவன் நினைத்தான்.

நாளை அவனைக் காணலாம்;

பரம்நில்லை ஏதேதோ அலுவல்களாகத் திரிந்தான். ஆனல், அண்ணரை அவன் வந்ததற்குக் காணவில்லை.

'நில்லை, அண்ணை எங்கே?'

'இன்டைக்கு முழுவதும் நான் காணவில்லை. அலுவலாத்திரிவார்...'

அடுத்த நாள் காலை எழுத்திற்காகப் பெண் வீட்டிற்குப் புறப்படும் போதுதான் அண்ணைக் கண்டான். அண்ணனும் அவன் எதிர்பார்த்த அளவு தன்னேடு பேசவில்லை என்பதை அவன் உணர்ந்தான், அப்போது மாப்பிள்ளையாகக் காரில் ஏறியபோது அதை அவன் குறையாக எண்ணவில்லை.

இப்போதுதான் தெரிகிறது. அண்ணன் பேசாததற்குரிய காரணம். குற்றமுள்ள நெஞ்சு நம்பியவனை ஏமாற்றிய நெஞ்சு. கல் நெஞ்சு!

"என்ன மாப்பிள்ளை, வெட்கப்படுகிறீர். நிமிர்ந்து உட்காரும்..."

பெண்ணின் மாமன் சுப்பிரமணியத்தின் குரல்; கலகலப்பாக அவர் பேசினர். கலகலப்பை ஏற்படுத்த அவர் முயன்றர் போலவிருக்கிறது. அவன் வெட்கப்படாமல் மாப்பிள்ளை போலத்தான் உட்கார்ந்திருந்தான். பேசவேண்டும் என்பதற்காக சுப்பிரமணியம் பேசினர், போலும்.

காருக்குள்ளிருந்த தாகர் இரத்தினத்திற்கு வியர்த்துக் கொட்டியது; அதிகாலையின் வெம்மை யற்ற காற்றின் தாக்கம் தாகருக்கு ஒத்துக் கொள்ள வில்லையோ? இரவு முழுவதும் கலகலப்பாகப் பேசியவர் இன்று காலை எப்படி யடங்கினர்?

கார்கள் நகர்ந்தன.

மெயில் விரைந்து கொண்டிருந்தது நாகலிங்கம் வெளியே வெறித்துப் பார்த்தான். இருள். இருள். மின்மினிகள் கூடவா இல்லை? பற்றைக் காடுகள் குட்டைப் பேய்களாகக் குந்தி இருந்தன.

பாலம் ஒன்றின் மீது கடகட வென்று மெயில் விரைந்தது. கண்களின் முன்னே பாலத்தின் பக்க இரும்புப் பாளங்கள் இடை விட்டு விரைந்தன. பாலத்திற்குக் கீழே நதியின் மெல்லிய சலசலப்பு.

தாரமும், குருவும் தலைவிதி என்பார்கள்.

குரு பிழைத்தால் வாழலாம். தாரம்பிழைத்தால்...?

ஒன்ருேடு இணைந்து, ஒன்றிற்காக வாழ்ந்து, ஒன்ருேடு அழிவது தான் நமது இல்லறம்.

ஒருவனுடைய வாழ்க்கை, ஒரு குடும்பத்தின் வாழ்க்கையின் நிறைவு இல்லாளைப் பொறுத்தே அமைகின்றது. பணம் இன்று வரும் நாளை போகும் மனைவி...? ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொண்ட உள்ளங்கள் இணைந்தால்...

அவன் கற்பனை செய்த வாழ்வின் நிழல்கள் கானலாகத் தோன்றின.

அவன் உழைப்பதை மனைவியிடம் கொடுத்து விடுவான். அவளே எல்லாவற்றையும் நடத்துவாள். அவனுக்கு ஒரு கவலையுமில்லை. 'அது இல்லை' 'இது இல்லை' என்று அவள்கூறமாட்டாள்.

புன்னகைதான் அவளுடைய உதட்டில் என்றும் கொஞ்சும். கவலையை அவள் முகத்தில் அவன் காணமாட்டான். முகம் கழுவித் திலகமிட்டு, பின்னலிட்டு அவனுக்காக அவள்காத்து நிற்பாள்.

அவளை அடிப்பாதத்திலிருந்து உச்சிவரை அவன் ஏற விறங்கப் பார்ப்பான். அவள் குமைந்து போவாள்.

'என்ன இது...' என்று சிணுங்குவாள், அவள்.

'நீ எவ்வளவு அழகாக இருக்கிருய்...?

அப்போது அவள் முகத்திலே படரும் பிரகாசமான அப்புன்னகையோடு, அவள் கன்னத்தில் சுட்டு விரலால் தட்டுவான்.

அவள் இடம் விட்டு அசைய, அவள் கருநாகம் பற்றி அவன் இழுப்பானே? அப்போது உடல் முன்னே வளைய, தலை பின்னே சாயும் அழகை அவன் ரசிப்பான்.

'விடுங்களேன்... ஆராவது பார்த்தால்...'

அவள் செய்வது அவனுக்குப் பிடிக்கும். அவன் செய்வது அவளுக்குப் பிடிக்கும். இருவரும் ஒன்றையே செய்வார்கள்.

'இன்று நல்லூருக்குப் போவமா...? தீர்த்தமாம்...' என்று அவளை அவன் அழைப்பான்.

'நானும் உங்களிடம் கேட்கத்தான் இருந்தன். போவம் ... வெளிக்கிடவா...?' என்று புறப்படுவாள், அவள்.

அவன் மனைவிக்கு அவனது குடும்பத்தாரிடம் மிகுந்த அன்பு அவனுடைய ஆச்சியுடன் ஒட்டிக் கொள்வாள். 'மாமி' என்று அழைக்கும் போது ஆச்சி பூரித்துப் போவாள்.

'என்ன இருந்தாலும், என்னுடைய கடைசி மருமகள் தான்...' என்று ஆச்சி பாராட்டுவாள்.

மாலையிலே அவர்கள் வெளியே போவார்கள்; கோவிலுக்குப்போவார்கள்; சினிமாவிற்குப் போவார்கள்.

அவனது கரத்தைத் தனது மடிமீது எடுத்து வைத்து, விரல்களை எண்ணுவாள், அவள்.

'ஐந்து விரல்கள் தானு?...' என்பான், அவன்.

'போங்கள்...' என்று கரத்தை ஒதுக்கி விடுவாள்,

அவள் மடியில் சிரம் வைத்துப் படுத்துக் கிடப்பான், அவன், சொர்க்கத்தின் மடியில் கிடப்பது போன்ற பிரமை; இனிமை. அவனது நெற்றியில் புரளும் மயிர்க் கற்றையை அவள் தனது இடது கையால் அலைவாள்; அவளது மறு கரம் அவன் மார்பில் கிடக்கும். மார்பில் கிடக்கும் அவள் வலக் கையின் வளையல்களை அவன்; அசைத்து, இழுத்து, வளைந்துக் குறும்பு செய்வான்.

'சரியான...பவா... என்று நகைப்பாள், அவள்.

'அப்படித்தான்!' என்பான், அவன்; 'கால் நோகுதா...?'

'இல்லை என்பதற்கு அடையாளமாக அவள தலை ஆடும்; எனினும், அவன் தலையைத்தூக்கி எழ முயல்வான்; அவளது இடக் கரம் அவன் நெற்றியை அழுத்தி மறுக்கும்.

இன்னெரு நாள் (தனிப்பற்றி)

ஏதோஒரு கோபத்தில் அவளுக்கு அவன் அடித்து விடுவான் அவள் கண்கள் கலங்கி, சிவந்து, படுக்கையில் கிடந்து விம்முவான். அவன், 'குஞ்சு' என்றழைத்து' அவள் கன்னத்தைத் தடவித் தேற்றுவான்.

அவன் மார்பில் அவள் முகம் புதைத்து...

அவன் கற்பனை மனைவி அவனுக்குக் கிடைக்கவில்லை.

எல்லாம் முடிந்து விட்டன. அவன் மகிழ்வோடு இருந்த கடைசி நேரமும் அது தான். உள்ளம் நிறைந்த மகிழ்வோடு, எதையோ விரும்பி எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த கடைசி வேளையுமது தான்.

மேசையின் இரு புறங்களிலும் குத்துவிளக்குகள் இரண்டு சுடர்விட்டு எரிந்தன. பெரிய மேசை அது. அவன் ஒரு புறத்தில் அமர்ந்திருந்தான். பக்கத்தில் விவாகப் பதிவுகாரர் இருக்கிருர்.

சீதனம் பேசி எழுதியாகி விட்டது.

சீதனத்தைப் பற்றி அவனுக்கு ஒருவித எண்ணமில்லை. ஒருவன் உழைப்பதை உல்லாசமாக வாழாமல், மிச்சம் பிடித்துச் சேர்த்து வைத்து ஒருவனுக்குக் கொடுக்கிருன். அவனுவது அனுபவிக்கின்ருனு? அவனும் இன்னெருவனுக்காகச் சேர்த்து வைக்கிருன்.

சீதனமதுதான்! வாழ உதவாத, வாழத் தேவையற்ற, வாழவிடாத ஒன்று.

உழைப்பவன் வாழ வேண்டும். அவனவன் தானே உழைத்து வாழ வேண்டும். அவன் உழைப்பதை அவனே செலவழிக்க வேண்டும். இது எங்கே நடக்கிறது?

அவன் கண்கள் ஆவலோடு அலைகளை எதிர்நோக்கின. இன்னும் சிறிது விஞடிகள் தாம். கையெழுத்திட அவள் வரப் போகிருள்.

அவனுடையஆவல் நியாயமானதே.

பரம்நில்லை வந்தான்.

'மச்சான், நானெருக்கா வீட்டுக்குப் போட்டுவாறன்! பெரிய மச்சான் எதையோ எடுத்துக் கொண்டு வரச் சொல்கிருர்...' என்று காதுக்குள் 'குசுகுசு'த்தான்.

அவன் தலையை ஆட்டினன்.

பரம்நில்லை இல்லை; அவனிருந்திருந்தால் ஒரு வேளை அது நடந்திராது. நடந்திருக்காமல் இருந்தால் ஐயோ, எவ்வளவு நன்ருக இருந்திருக்கும்?

விஞடிகள் கழிந்தன. நாகலிங்கத்தின் விழிகளில் ஆவல், இனம்புரியாத நடுக்கமொன்று இதய நரம்புகளைக் குலுக்குகின்றன்து.

அவன் இருந்த இடத்திலிருந்து பெணணிருந்த அறையை நன்கு பார்க்கலாம். அறைக் கதவு தடித்த திரைச் சீலையால் மூடப்பட்டிருக்கிறது.

இதோ திரைச் சீலை அசைகிறது. விலக்கியது பெண்ணின் கையே!

இவள் தானே?

—இருக்காது.

திரைச் சீலையை விலக்கியபடி பல பெண்கள் வெளியே வந்தார்கள். வரும் ஒவ்வொரு கணமும் அவன் மனம் 'இவள் தானே, என்று கேட்கும்,

அவன் மனைவி அவர்களில் ஒருத்தியாகவாவது இருந்திருந்தால் அவன் வாழ்வு ஒரு வேளை நிம்மதியாகக் கழிந்திருக்கும்.

—கடைசியாக அவள் அழைத்து வரப்பட்டாள்.





## அவசியமுள்ளவர்கள் யார்?

☆ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?

☆ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?

☆ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

பண்டார மந்திரச்சாரியார்

அன் கம்பெனி,

தலாவ (வழி) அநுராதபுரம்.



# வெற்றி முரசு கொட்டும் 2-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடேன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்).

● பத்மஸ்ரீ சிவாஜி கணேசன்
● இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்,
தேவிகா, புஷ்பலதா, டி. என். பாலையா, எம். ஆர். ராத
முத்துராமன், ஸ்ரீராம், நாகேஷ் மற்றும் பலர் நடிக்கும்

பாரதமாதா பிக்சர்சாரின்

## பழநி



இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன் திரைக்கதை டைரக்ஷன்: பீம்சிங் வசனம்: சோலைமலை

---

# இப்பொழுதுகாட்சிதருகிறது

செல்லமகால் (கொழும்பு) மற்றும் ஐந்து திரைகளில்

* முத்துராமன், * கே. ஆர். விஜயா,
* நாகேஷ், * சௌகார் ஜானகி மற்றும் பலர் நடிக்கும்

## நாணல்



எதிர்பாருங்கள் எம். ஜி. ஆர். ஜெயலலிதா நடித்த **கன்னித்தாய்**

---

# பெருமையால் பூரிப்படையும் 7-வது புனிதவாரம்!

"சந்திப்போமா இன்று சந்திப்போமா தனிமையில் நம்மைப்பற்றி சிந்திப்போமா
எதிர்காலம் இன்ப மயமாக........"

ஆம்! தமிழ்த்திரையுலகின் எதிர்காலம் இன்பமயமானது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு!

● கருத்துமிக்க கதையமைப்பு! ● உணர்ச்சி மிக்க நடிப்பு! ● உன்னத டைரெக்ஷன்!

சென்ட்ரல் (மருதானை)
ஈரோஸ் (பாமன்கடை) (கடைசி 2 தினங்கள்)
ராணி (யாழ்ப்பாணம்)
ஜோதி (திருகோணமலை) (கடைசி 2 தினங்கள் மட்டும்)
லிபேர்ட்டி (ஹட்டன்) (இன்று மட்டும்)
ஆனந்தா (கம்பளை)
ரோயல் (வவுனியா)
ஈஸ்டர்ன் (சம்மாந்துறை)



சித்ராவின்

## சித்தி

திரைக்கதை வசனம் டைரெக்ஷன்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ம், இலக்கத்தில் 1966-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 13-ந் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.